1780

காத்தவராய நாடகம்

பதிப்பாசிரியர்
கு. இராஜேஸ்வரி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம் தரமணி
சென்னை - 600 113.

காத்தவராய நாடகம்

பதிப்பாசிரியர்

கு. இராஜேஸ்வரி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி. வளாகம், தரமணி,

சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Kathawaraya Nadagam
Editor	:	K. Rajeswari
Publisher & Copy right	:	International Institute of Tamil Studies, C.I.T. Campus, Taramani, Chennai - 600 113.
Publication No.	:	251
Language	:	Tamil
Date of publication	:	1996
Edition	:	First
Paper used	:	TNPL Creamwove 16 Kg.
Size of Book	:	21x14 cms
Printing types used	:	11pt
No. of copies	;	1,000
No. of pages	:	II + 139
Price	:	Rs.30/-
Printers	:	**Shri Vignesh Prints,** 158/5, Lake View Road, West Mambalam, Chennai-33. Ph: 4848486
Subject	:	Folk ballad

அணிந்துரை

டாக்டர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் நன்முயற்சியால் உருவான உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1979 முதல் சுவடியியல் பட்டய வகுப்புகளை நடத்தி வருகிறது. ஆண்டுதோறும் சுவடியியல் பிரிவில் முதுகலைப் பட்டய வகுப்பில் பயிற்சிபெறும் மாணவர்கள் தேர்வு எழுதுவதோடு பதிப்பாய்வேட்டினையும் வழங்கி வருகின்றனர். அங்ஙனம் கு. இராஜேஸ்வரி அவர்களால் பதிப்பாய்வேடாக வழங்கப்பட்ட நாட்டுப்புற நாடகமாகிய காத்தவராய நாடகம் இன்று நூலாக அச்சிடப்படுவதில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பெருமகிழ்ச்சி அடைகிறது.

மக்கள் இலக்கியங்களான பாடல்கள், பழமொழிகள், கதைகள், கதைப்பாடல்கள் முதலியவற்றில் அழிந்தன போக எஞ்சியுள்ள சில இலக்கியங்கள் சுவடிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வகையில் கிட்டிய இந்தக் காத்தவராய நாடகம் என்னும் மக்கள் இலக்கிய நூலினுள் ஆரியமாலை, உகந்தாயி, கறுப்பாயி என்னும் மூன்று பெண்களைக் காத்தவராயன் சந்தித்து அவர்களைத் தன் அறிவாலும், மந்திர ஆற்றலினாலும் மணமுடித்துக் கொள்ளும் நிகழ்வுகள் சுவைபட எடுத்தியம்பப்பட்டுள்ளன. மக்கள் மனதில் இருந்து சுவடியில் ஏறிய இந்நாடகம் காலத்தால் அழிந்துபோகாத வகையில் இன்று நூலாக நிலைநிறுத்தப்படுகிறது.

அரிய நூல்களுக்கு நிதி உதவி வழங்குதல் என்னும் தமிழ் வளர்ச்சி இயக்ககத் திட்ட அடிப்படையில் நிதி உதவி பெற்று இந்நூல் வெளிவருகின்றது. நிதி உதவி நல்கிய தமிழ் வளர்ச்சி இயக்ககம் இயக்குனர் பொறுப்பு பன்னீர்செல்வம் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் மாண்புமிகு நிறுவனத் தலைவர் தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலாளர் பழனிச்சாமி அவர்களுக்கும் நன்றி.

இந்நூலின் அச்சுப்படியினைத் திருத்தம் செய்த ம. வெண்ணிலா அவர்களுக்கும், நூலினைக் கவினுற அச்சிட்டுத் தந்த சித்ரா அச்சகத்தாருக்கும் நன்றி.

இயக்குநர்

பொருளடக்கம்

இயல் ஒன்று	பக்கம்
நுழைவு	
1. முன்னுரை	3
2. நூலறிமுகம்	5
3. பதிப்புரை	9
இயல் இரண்டு	
நூலாய்வு	15
1. நாடகம்	16
2. நாடகம் - தோற்றமும் வளர்ச்சியும்	17
3. நாட்டார் நாடகம் - அமைப்பு	20
4. காத்தவராய நாடகம்	27
5. காத்தவராய நாடக அமைப்பு - நடைச்சிறப்பு சுவைகள் நம்பிக்கை பழக்க வழக்கங்கள்	37
இயல் மூன்று	
நூல்	61
இயல் நான்கு	
முடிவு	122
இணைப்பு	
1. சொற்பொருளகராதி	125
2. சொல்லகராதி	129
3. துணைநூற்பட்டியல்	138

முன்னுரை

ஆய்வுப் பொருள்

சி.வை.தா. உ.வே.சா. வையாபுரிப்பிள்ளை ஆகியோர் சுவடியைப் பதிப்பித்து வெளியிடும் பணியில் ஈடுபட்டுப் பல பதிப்பு நூல்களைத் தமிழ் அறிஞர்களுக்குப் பயன்படும் வகையில் பதிப்பித்து வெளியிட்டு இருக்கின்றனர். சுவடியியல்கண் காணப்படுகின்ற பல அரிய படைப்புகளில் ஒன்றையேனும் பதிப்பித்துத் தமிழுலகத்துக்குத் தர வேண்டும் என்னும் ஆர்வத்தில், முத்தமிழுள் ஒன்றாம் நாடகத்தமிழ்ச் சுவடியாகிய 'காத்தவராய நாடகத்தை' ஆய்வு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் உருப்பெற்றதே இவ்வாய்வு.

ஆய்வு நோக்கம்

சுவடியிலுள்ளவற்றைத் தவறின்றிப் பதிப்பிப்பதும், படியெடுத்த சுவடிகளில் ஆய்வுமுறையில் பதிப்புப் பணியினை மேற்கொண்டு தூய நூலாகப் படைக்க வேண்டுமென்பதும் நோக்கம். 'காத்தவராயன்' என்றழைக்கப்பட்ட காத்தவராய சுவாமியின் வரலாற்றினை நாடக வரலாற்றினோடு ஒன்றி நின்று காத்தவராய நாடகத்தை ஆய்வதும், நாடகத்தில் பயின்றுள்ள வட்டார வழக்குச் சொல்லாட்சிச் சிறப்பினை எடுத்துரைப்பதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு மூலம்

சென்னை அரசினர் கீழ்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள சுவடிகளுள் ஒன்றான 'காத்தவராய நாடகம்' என்னும் சுவடியே இவ்வாய்வின் மூலம். சாமிக்கண்ணு கண்டராலியற்றப்பட்ட 'காத்தவராயன் சண்டை' என்பது, 'காத்தமுத்து நாடகம்' என்னும் அச்சுநூலும், புகழேந்திப் புலவரால் இயற்றப்பட்ட 'காத்தவ்சுவாமிகதை' என்னும் கதைப்பாடல் நூலும் இந்நாடகத்துடன் ஒப்பிட்டுக் காண்பதற்காக எடுத்துக் கொண்ட மூல நூல்களாகும்.

ஆய்வு திட்டம்

இந்த நூல் நுழைவு, நூல் ஆய்வு, நூல், முடிவு என்ற நான்கு இயல்களைக் கொண்டுள்ளன.

நுழைவில், முன்னுரை, நூலறிமுகம், பதிப்புரை என்ற மூன்று தலைப்புகளில், நூலைப்பற்றிய முழுமையான வரலாறு காட்டப்பட்டுள்ளது.

நூலாய்வில், நாடகம், நாடகம் - தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி, நாட்டார் நாடகம் - அமைப்பு - நாட்டர் நாடகங்கள் - சில பெயர்கள், காத்தவராய

நாடகம். நாடகப் பொருள். வழக்காறு. வேறுபாடுகள். காத்தவராய நாடக அமைப்பு. இலக்கிய நயம போன்ற தலைப்புகளில் இந்நூலைப் பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

நூலில். பாடல்கள் வசனங்கள் ஆகியவை சீர். தளை பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது

முடிவில் நூலைப்பற்றிக் கூறப்பட்ட செய்திகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது

நூலறிமுகம்

பெயர்க்காரணம்

'முதனூல் கருத்தின் அளவு மிகுதி
பொருள் செய்வித்தோன் தன்மைமுதல் நிமித்தனும்
இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே'[1]

என்பது நூல் பெயர் அமையும் முறைப்பற்றிக் கூறும் நன்னூல் நூற்பாவாம். இம்முறையில் இந்நூலில் கூறப்பட்டிருக்கின்ற தலைவனின் பெயரைக் கொண்டு இந்நூல் அமைந்திருக்கின்றது. நூலாசிரியர் காத்தவராய சுவாமியைப் பற்றிய செய்திகளை நாடக வடிவில் அமைத்துப் படைத்திருப்பதனால் 'காத்தவராய நாடகம்' என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். நூற்பெயர் வைப்பு முறையைக் கொண்டு முதல் நூலா, வழி நூலா, சார்பு நூலா என்பதை அறிய வாய்ப்பிருக்கிறது. அம்முறையில் இந்நூல் பெயர் அமைந்திருப்பதை அறியமுடிகிறது.

மருத்துவ. மாந்திரீக, மந்திர, சோதிட இலக்கண இலக்கியச் சுவடிகள் எனப் பலவகைச் சுவடிகள் இருப்பினும் முத்தமிழில் ஒன்றாகிய நாடகத் தமிழின் ஒரு படைப்பாய் அமைந்துள்ள 'காத்தவராயன் நாடகம்' என்னும் இச்சுவடி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. நாட்டார் நாடகங்கள் பல வெளிவந்திருப்பினும், நாட்டுப்புறத் தன்மையினையும் 'பறையர்' காலத்தில் படைக்கப்பட்ட 'காத்தவராயன்' காத்தவராய சுவாமியாய், சிறுதெய்வமாய், வழிபடு தெய்வமாய் மாறில வரலாற்றைக் வெளிப்படுத்தும் வகையில் நாடக அமைப்பில் அமைந்த இச்சுவடி ·தேர்ந்தெடுக்கப்பட்டது.

நூல் தோன்றக் காரணம்

பொதுவாக நாட்டுப்புறங்களில் கோயில் திருவிழாக்களில் ஒயிலாட்டம், கரகாட்டம், பொம்மலாட்டம், தெருக்கூத்துப் போன்ற கலைநிகழ்ச்சிகள் நடத்தப் பெற்று வருகின்றன. மனிதன் தன் தேவை பூர்த்தியாகும் போது தன் சிந்தனையைக் கவின் கலைகளைத் தோற்றுவிப்பதிலும் கலைகளை ஆர்வத்துடன் இரசிப்பதிலும் தன் கவனத்தைச் செலுத்துகிறான். தெருக்கூத்தின் வளர்ச்சி நிலையில் சிறுதெய்வங்களின் கதைகளைத் தங்கள் காலக் சூழ்நிலைக்கேற்ப நாடகமாக நடத்திக் காட்டியுள்ளனர்

அவ்வகையில் காத்தவராய சுவாமியின் பெருமையினையும் விடுதலை இயக்கம்' காலமாகையால் ஆசிரியர் தான் நினைத்த செய்திகளை காத்தவராயன்; ஆரியமாலை என்ற பாத்திரங்களின் மூலம் வெளிப்படுத்துவதும், மக்களின் நேரடியான கருத்துக்களைப் பதியவைக்கும் கலை நாடகக்கலை என்பதால் சமூக சீர்திருத்தக் கருத்துகளை எடுத்துக் கூறுவதும் ஆசிரியரின் கடமையாதலால் மக்களை மகிழ்விக்கச் செய்வதற்காக இந்நூல் படைக்கப்பட்டிருக்க வேண்டும்.

நூற்பயன்

'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே'[2] என்பது ஒரு நூல் படைக்கப்படுதலின் பயன் குறித்துக் கூறுகின்ற நன்னூல் நூற்பாவாம். இந்நூற்பாவின் பொருளுக்கேற்ப நால்வகைப்பயனும் பெறப்படும் வகையில் அமைந்துள்ளது இந்நூல்.

நூல் சிறப்பு

நாட்டுப்புற மக்கள் பேசும் எளிய பேச்சுநடையில் அமைக்கப்பட்டிருப்பதும், பள்ளு, குறவஞ்சி இலக்கியங்களைப் போல, வண்ணார், செட்டி, அந்தணர் என்ற பலவகைச் சமூகத்தினரைப்பற்றியும் கூறியிருப்பதும், வட்டார வழக்குச் சொற்களின் சொல்லாட்சிச் சிறப்பும் இந்நூற்கண் அமைந்த சிறப்புகளாம். அதிகமாக 'இன்பச்சுவை' கலந்த நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளமை மக்களை மகிழ்விப்பதற்காகவே படைக்கப்பட்டிருத்தலின் அஃது இந்நூலின் சிறப்பைக் குறைத்து விடுமளவில் இல்லை.

நூலாசிரியர் வரலாறு

"................ விருக்கும் பரசுராம ஆசாரி காத்தவராய நாடகம் எழுதி நிறைவேறியது. வீரபாண்டியிலிருக்கும் வைத்திய நயினார் கையெழுத்து" என்று சுவடியின் இறுதி ஏட்டில் கூறியிருப்பதால் இச்சுவடியின் நூலாசிரியர் பரசுராம ஆசாரி என்பது தெரியவருகிறது. இக்குறிப்பினைத் தவிர நூலின்கண் இவரைப்பற்றிய வேறு குறிப்புகள் இல்லை. வைத்திய நயினார் சுவடி எழுதியவர். நூலாசிரியர் சொல்ல இவர் எழுதியிருக்கலாம். அல்லது நூலாசிரியரின் சுவடியைப் பார்த்து எழுதியிருக்க வேண்டும். இந்நூலில்

"குல்லாப் பரங்கியர் கப்பலில் கொண்டு வந்த நூலுண்டோ [88]

மன்னுந் துப்பாக்கி கொண்டு மல்லப் பெண்கள் தானடந்தார் [78]

பரங்கியர், துப்பாக்கி, ராணுவம் போன்ற சொல்லாட்சிகள் ஆங்கிலேயர் இந்தியாவை அடிமைப்படுத்தி ஆண்ட காலத்தில் ஆசிரியர் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறது.

'சந்திர புஷ்ப நதிக்கரை தன்னிலிருப்பான்
இன்ப தாமிசம் பண்ணாதே' [78]

"இந்த இடக்கான ஆண்டியை ஏண்டி அழைத்து வந்தீர்கள்?

உங்கள் ஈரலைப் பிடுங்கிப் போடப்போறேன்" [81]

என்ற சொற்கள் பழைய இராமநாதபுர மாவட்டத்தைச் சார்ந்த வழக்குச் சொற்களாய் இருக்கின்றன. எனவே, ஆசிரியரும் இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். வடமொழிச் சொற்கள் அதிகம் கலந்திருப்பதால் ஆசிரியர் வடமொழியிலும் புலமை பெற்றவராயிருத்தல் வேண்டும். ஆசிரியர் எழுதிய நூலின் காலமே ஆசிரியர் காலமாகும். எனவே நூலின் காலமாகிய 1930-ம் ஆண்டில் வாழ்ந்தவர் இவ்வாசிரியர் என்பது நூலில் குறிப்பிட்டவழி அறிந்து கொள்ள இயலுகிறது.

நூலின் காலம்

ஒரு நூலின் கருத்தை முழுமையாக அறிய உதவுவது அந்நூலைப் பற்றிய கால ஆய்வேயாம். இலக்கிய வரலாற்றினை முறையாகக் காண்பதற்கும் மொழி வரலாற்றிற்கும் உற்றதுணையாய் விளங்குவது அந்நூலின் காலமேயாம். நூலின் காலத்தை நிர்ணயிக்க அகப்புறச் சான்றுகள் பயன்படுகின்றன.

1. நூலை எழுதிய ஆசிரியரே தம் நூலின் காலத்தைக் குறிப்பிட்டிருப்பது.
2. நூலாசிரியர் பற்றிய குறிப்புகள் பல தெரியவரின் அந்நூல்களைக் கொண்டும் ஆசிரியர் நூலின் காலத்தைக் கணக்கிட முடியும்.

இவ்விரண்டில் 'காத்தவராய நாடகம்' என்னும் இச்சுவடியின் ஆசிரியர் சுவடி எழுதிய காலத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். 'சுக்கில

வருடம் மாசி மாதம் 27 குருவாரம் திருதியை 25 ரேவதி 14 விராமியம் 44, கரசை 26 இந்த சுபதினத்தில்' என்று நூல் செய்த நாள் குறிப்பிடப்பட்டுள்ளது. அஃதாவது கி.பி. 1930 ஆம் ஆண்டில் பிப்பரவரி மாதம் 27ஆம் நாள் இச்சுவடி எழுதப்பட்டுள்ளது. சுதந்திரப்புரட்சியில் நாடு திளைத்திருந்த காலத்தில் இந்நாடகம் படைக்கப்பட்டுள்ளது. சுவடி எழுதிய ஆசிரியரே நூல் எழுதிய காலத்தைக் குறிப்பிட்டிருப்பதால் நூலின் காலமும் நூலாசிரியர் காலமும் தெளிவாகத் தெரிந்து கொள்ள இயலுகிறது.

நூற் கொள்கை

இந்நூலாசிரியர் சக்தியை வழிபடும் இறைபக்தராய் இருத்தல் வேண்டும். அதுபோன்று பெண்களை உயர்த்திப் பேசும் தன்மையை நூல் முழுவதும் காண இயலுகிறது. பாரதி கண்ட புதுமைப் பெண்ணை ஆரியமாலை, கறுப்பாயி போன்ற பாத்திரங்களின் மூலம் காணச் செய்கின்றார். காத்தவராய சுவாமியின் மகிமையை எடுத்துக் கூறுவதைக் காட்டிலும் காளியம்மையின் பெருமைகளை மிகுதியும் எடுத்து விளக்குகின்றார். இந்நூலில் பெண்ணின் பெருமைகளை எடுத்துக் கூறுவதும், மந்திர, தந்திர வித்தைகளிலும் சிறந்திருப்பினும் அவற்றையெல்லாம் விட இறைசக்தி என்பது எல்லாவற்றிலும் மேலானது என்பதும், சாதியின் பேரில் ஏற்றத் தாழ்வினைக் கற்பித்துக்கொண்டு 'தீண்டத் தகாதவர்' என்பவர்களை அந்தனரிலும் மேலானவர் என்ற கொள்கையை நிலை நிறுத்துவதும் ஆசிரியரின் கொள்கையாயிருத்தல் வேண்டும்.

பதிப்புரை

முன்னுரை

இலக்கியம், மருத்துவம், வானசாஸ்திரம், சோதிடம் ஆகியவற்றில் தேர்ந்த பல அரிய படைப்புகளைத் தமிழுலகிற்கு அளித்தவர்கள் பழந்தமிழ்ப் புலவர்கள். அவர்கள் விட்டுச் சென்ற அவ்வரிய படைப்புகள், காலத்தின் கோலத்தினாலும், பேணிக் காப்போரின்றியும், வெம்மையினாலும், வெள்ளத்தினாலும் அழிந்து போயின. அழிந்து போனவையன்றித் தற்காலத்தில் கிடைத்துள்ள சுவடிகளும் அழிந்து போகும் நிலையை அடைந்துவிட்ட நிலையில் அச்சுவடிகளைப் படியெடுத்து, பதிப்பித்து வெளியிடுவதில் தனியார் நிறுவனங்களும், அரசு நிறுவனங்களும் ஆர்வம் கொண்டுள்ளன. அந்நிறுவனங்களுள் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆண்டுதோறும் ஐந்து மாணவர்களை இப்பணியில் ஈடுபடுத்தி சுவடிகளைப் பாதுகாத்தும், பல சுவடிகளை மிக்க கவனத்துடன் பதிப்பித்துச் செம்மையான நூலாகத் தரவேண்டியது இப்பணியில் ஈடுபட்டுள்ளோரின் கடமை என்னும் எண்ணத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நூல், ஆய்வுடன் கூடிய பதிப்பு நூலாய் படைக்கப்பட்டுள்ளது.

பதிப்பு நூல்

சென்னை அரசினர் கீழ்திசைச் சுவடி நூலகத்தில் பல மொழிகளிலும் உள்ள சுவடிகள் திரட்டப்பட்டுள்ளன. அவற்றுள் தமிழ்ச்சுவடிகளே அதிகம் உள்ளன. இலக்கியம், மருத்துவம், சோதிடம், வரலாற்றுச் சாசனங்கள் என்ற பலசுவடிகள் திரட்டப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு திரட்டிய சுவடிகளுள் எண்.டி.479 (No. D. 479 R. 1689) என்ற எண்ணுடைய 'காத்தவராய நாடகம்' என்னும் தலைப்புடைய நாடகத்தமிழ் சுவடியே தேர்ந்தெடுக்கப்பட்ட பதிப்பு நூலாகும்.

அச்சு நூல்

'காத்தவராயன் சண்டை' என்னும் காத்தமுத்து நாடகம்' என்ற அச்சு நூல் ஒன்று உள்ளது. இசைப்பாடல்களால் ஆன நாடக அமைப்பினைப் பெற்றுள்ளது. காத்தவராயனின் பிறப்பு வரலாறு, கதைப்போக்கில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. சான்றாக, ஈசன்படியளக்கச் செல்வது, ஈஸ்வரி சோதனை செய்வது, ஈஸ்வரன் சாபமிடுவது, காத்தவராயனின் ஏடு பிறப்பு நிலை, காத்தவராயன்

மலையாள நாடு தொட்டியத்துச் சின்னானை மந்திர, தந்திர வித்தைகளைக் கொண்டு வெற்றி பெற்றுத் தன் தோழனாக்கிக் கொள்கின்ற நிகழ்ச்சிகள் அச்சுநூலில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இச்சுவடி நூலில் இத்தகைய நிகழ்ச்சிகள் இல்லை. நாரத மகாமுனி கூறிய மூன்று பெண்களை மணம் முடித்தற்கு காத்தவராயன் மேற்கொண்ட செயற்பாடுகள் நாட்டுப்புற அமைப்பில் எளிமையான நடையில் நாடகமாக நடத்திக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்நூலில் காத்தவராயன் போடுகின்ற மாறுவேடங்கள் அச்சுநூலில் இடம் பெறினும் சிறப்பாகக் கூறப்படவில்லை. குறத்தி வடிவெடுத்துக் குறிசொல்லும் நிகழ்ச்சிகள் இந்நூலில் சுவைபடக் கூறப்பட்டுள்ளது. நாடகப் பாத்திரங்களும் அச்சுநூலில் உள்ளதைவிட குறைவாகவே படைக்கப்பட்டுள்ளன. மிகுந்த வட்டார வழக்குச் சொற்களும், வடமொழிச் சொற்களும் கலந்த நடையில் இந்நாடகம் அமைந்துள்ளது. சரணாகதி தத்துவத்தின் அடிப்படையில் காத்தவராய சுவாமியினைப் பணிந்து சுவாமியைக் குல தெய்வமாய், இறைவனாய் கதை மாந்தர் பணிகின்ற நிலையினைக் காண முடிகிறது. ஆகவே பதிப்பாய்விற்கு எடுத்துக் கொண்ட இந்நூல், பதிப்பிக்கப்பட்ட அச்சுநூலிலிருந்து வேறானதே என்பதை ஒப்பிட்டு ஆய்ந்து அச்சாகாத இச்சுவடி பதிப்பாய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

புற அமைப்பு

காத்தவராய நாடகம் என்னும் இச்சுவடி அறுபத்தொன்பது (69) ஏடுகளைக் கொண்டுள்ளது. தற்பொழுது இச்சுவடியில் இறுதி ஏடு இல்லை. முதல் மூன்று ஏடுகள் சிதிலமடைந்து உள்ளன. விளக்க அட்டவணையில் இந்நூல் முற்றும் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏடுகள் வரிசையாக உள்ளன. இருபுறங்களிலும் மரத்தால் ஆன சட்டங்களுடன் காணப் படுகிறது. இச்சுவடியின் நீள அகலங்கள் 37½ x 2½ ஆகும். ஏட்டின் இருபுறமும் ஐந்துவரிகள் எழுதப்பட்டுள்ளன.

அக அமைப்பு

நூல் ஆசிரியர் இறைவணக்கத்தோடு நூலை ஆரம்பித்துள்ளார். இறுதி ஏடும் இறைவணக்கத்தோடு நிறைவு

பெற்றுள்ளது. 'தேவி சகாயம்' என்று 'சக்தி ஈசுவரியின்' அடியனாய் ஆசிரியர் நினைத்து நூலை முடித்திருப்பது அவர் அம்மன் மீது கொண்ட பக்திச் சிறப்பினை உணர்த்துகிறது. பாடல்களும் வசனங்களும் சேர்ந்தே எழுதப்பட்டிருப்பினும், பாடல்களுக்கு தரு, ஏசல்தரு, பவனித்தரு, பந்தல் அலங்காரத்தரு, திபிதை என்று பெயர் கொடுத்தும் பாடல்களுக்கு அடுத்து வசனங்களை, வசனம் என்று தலைப்புக் கொடுத்தும் இருப்பதால் பாடல்களையும் வசனங்களையும் எளிதில் தெரிந்துகொள்ள முடிகிறது. ஏட்டு எண் கூறப்பட்டுள்ளது. ஆனால் பாடல்களுக்கு எண்கள் குறிப்பிடப்படவில்லை.

நடை

இச்சுவடி நாடக அமைப்பில் அமைந்துள்ளதாலும் பல வகை இசைப் பாடல்களைப் பெற்றிருப்பதாலும் பலவகைப் பாட்டு நடை இதனுள் காணப்படுகிறது. தொடையும் கொச்சகக் கலி, கலி விருத்தம், வெண்பா போன்ற பா அமைப்புகளும் தருவில் 'பல்லவி, அனுபல்லவி, சரணம்' என்ற இசையமைப்பிலும் திபிதையில் அறுசீர் விருத்தத்துடன் அமைக்கப்பட்ட சந்த நடையுடன் பாடப்பட்டுள்ளன.

மூலபாடமா?

'ஆசிரியரின் உண்மையான தொடரே மூலபாடம்'[3] என்பது 'மூலபாடம்' என்பதற்குத் தரும் விளக்கம் ஆகும். 'பரசுராம ஆசாரி காத்தவராய நாடகம்' எழுதி நிறைவேறியது என்று கூறியிருப்பதனால் இந்நூல் ஆசிரியரால் எழுதப்பட்ட மூல நூலேயாகும். பிழைகள் மலிந்து காணப்படவில்லை. 'மூலக்கரு'வை வேற்று நூல்களைப் படித்துத் தேர்ந்திருப்பினும் நூலை நாடக அமைப்பில் அமைத்துத் தாம் கூறவந்த கருத்துக்களை வலியுறுத்திக் கூறியுள்ளார். ஆகவே இந்நூல் ஆசிரியரால் படைக்கப்பட்ட உண்மை நூல். 'வீரபாண்டியிலிருக்கும் வைத்திய நயினார் கையெழுத்து' என்ற குறிப்பில் இந்நூலை எழுதிய கையெழுத்தாசிரியர் வைத்திய நயினார் என்பது தெரியவருகிறது. ஆயினும் தான் எழுதிய 'சுவடியின் மூலமே' என்று குறிப்பிட்டிருப்பதனாலும் ஒப்பிட்ட அச்சுநூலைக் கொண்டும் இந்நூல் ஆசிரியரால் எழுதப்பட்ட உண்மையான மூலநூலேயாம்.

பதிப்பில் மேற்கொண்டவை

முதலில் சுவடியின்கண் காணப்பட்ட எழுத்து மாற்றங்கள் சரியான முறையில் திருத்தி அமைக்கப்பட்டு பதிப்பிக்கப் பட்டுள்ளன. ன, ண, ற, ர, ல, ள, ழ போன்ற எழுத்து மாற்றங்களின் திருத்தங்களும் புள்ளி பெறாத எழுத்துக்களில் தேவையான புள்ளி வைத்தும் ெ, ே, ா போன்ற எழுத்துத் திருத்தங்கள் பொருளுக்குத் தகுந்தவாறு மாற்றித் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. எதுகை சரியாக அமைய வேண்டுமென்பதற்காக ற, ர என்ற எழுத்துக்கள் 'த' வாகமாறியுள்ளது.

சுவடியில்	திருத்தம்
விசையப் பிறதாபன்	விசையப் பிரதாபன்
ஆவிலந்தனர்	ஆவிலந்தணர்
அரணைத் தொழுது	அரனைத் தொழுது
வேழ்விக்குப் போய்	வேள்விக்குப்போய்
நீர்கார்த்து ஏகுமென்று	நீர் காத்து
செத்திசேர்	வெற்றிசேர்
குரைதான் கொள்ள	குறைதான் கொள்ள
எதுத்தனர்	எதிர்த்தனர்
யின்னிலம்	இன்னிலம்
யிந்திரன்	இந்திரன்
நெத்தியாய்	நேர்த்தியாய்
ஏண்டா தொகைக்கிறாய்	ஏண்டா திகைக்கிறாய்
யின்னைய தினம்	இன்றைய தினம்
செயிித	செய்த
னாரதர்	நாரதர்
எழுகத்துக்கோட்டை	ஏழு சுற்றுக் கோட்டை
தெருவையரழகு	தெரிவையரழகு
குருநாதா யெங்கைகண்டாய்	குருநாதா எங்கே கண்டாய்
ஆம்பிள்ளை	ஆண்பிள்ளை
கொஞ்சிகிளி	கொஞ்சுகிளி

சாமளி	சியாமளி
விகேழங்கள்	விசேடங்கள்

இவைபோன்ற பல எழுத்துச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தரு, திபிதை, விருத்தம் என்று இசைப்பாடல் அமைப்பில் பாடல்கள் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளமையின் சீர் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. தருவில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்று பிரித்துப் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. 'திபிதை' என்பது இரண்டடிக்கண்ணிகளால் செய்யப்பட்ட இசைப்பாடல் வகை. இந்நூலில் இரண்டு கண்ணிகளைச் சேர்த்து அறுசீர் விருத்தத்தில் எதுகையுடன் கந்தப்பாடல் நடையில் அமைத்துப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. 'தரு' பெரும்பான்மையும் தலைவி, தலைவன், தாதியர் போன்ற கதாபாத்திரங்கள் சொல்லுகின்ற தன்மையில் அமையப் பெற்றுள்ள பாடலுக்கு 'காத்தவராயன் சொல்தரு', 'ஆரிய மாலை சொல்தரு' என்று தலைப்பிட்டு ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறே பாடல்களின் அடியில் உள்ள வசனங்களுக்கும் தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. பாடல்களுக்கு எண்கள் இல்லாமையால் பயன்பாட்டிற்கு எளிமையாய் அமையும் வண்ணம் பாடல்களுக்கு எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நூல் பாடல் அடிகளையும், பிறநூல் மேற்கோள்களையும் நூல் ஆய்வில் எடுத்தாள வேண்டியிருப்பதால் பாடல்களின் எண்கள் அடைப்புக்குறியுடன் கொடுக்கப்பட்டுள்ளன. பிறநூல் மேற்கோள்கள் அடைப்புக்குறி இன்றி கொடுக்கப்பட்டுள்ளன. நாட்டார் நாடக நூல்களுள் ஒன்றான காத்தவராய நாடகம் இயன்ற அளவு 'சுத்தப்பதிப்பு' முறையில் பதிப்புப் பணியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடிக்குறிப்பு

1. நன்னூல், நூ.49
2. மேற்படி. நூ. 10
3. சுவடியியல் - ஓர் ஆய்வு (ஆய்வேடு)

இயல் இரண்டு

நூலாய்வு

நாடகம்

வேளாண்மை செழித்து, வளம் நிறைந்து மனம் மகிழ்வுறும் போது கலைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. வளம் கொடுத்து மனம் நிறையச் செய்த இறைவனோடு இக்கலைகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. இறைவழிபாடு என்பதே ஒருகலை. அனைவரும் ஒன்றாகக் கூடி இன்பத்தை அடையும் போது கலைநிகழ்ச்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

"இயற்கையுடன் இணைந்து வாழ்ந்த மனிதன் அதன் இயல்புகளைக் கூர்ந்து நோக்கி அவற்றுடன் தன்னுடைய உணர்வுகளைக் கலந்து திறமையாகச் செயல் உருவாக்கம் செய்து சில கலைகளைத் தோற்றுவித்திருக்கிறான்"[1] இங்ஙனம் போலச் செய்தல் என்னும் விளையாட்டுணர்வுடன் கலந்து உருவாக்கப்பட்ட கலையே நாடகக் கலையாகும்.

"நாடகம் நாடு + அகம். ஒரு நாட்டின் நிலையைத் தன் அகத்தே நின்று பிரதிபலித்துக் காட்டுவது. உள்ளத்தில் உணர்வது. அகம் நாடுவது என்றபல பொருள்களை உணர்த்தும் இச்சொல் Drama. Play என்ற பிறமொழிச் சொற்கள் உணர்த்தும் பொருளிலிருந்து மாறுபடுகிறது"[2]

"ஒரு நாட்டின் நாகரீகக் கண்ணாடியாய் விளங்குவது நாடகம். உணர்ச்சியைத் தூண்டிவிட்டு உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும் அறிவையும் தூய்மையாய் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலையே நாடகம்"[3]

"நாடகம் என்பது ஒரு கதை தழுவி வரும் பாடலுக்கோ அல்லது விரிவுரைக்கோ தக்கவாறு ஆடுதல்"[4] என்ற அடியார்க்கு நல்லாருரை நாடகம். கூத்து என்ற சொல்லால் படைக்கப்பட்டிருப்பதை உணர்த்துகிறது.

"தூய மனத்தின் வெளிப்பாடு இயல். தூய நாவின் புலப்பாடு இசை. தூய உடலின் இயக்கம் நாடகம்"[5] என்ற தெ.பொ.மீ.யின் கூற்று உடல் இயக்கம் பெறுவது நாடகம் என்பதைத் தெளிவுறுத்துகிறது.

"வாழ்க்கை என்பது இன்பம் துன்பம் முதலான உணர்ச்சிகளின் இடையறாப் போராட்டம். இத்தகைய போராட்டத்தை நம் கண் காண வைப்பதே நாடகம்"[6] எப்பொழுது எங்கே மனிதன் வாழ்க்கைச் சிக்கலில் ஓரளவு விடுபட்டு முன்னேறத் தலைப்பட்டானோ அப்பொழுது அங்கே ஏதோ ஒரு முறையில் நாடக அரங்கம் இருந்திருக்க வேண்டும்"[7]

கவினுறு கலைகள் அறுபத்து நான்கனுள் மனிதன் தான் வாழும் வாழ்க்கையைத் தம் கண்முன் நேரடியாகக் காணவைப்பது நாடகம்.

நாடகத் தோற்றம்

முத்தமிழில் ஒன்றாம் நாடகத்தமிழின் தோற்றம் பற்றிய முடிந்த முடிவான கருத்துக்களைக் காண முடியவில்லை. மனிதன் போலச் செய்யும் இயல்புடையவன். இயற்கையான மன உணர்வுகளுக்கும் உந்துதல்களுக்கும் எழுச்சிக்கும் மனிதன் கட்டுப்பட்டவன். தம்முள் ஏற்படும் உணர்வுகளையும், செயற்பாடுகளையும் வெளிப்படுத்த வேண்டும் என்ற கட்டாயத்தில் ஒலிகள் மூலமும் சைகைகள் மூலமும் கருத்தை வெளிப்படுத்தத் தலைப்பட்டான். மனமுதிர்ச்சியின் பயனாகவும் கலை உணர்ச்சியின் வளமையாலும் காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டு நாடகக் கலைக்கான தோற்றக்கரு உருவாகியிருத்தல் வேண்டும்.

இலக்கியத்தில் நாடகம்

வரலாறு உணர்ந்த காலத்திலிருந்து தமிழை முத்தமிழ் என்று அழைக்கும் வழக்காறு இருந்திருக்கிறது. முத்தமிழைப் பற்றி முதன்முதலில் பரிபாடல் திரட்டு.[8] என்னும் நூலில் ஒரு குறிப்பு காணப்படுகிறது.

"நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும்
பாடல் சான்ற புலனெறி வழக்கு"[9]

தொல்காப்பியர் கூறும் நூற்பாவில் 'நாடக வழக்கு' இன்றைய நாடக வளர்ச்சியில் காணப்படுகின்றவற்றை நேரடியாகக் குறிப்பிடுகிறது.

கலித்தொகை, கூத்தராற்றுப்படை போன்ற சங்க இலக்கிய நூல்கள் நாடகத்தின் கூறுகளைப் பெற்றுள்ளன.

பெரும்பாணாற்றுப்படையிலும், பட்டினப் பாலையிலும் நாடகம் பற்றிக் கூறும்போது, நடன மாதரை 'நாடகமகளிர்"[10] என்றும், நிலாமுற்றத்தில் "நடக்கும் நடனத்தை நாடகம்"[11] என்றும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகின்றார்.

'நடனமே நாடகம்'[12] என்று நடனத்தையே நாடகமாகக் கூறுகிறது திவாகரம். சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் நாடகம் என்ற சொல் நடனம் என்ற பொருளில் ஏழு இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவ்வாறு நடனக்கலையின் வளர்ச்சியில் பலவகைக் கூத்துகள் உருவாக்கப் பெற்றிருக்கின்றன. கூத்தினையே நாடகம் என்று நினைப்பது வழக்காற்றில் உள்ள ஒன்று. இதனை மறுக்கும் மறைமலையடிகளாரின் கருத்து அறிதற்குரிய ஒன்று.

"கூத்தென்பது ஒரு சிலரே ஆடிக்காட்டுவதும் கதையைத் தழுவாது ஒரு செய்யுட் பொருளைக் கண், கை, கால், முகம் முதலான உறுப்புகளின் இயக்கங்களால் ஆடிக்காட்டுவதும் விழாக்காலங்களில் ஒருவரேனும் ஒருசிலரேனும் பாட்டுங் கொட்டுங் கொண்டு ஆடுவது என்பது. நாடகம் என்பதோ முழுவதும் கதை தழுவி வரும் கூத்தாகும்"[13]

கூத்தர், பொருநர், விறலியர், பாணர் போன்றோர் தமிழிசையோடு நாடகத்தை அறிமுகப் படுத்தியிருக்கின்றனர். சிலப்பதிகாரத்தில் பலவகைக் கூத்துக்கள் கூறப்பட்டுள்ளமையைக் காணலாம்.

"உற்ற செயலுணர்ச்சிகளை முதன் முதலில் செய்து காட்டியவர்களைக் கூத்தர் என்று அழைத்தனர்"[14] ஆங்கிலத்திலும் நாடகத்தின் தந்தை கூத்து ஆடுபவனே The Father of the Dramatist was the dancer என்று கூறப்பட்டிருக்கின்றதாக ஆண்டி குறிப்பிடுகின்றார்.[15]

நடனமும் கூத்தும் நாடகப்பயிரின் விதைகளாம். "பாட்டும் அபிநயமும் கலந்த நாட்டியத்தால் விளைந்த இன்பத்தைச் சிறிய அளவால் உணர்ந்த மக்கள் மேலும் நுட்பமான கலைநயத்தினைக் காண ஆர்வம் கொண்டு நாட்டியக் கலையோடு நெருங்கிய

தொடர்புடைய ஒன்றினைக் கண்டு பிடித்தவாறே நாடகத்தின் தொடக்கமாம்"[16] மனிதத் தன்மையில் நாடகத்தின் கரு உருவாகியிருக்கிறது. இங்ஙனம் தோன்றி வளர்ச்சி பெற்ற நாடகக் கலை அக்காலத்தில் மேடையில் ஏறி நடிக்கப்பெறவில்லை. நடன அரங்கத்தினைக் காணும் அளவு, நாடக அரங்கத்தினைக் காண இயலவில்லை.

நாடகத்தில் இடையில் ஏற்பட்ட விழ்ச்சி நிலை

சங்க இலக்கியங்களுக்கு, அஃதாவது சிலப்பதிகார காலத்திற்குப்பின் தமிழ் நாடகத்தில் ஒரு வீழ்ச்சிநிலை காணப்பட்டிருக்கிறது.

தமிழர்கள் நாடகத்தை, நடைபெறும் இடங்களில் கண்டும் கேட்டும் இன்புற்றனரேயன்றி அவற்றைப் போற்றி நூல் வடிவில் ஆக்கம் பெறச் செய்து படிப்பில் கவனம் செலுத்தவில்லை. மேலும் சமணர்களும் பௌத்தர்களும் இயலுக்குத் தந்த சிறப்பினை இசைக்கும் நாடகத்திற்கும் தரவில்லை. "இங்கிலாந்து நாட்டில் 'எப்யூரிட்டன்' என்ற வகுப்பினர் இசையை நாடகத்தை வெறுப்பதைப் போல் வெறுத்து ஒதுக்கினர்"[17] கி.பி. 3 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து பக்தி இலக்கிய காலம் வரை இசை, நாடகங்கள் பற்றிய இலக்கியங்கள் இல்லை என்று சொல்லும் அளவிற்கு நாடகத்தின் பழைய அடிச்சுவட்டை மறைத்துவிட்டனர். சமணர்களின் வெறுப்புணர்ச்சிக்கு அந்தக் காலத்தில் எழுந்த சில இலக்கியப் பாடல்களே சான்றுகளாக அமைகின்றன.

> "பாடகம் சாராமை பார்த்திலார் தாம் விளையும்
> நாடகம் சாராமை நாடுங்கால் - நாடகம்
> சேர்ந்தார் பகைவழித் தீச் சொல்லே - காக்காடே
> தீர்ந்தாள்போல் தீர வரும்"[18]

வாழ்க்கையிலுள்ள துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் சமணர்களும் பௌர்த்தர்களும் சிறப்புக் கொடுத்தமையால் மக்களுக்கு இன்ப வாழ்க்கையில் நம்பிக்கையற்று அவற்றை அடக்குவதிலேயே எண்ணத்தை மாற்றிக் கொண்டனர்.

இந்த வகையில் வீழ்ச்சியுறத் தொடங்கிய நாடகங்கள் இராசராச சோழன் ஆட்சிக் காலத்தில் மறுமலர்ச்சியுறத் தொடங்கின. பெரிய

கோயிலில் வருடந்தோறும் நாடகம் நடத்தப் பெற்ற நிகழ்ச்சியை. பெரிய கோயிலின் வடக்குச் சுவரில் கி.பி. 984ல் இரண்டாவது இராஜேந்திரன் காலத்தில் வெட்டப்பட்ட கல்வெட்டுச் செய்தி கூறுகிறது[13]

சாதாரண மனிதர்களின் அன்றாட வாழ்க்கையைச் சித்தரிக்கும் பள்ளு. குறிவஞ்சி இலக்கியங்கள் நாடக அமைப்பில் தோன்றவே நாட்டுப்புற நாடகங்கள் பல உருவாக்கம் பெற்றுள்ளன.

நாட்டார் நாடகம்

நாட்டுப்புறங்களில் வாழும் மக்கள் 'நாட்டார்' என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் சற்றுச் சூழலுக்கு ஏற்ப இயல்பான வாழ்க்கையை வாழ்பவர்கள். நாட்டுப்புற மக்கள் அனைவரையும் மகிழ்விக்கும் நோக்கத்துடன் எளிய பேச்சு நடையில் எழுதப் பெற்ற நாடகங்களே 'நாட்டார் நாடகங்கள்' எனப்பட்டன.

15ம் நூற்றாண்டுகளில் ஒரு இனத்தார் மட்டும் கண்டு களிக்கும்படியான பள்ளு. குறவஞ்சி. நொண்டி. குளுவம் ஆகிய நாடகங்களும். 18-ம் நூற்றாண்டில் கீர்த்தனைகளும். 19-ம் நூற்றாண்டிலும். 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நாட்டுப்புற மக்கள் மிகவும் ஆர்வத்துடன் பார்க்கின்ற இறைவர்களின் பெருமையையும் பக்தி உணர்வையும் வெளிப்படுத்துகின்ற நாடகங்களும் உருவாக்கம் பெற்றன. தெருக்கூத்துகளாக, உணர்ச்சி மிகுந்த இசைப் பாடல்களாக விளங்கியவை நாடகமாக அரங்கேற்றப்பட்டன. இந்நாடகங்களில். இருபதாம் நூற்றாண்டில் எழுதப்பட்டுள்ள நாடக அமைப்புக் கூறுகளைக் காண இயலாது. ஆனால் இன்றைய வளர்ச்சி பெற்ற மேடை நாடகங்களின் உருவாக்கத்திற்கு முன்னோடியாய் விளங்கியவை நாட்டார் நாடகங்களேயாம்.

நாட்டார் நாடக அமைப்புகள்-கட்டமைப்பு

நாட்டுப்புற மக்களின் வாழ்க்கைச் சூழலுக்குத் தகுந்தவாறு நாட்டார் நாடகங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. இந்நாடகங்களில் சிக்கல் அதிகம் இருப்பதில்லை. இடம், செயல், காலம் ஆகிய மூவகைப் பொருத்தங்களும் முறையாக இந்நாடகங்களில் அமைந்திருக்கவில்லை.

நாட்டுப்புறங்களில் வழிபடும் கிராம தெய்வங்களைப் பற்றிய கதையையோ, இதிகாச, புராணங்களில் மிகச் சிறப்பு வாய்ந்த கதாநாயகர்களின் கதையையோ மக்கள் மனப் போக்கிற்குத் தகுந்தவாறு அமைத்து ஆடல், பாடல் நிறைந்த காட்சிகளாக மக்கள் முன் நடித்தல் காணப்படுகிறது. ஒரே வகையான பாத்திரப் படைப்புக்களைப் படைத்து, தலைமைப் பாத்திரத்தின் சிறப்பையே நாடகம் முழுவதிலும் நடத்திக் கொண்டு செல்லும் தன்மையைக் காண இயலுகிறது. திருவிழாக் காலங்களில் நாடகங்கள் நடத்தப் பெறுவதால் பெரும்பான்மையும் முடிவு மங்கலமாக அமைய வேண்டும் என்ற எண்ணத்திலேயே நாடகங்களைப் படைத்திருக்கின்றனர். இசைக்கு மயங்காதார் உலகில் எவரும் இல்லையாதலால் பெரும்பான்மைப் பாடல்களாலும், சிறுபான்மை உரைநடையிலுமாக இந்நாடகங்கள் எழுதப்பெற்று அவ்வாறே அரங்கத்தின்கண்ணும் அரங்கேறியிருக்கின்றன.

மரபு முறை

நாட்டார் நாடகங்கள் அனைத்தும் ஒருவகையான மரபு முறையைப் பின்பற்றியிருக்கின்றன. காப்புச் செய்யுள், கடவுள் வாழ்த்து, அவையடக்கம், விநாயகர் வருகை, அரசன் கொலு வீற்றிருத்தல், கட்டியங்காரன் வருகை ஆகியவை வரிசையாகப் பெரும்பாலான நாட்டார் நாடகங்களில் காணப்படுகின்றன. இதன் பின்னரே நாடகம் தொடங்கப் பெறுகின்றன. சில நாடகங்களில் இம்முறை மாறி, கடவுள் வணக்கத்தோடு, நாடகக் கதையைத் தொடங்குவதும் உண்டு.

நாட்டார் நாடகங்களில் அங்க, களப்பிரிவுகள் அமைக்கப் படவில்லை. பெரிய நாடகங்கள் காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதிகாச புராணங்களில் சிறுசிறு நிகழ்ச்சிகளை வைத்து மக்கள் விரும்பும் கதைகளுக்குத் தக்கவாறு ஆசிரியர் நாடகங்களை அமைத்துள்ளனர். பலவிதமான நிகழ்ச்சிகளைக் கோர்த்துச் சிக்கல்களை வளர்த்துத் தகுந்த முடிவு கொண்டுவர ஆசிரியர்கள் மந்திரம், தனிமொழி, கனவு, துணை நிகழ்ச்சி, இயற்கை இறந்த நிகழ்ச்சி போன்றவற்றை முக்கிய உத்திகளாகக் கையாண்டிருக்கின்றனர். புராணக் கதைகளை நாடகமாகப் படைக்கும்போது மனம் மகிழ்வுறும் வண்ணம் வெளிப்படையாய் நாடகத்தைப் படைத்திருப்பினும், மக்கள் நல்வாழ்வுக்குத் தகுந்த

நீதிகளையும், அவ்வக் காலத்தில் சமூகத்தில் ஊடாடிக் கிடந்த மூடப்பழக்க வழக்கங்களைச் சுட்டிக்காட்டி அதைக் களைவதற்கான அறிவுரைகளையும், ஆட்டமும் பாட்டும் மட்டும் இறை வழிபாடு அல்ல, ஆன்மீக ஒருமைப்பாட்டுடன் கூடிய அமைதியான வழிபாடே இறைவழிபாடு என்பதையும், சமயக் கருத்துக்களை எடுத்துக் கூறுவதும் நாடகங்கள் படைக்கும் ஆசிரியர்களின் மரபு முறை நோக்கமாய் இருந்திருக்கின்றது.

சுவைகள்

'சுவையற்ற நாடகம் உயிரற்ற உடம்புக்கு ஒப்பாகும்'[20]

மெய்ப்பாடு தோன்றுவதற்கு எண்வகை உணர்வுகளைக் கூறுகிறார் தொல்காப்பியர்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டும் மெய்ப்பா டென்ப"[(21)]

ஒன்பான் சுவையாக்கிக் காட்டுவர் வட நூலார்.

நாட்டார் நாடகங்கள் பெரும்பான்மை இன்பியல் முடிவுகளையும் சிறுபான்மை துன்பியல் முடிவுகளையும் பெற்றுத் திகழ்கின்றன. இன்புற்றுக் களித்திருக்கும் மக்கள் இன்பத்தையே அதிகம் நாடுவர். அதிலும் நகைச்சுவை இல்லாத நாட்டார் நாடகங்களைக் காண இயலாது. விதூடகன், கட்டியங்காரன், நாரதர், விநாயகர் போன்றோர் வரவிலும் அவர்கள் உரையாடல்களிலும் நகைச்சுவை அமையச் செய்கின்றனர். சிக்கல்களை உருவாக்கிக் கதாபாத்திரங்கள் சிக்கலை விடுவிக்க முயலும் செயல்களில், அழுகைச் சுவை புலப்படுகிறது. இறைவர்களைப் பற்றிய புராணக் கதைகளை நாடகமாக்கிக் கூறப்பெறுவதால், இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் அதிகமாக இடம்பெற்று வியப்பு சுவையையும் காண இயல்கிறது. சுடலைமாடன், கருப்பசுவாமி, எசக்கி அம்மன் போன்ற கிராம தேவதைகளின் கதைகளைக் கூறுகையில் இறை உணர்வுடன் கூடிய அச்சச் சுவையையும் இணைத்துப் படைக்கின்றனர். கூறப்பெறும் கருத்து வெளியிடும் முறை, ஆற்றும் செயல், சுற்றுப்புறச் சூழல் ஆகியவற்றுக்குத் தகுந்தாற்போல் நாட்டார் நாடகங்களில் எண்வகைச் சுவைகளுள் நகை, அழுகை, வியப்பு, அச்சம் ஆகிய நான்கு சுவைகளும் இடம்பெறுவதைக் காண முடிகிறது.

மொழிநடை

அக்கால நாடகங்கள் மக்கள் வாழ்வியலை ஒட்டி அமைந்திருந்தது என்பது முன்னர்க் கூறப்பட்ட கருத்து. இவ்வாழ்வியலை ஒட்டிய பேச்சு நடையிலேயே நாடகங்கள் அமைந்திருக்கின்றன. "கிள்ளை தனைப் பிடியுங்கடி 'தாதிமார்களே' அந்தக் கிள்ளைதனைப் பிடியுங்கடி"[31]

"ஆரடா ஏகாலி வாடா வென்றழைக்க".... [47]

என்று அன்றாடம் பேசும் வார்த்தைகளை அரங்கத்தில் மக்கள் முன் எடுத்துரைக்கின்றனர். பெரும்பான்மையும் பாடல்களாய் இருந்ததால் அவற்றிற்கு இசையமைத்து தாள ஒப்பிற்கேற்ப அமைத்திருக்கின்றனர். இசைப்பாடல்கள் தரு, திபிதை என இருவகைப்படும். தருவில், பல்லவி அனுபல்லவி, சரணம் ஆகியவை உண்டு. இராகதாளம் உண்டு. சிந்து, தாழிசை, விருத்தம், வெண்பா ஆகிய பாக்களிலும் பாடல்கள் அமைந்திருக்கும் கருத்து வழு, இலக்கண வழு, கால வழு ஆகியவை மலிந்து காணப்படுகின்றன. உவமைகள், பழமொழிகள் ஆகியவற்றை நாட்டுப்புற மக்களின் வழக்காற்றுக்குத் தக்கவாறு அமைத்து நாடகத்தை மக்கள் ஒன்றிப்பார்க்கும் ஒப்பற்றக் கலையாகப் படைத்துள்ளனர்.

சமூக உணர்வுகள்

பள்ளு, குறவஞ்சி போன்ற நாடக நூல்களும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை போன்ற கீர்த்தனை நாடகங்களிலும் சமூகச் சூழ்நிலையை அறிய முடிகிறது. பொதுவாக நாட்டார் நாடகங்கள் இதிகாச புராணங்களோடு தொடர்பு கொண்டவையாக இருந்தாலும் அக்கால சமுதாயத்தில் காணப்படுகின்ற மக்களையும், மக்களின் உணர்வுகளையும், வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றையும் குறிப்பிட்டுக் காட்டத் தவறவில்லை.

பள்ளு நாடகத்தில் உழவர்களின் சமுதாயமும், குறவஞ்சி இலக்கியத்தில் குறவர்களின் சமுதாயமும், கீர்த்தனைகளில் கீழ்சாதியினரின் சமுதாயமும் நாடக ஆசிரியர்களால் படைத்துக் காட்டப்பட்டன.

சமய உணர்வுகள்

இதிகாச புராணங்களிலுள்ள, மக்களுக்கு விருப்பமான கதை நிகழ்ச்சியை அல்லது பலராலும் போற்றப்படுகின்ற இறை தெய்வங்களாக விளங்குகின்ற கதா பாத்திரங்களை எடுத்துக் கொண்டு, அத் தெய்வங்களின் பெருமைகளை நாட்டுப்புற மக்களின் இரசனைக்குத் தகுந்த நடையில் மாற்றிக் கோவில் திருவிழாக்களில் நாடகமாக நடத்திக் காட்டுகின்றனர். சிறு தெய்வங்கள் எழுந்தருளியுள்ள கோயில்களில் 'கொடை கொடுத்தல்' என்னும் திருவிழா மிகச் சிறப்பாக நடை பெறுகின்றது. அவ்விழாக்களில் எல்லாம் எந்தத் தெய்வக் கோயிலின் முன் நடத்தப்படுகிறதோ அத்தெய்வத்தின் வீர, தீரச் செயல்கள் எல்லாம் நாடக அரங்கில் நடிக்கும் நடிகர்களின் மூலமாக மக்களுக்குக் காட்டுகின்றனர். நாட்டார் நாடகங்களில் எல்லாம் பெரும்பான்மையும் சிறு தெய்வங்களாகிய "திராவிட தெய்வங்களே"[22] அதிகம் இடம்பெறுகின்றன. இந்நாடகங்களில் அத்வைத, துவைத, வசிட்டாத்துவித தத்துவக் கருத்துக்களையோ இந்து சமயக் கோட்பாடுகளையோ காணவியலாது. அச்ச உணர்வுடன் கூடிய தெய்வ வழிபாட்டினைத்தான் காண இயலுகிறது. ஆயினும், நாட்டார் நாடகங்களில் நாட்டுப்புற மக்களின் காவல் தெய்வமாய் விளங்குகின்ற காக்கும் கடவுளரின் பெருமையைக் குறிப்பிட்டு, சமய உணர்வுகளை உயர்த்தத் தவறவில்லை.

நாட்டார் நாடகங்கள் - சில பெயர்கள்

"நாட்டார் நாடகங்களின் பெயர்கள் பலவிதமான முடிவுகளைக் கொண்டுள்ளன." [23]

1. நாடகம் - ஒட்ட நாடகம்
2. விலாசம் - கிருஷ்ண விலாசம்
3. சபா - இந்திர சபா
4. அலங்காரம் - மார்க்கண்டேயர் நாடக அலங்காரம்
5. சரித்திரம் - வல்லாள மகாராசன் சரித்திரம்
6. வாசகப்பா - இரணியன் வாசகப்பா
7. சரித்திரப்பா - சாரங்கதரன் சரித்திரப்பா

என்பனவற்றை நாடக முடிவு கொண்டு அமைக்கப்பட்ட பெயர் பொருத்த நாடகங்களாகத் தொகுத்துக் காட்டியுள்ளார் ஏ.என். பெருமாள்.[23]

மேலும் இந்நாட்டார் நாடகங்களுக்கு ஆசிரியர்கள் பெயர் கொடுத்துள்ள முறைமை போற்றற்குரிய ஒன்று. நாடகத்தின் தலைமைப் பாத்திரங்களாகப் படைக்கப்பட்டிருக்கும் நாயக நாயகியர்களின் பெயரைக் கொண்டோ, முக்கிய நிகழ்ச்சிகளின் அடிப்படையிலோ பாடுபொருளின் அடிப்படையிலோ நாடகத் தலைப்புகள் அமைந்துள்ளன.

1. நாயக நாயகிகளின் பெயர்	-	காத்தவராய நாடகம், பவளக்கொடி நாடகம்
2. முக்கிய நிகழ்ச்சிகளின் அடிப்படையில் அமைந்துள்ள நாடகம்	-	பாண்டவர் சூதாட்ட நாடகம்
3. முரணர்களுடைய பெயர்களும் நாடகங்களுக்குச் சூட்டப்பட்டுள்ளன	-	இரணிய நாடகம்
4. விரதங்களின் பெயர்களை நாடகங்களுக்கு கொடுத்துள்ளனர்	-	சனி வார விரத நாடகம்
5. தத்துவ விளக்கத்துடன் நாடகங்கள் பெயர் பெற்றுள்ளன	-	ஆறாதார விலாசம்
6. நாடகத்தின் மூலத்தைக்காட்டும் போக்கில் சிலவற்றின் பெயர்கள் உள்ளன.	-	பாரதப் போரில் முதல் நாள் சண்டை நாடகம்
7. தலைவனின் முக்கியப்பண்பை விளக்கிப் பெயர் கொடுக்கப் பெற்றுள்ளது.	-	சத்தியபாஷா அரிச்சந்திரா [24]

நாட்டார் நாடகங்களில் சில பொதுத்தன்மைகளைக் காணமுடிகிறது. கதையும் கருப்பொருளும் நாடகத்துக்கு நாடகம் வேறுபடினும் அமைப்பில் ஒரு பொதுத்தன்மை காணப்படுகிறது. அக்காலத்தில் ஜப்பானில் நடத்தப்பட்ட 'ரோ' நாடகங்களைத் தமிழில் உள்ள நாட்டார் நாடகங்களுடன் ஒப்பிட்டுக்காணலாம்.

நாடகத் தலைப்பு, தலைவன் தலைவியர் பெயர்களைக் கொண்டு அமைவது, கதாநாயகன் எல்லா இடங்களிலும் வருவது, கதைத் தலைவியை உயர் குடும்பத்தில் பிறந்தவளாகக் காட்டுவது, நாடக முடிவுகளை மங்கலமாக அமைப்பது போன்ற பொதுத் தன்மைகளைக் காணமுடிகிறது.

எவ்வாறேனும் மனித மாந்தர்களின் இயல்பான உணர்வுகளை இசையுடன், நடனத்துடன், சமயச்சார்புடன் படிப்பதற்காகவும் கேட்பதற்காகவும் எழுதப்பட்டவையே 'நாட்டார் நாடகங்கள்' என்பதில் ஐயமில்லை.

காத்தவராய நாடகம்

காத்தவராயன் பெயராய்வு

'காத்தவன்' 'காத்தான்' 'காத்தய்யன்' 'காத்தமுத்து' காத்தவராயன் என்ற பல பெயர்களுடன் காத்தவராய சுவாமி இந்நூலில் பல இடங்களில் சுட்டப்படுகிறது.

'காத்தவன்' காவல் புரிபவன்[25] என்னும் நிலையில் இப்பெயர் காத்தவராயனைக் குறிப்பிட்டுள்ளது. கிராமங்களில் எல்லைத் தெய்வமாக இருந்து காவல் புரிந்து வருதலால் இப்பெயர் பெற்றிருத்தல் வேண்டும்.

'காத்தய்யன்' - ஒரு கிராம தேவதை[26] என்று குறிப்பிட்டுள்ள இச்சொற்பெயருடன் 'தேவதையாகப் போற்றப்படும் ஒருவனாய் காத்தய்யனைக் காணமுடிகிறது. 'பாரிய காத்தையா' - என்று திருமுருகாற்றுப்படையில் கந்தனை விளக்கக் 'காத்தையா' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். 'காத்தவராயன்' முருகனின் அவதாரம் என்பதை இந்நூலாசிரியரும் பிறரும் ஒப்புக் கொள்கின்றனர். 'கந்தையா' என்ற சொல் 'காத்தையா' என்று மாறி கந்தக் கடவுளாய் வணங்கும் தெய்வமாயிருத்தல் வேண்டும்.

'காத்தான்' - 'காளியால் வளர்க்கப்பட்டவன்'[27] என்று அகராதியில் குறிப்பிடப்பட்டிருப்பினும் அந்தணப் பெண்ணாகிய ஆரியமாலையை மணமுடிக்கச் செல்கையில், பல இடர்பாடுகளில் இருந்தும் காளியால் பாதுகாக்கப்பட்டவன் என்பதே இச்சொல்லுக்குப் பொருத்தமுடையதாயிருக்கிறது.

காத்தமுத்து 'சாமிக்கண்ணுகண்டர்' காத்தமுத்து என்று மனிதப் பெயரின் இயல்பான நிலையை இப்பெயரின் மூலம் குறிப்பிடுகின்றார்.

காத்தவராயன்

"ஆரியமாலை, பொம்மி என்னும் இருமனைவியருடன் மாரியம்மை சன்னதியில் உள்ளவன்"[28] என்று கலைக்களஞ்சியத்தில் கூறப்படுவது ஐயத்திற்கிடமாயுள்ளது. 'பொம்மி' என்னும் பெண் 'மதுரைவீரன்' என்னும் கிராமதெய்வத்தின் மனைவியாக மதுரையின் பல இடங்களிலுமுள்ள கோயில்களில் எழுந்தருளியுள்ளதைக் காண இயலும். 'பொம்மி' என்பது இங்கு சுட்டப்பட்டது காத்தவராயரின் மனைவியன்று.

பல பெயருடன் காத்தவராயன் வழங்கப்பட்டாலும் ஒரு குலத்தினரால் வழிபடும் கடவுளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் நிலையினையே இப்பெயராய்வு உணர்த்துகிறது.

(கம்பராமாயண உத்தரகாண்டத்தில் படைக்கப்படுகின்ற, இராவணனை வெல்லும் பேராற்றல் படைத்தவனாகக் கம்பனால் கூறப்படுகின்ற கார்த்த வீரியன், இக் காத்தவராயனாகவும் இருக்கலாம்.)

வீரம் மிக்கவனாய் மந்திர, தந்திர வித்தைகளில் தேர்ந்தவனாய், மனிதசக்தியையும் மீறிய ஆற்றல் உடையவனாய் காளியம்மையின் அருளால் சிவபெருமானால் படைக்கப்பட்ட கந்த பெருமானின் அவதாரமே காத்தவராயன். நதிக்கரைகளிலும், பூங்காவனங்களிலும், காவல் காக்கும் தெய்வமாய், விண்ணார், மலை சாதியினர் ஆகியோரின் குலதெய்வமாய் ஏற்றுக் கொள்ளப்பட்டவர் காத்தவராய சுவாமி.

கதைச் சுருக்கம்

முனிவர்கள், தேவர்கள் ஆகிய அனைவரையும் அழைத்துப் பரமேசுவரனை அவமதித்து, 'தக்கன்' ஒரு யாகத்தைச் செய்கிறான். அந்த யாகத்திற்குச் சென்ற உமையம்மையையும் அவமதிக்கவே உமாதேவி தக்கனைச் சபித்து விட்டுச் சென்ற பிறகு அங்கு வீரபத்திர சுவாமி தோன்றுகிறார். வீரபத்திரர் தக்கனை வென்று அம்மையையும் அரனையும் அடிபணிந்தார். அரன் ஈசுவரியைப் பூதலந்தனில் போய் அவதரிப்பாய் என்று சொல்ல கடுந்தவத்தை மேற்கொண்டு ஈசுவரியானவள் ஈசனிடம் தக்கன் செய்த யாகத்திற்குச் சென்ற பாவத்தைப் போக்கப் புத்திரன் வேண்டும்; இத்தலத்திலுள்ள பூங்கா, நந்தவனங்களைக் காக்க மகனொன்று

வேண்டுமென்று கேட்க, ஈசுவரிக்கு மகனாய்த் தோன்றுகிறார் காத்தவராய சுவாமி.

நாரத மகாமுனி ஆரியமாலை, கறுப்பாயி, உகந்தாயி ஆகிய மூன்று பெண்களின் அழகைப் பற்றிக் கூறி அவர்கள் மூவரையும் மணக்க வேண்டும் என்று சொல்லுகிறார். காத்தவராயர் ஆரியமாலையிடம், கிளிவடிவு, குறத்தி வடிவு, பண்டாரம் போன்ற வடிவுகளை எடுத்து அவளை வயப்படுத்துகிறார். முதலை வங்கி என்னும் குகையில் வைத்து நாகமுத்து என்பவனைக் காவல் வைத்துவிட்டுப் புறப்படுகிறார். பின் உகந்தாயி என்ற மாணிக்கச் செட்டி மகளிடம் 'செட்டி' வேடமிட்டுச் சென்று அவளையும் மணக்கிறார். கறுப்பாயியுடன் சாவல் சண்டையில் வெற்றிபெற்று எதிர்த்து நின்ற ஏழுகறுப்பரையும் மூர்ச்சையடையச் செய்கிறார். இறுதியில் கறுப்பாயியின் வேண்டுதலுக்கிணங்கி அவர்கள் எழுவரையும் உயிர்ப்பித்து அவர்கள் குலதெய்வமாக வணங்கப்படுகிறார்.

பின்னர் முதலைவங்கியில் வைத்த ஆரியமாலையைத் தன் அன்னையாகிய மாரிமுத்தம்மையிடம் கொண்டு வந்து அவள் தாள் பணிகிறார். மாரியம்மை காத்தவராயருக்கும் ஆரிய மாலைக்கும் திருமணம் நடைபெறும் தேதி சொல்ல ஈசன் முதல் தேவர்கள் அனைவரும் வாழ்த்தத் திருமணம் இனிதே நிறைவேறுகிறது.

நாடகப்பொருளில் வேறுபாடுகள்

காத்தவராய சுவாமி பிறப்பு

சாமிக்கண்ணு கண்டராலியற்றப்பட்ட காத்தமுத்து நாடகத்தில், ஈசன் படியளக்கச் சென்ற வேளையில் அனைத்துயிர்களுக்கும் படியளக்கும் ஈசுவரன் மீது சந்தேகம் கொண்டு, ஈசுவரி ஓர் எறும்பைப் பிடித்துச் சிமிளியிலடைத்து வைக்க மறுநாள் அவ்வெறும்பு வாயில் நொய்யுடன் இருக்க ஈசுவரி பயந்து ஈசுவரனைச் சரணடைய எறும்பிற்கு இன்னல் இழைத்த நீ பூதலந்தனில் பிறந்துவா எனவும், பூதலந்தனில் பூங்காவனங்கள் நதிக்கரைகள் அமைத்து உன் பாவத்திற்கு விமோசனம் தேடிக்கொள் என்றும் சொல்லும் வேளையில் பூங்காவனம் காக்க மகனொன்று வேண்டுமென்று கேட்க சுப்பிரமணியசுவாமியை

ஈசுவரிக்கு மகனாகக் காத்தவராய சுவாமியின் உருவத்தில் பிறக்கச் செய்கிறார்.[29]

சிவ வாக்கியர் போதத்தில் அகந்தை கொண்ட தக்கன் யாகத்தின் மூலம் பெற்ற சக்தியைக் கொண்டு தேவர்களையும் மனிதர்களையும் கொடுமைப்படுத்தியதால் தக்கனை அழிக்க வீரபத்திரனை அனுப்புகிறார் பரமேசுவரன். வீரபத்திரர் தக்கனை அழிக்கும் வேளையில் தக்கன் ஈசனிடம் செய்த தவறுணர்ந்து எல்லையிலிருந்து காக்கும் காவல் தெய்வமாகவும், ஈசன் எழுந்தருளியிருக்கும் கோவில்களிலெல்லாம் தனக்கும் பூசனை வழிபாடுகள் செய்து மக்கள் வழிபடுமாறு செய்ய வேண்டுமென்று கேட்க ஈசனும் அவ்வாறே வரந்தந்து செல்கிறார். அந்தத் தக்கனே காத்தவராய சுவாமியாய் அனைத்துச் சிவத்தலங்களிலும் மாரியம்மைக்குப் பின்னுள்ள சன்னதியில் எழுந்தருளியுள்ளார் என்ற செய்தியை அறிந்துகொள்ள முடிகிறது.[30]

கதைப் போக்கில் வேறுபாடு

காத்தவராயன் நாடகத்தில் பிறப்பு வரலாற்றைக் கூறியபின், சின்னானைத் தோழனாக்கிக் கொண்டு ஸ்ரீரங்கம் செல்லும் காட்சியைக் கூறுகிறார் ஆசிரியர்.

காத்தமுத்து நாடகத்தில் மலையாளநாடு சென்று ஜோகி வேடமிட்டுக் கடையிலுள்ள பொருள்களை எல்லாம் நாசம்பண்ணி, சின்னான் வைத்த மோடி எடுக்க மந்திர தந்திர வித்தைகளைக் கையாண்டு அவனை வெற்றிபெற்றுத் தோழனாக்கிக் கொள்ளும் நிகழ்ச்சியை மிகவிரிவாகவும் சுவைபடவும் எடுத்துக் கூறுகிறார் சாமிக்கண்ணுக் கவுண்டர்.

ஸ்ரீரங்கத்தில் உள்ள ஒரு தாசியை அவள் செய்யும் தாசித் தொழிலை விடுமளவிற்குக் காத்தவராயர் அத்தாசிக்குப் பாடம் புகட்டிவிட்டு ஆரிய மாலையைத் தேடிவருகின்ற செய்தி காத்த முத்து நாடகத்தில் இடம் பெறவில்லை.

கிளிவடிவு, பண்டாரவடிவு, சேவகனார் வடிவு, குறத்தி வடிவு போன்ற வேடங்களைத் தரித்துக் காத்தவராயர் ஆரியமாலையைத் தன்வயப்படுத்துகின்ற செய்திகள் காத்தவராய நாடகத்தில் சுவைபட அழகாகக் கூறப்பட்டுள்ளன.

காத்தமுத்து நாடகத்தில் மூன்று பெண்களை மணக்கின்ற நிகழ்ச்சிகள் சுருக்கமாகவே கூறப்பட்டுள்ளன. காத்தவராய நாடகமான இந்நூலில் மூன்று பெண்களை மணக்கின்ற நிகழ்ச்சிகளை மட்டுமே நாடகக் கதையாகக் கொண்டு மேலும் வளர்ந்துச் செல்கிறது.

காத்தவராய சுவாமி கதையும் பன்னிரண்டு வனங்களுக்குச் சென்று பல அற்புத செயல்களைச் செய்து, கழுமரம் ஏறி மீண்டு, ஆரியமாலையுடன் உகந்தழகி, அன்னமுத்து, கருப்பழகி ஆகிய மூன்று பெண்களுடன் திருச்சிராப்பள்ளியில் இறைவனாக எழுந்தருளியுள்ளதாகப் படைத்துள்ளார்.[31]

காத்தவராய நாடகம், காத்தமுத்து நாடகம், காத்தவராய சுவாமி கதை ஆகிய மூன்று நூல்களும் மங்கலத்துடன் முடிகின்ற இன்பியல் முடிவு கொண்டவை.

சுடலை மாடன், வண்ணாரமாடன் ஆகிய இருவரின் கதைகளையும் இணைத்து உடுக்கடிப்பாட்டில் காத்தவராயன் கதையைப் பாடுவர்.

அத்தகைய கழுமரம் ஏறும் நிகழ்ச்சியை இந்நாடகத்தில் குறிப்பிடாதது ஆசிரியர் தாழ்ந்த குலத்தில் பிறந்த காத்தவராயர், அந்தணர் குலத்தில் பிறந்த ஆரியமாலையை மணக்கும் கலப்பு மணத்தை ஆதரிக்கிறார் என்பதைப் புலப்படுத்துகிறது. 'மனிதருள் பேதமில்லை' என்று நினைத்துக் காத்தவராயன் தண்டனை பெற்று கழுமரம் ஏறும் நிகழ்ச்சியைக் குறிப்பிடவில்லை எனத் தோன்றுகிறது.

கதைக் கருவிலும், கதை முடிவிலும் அனைத்து ஆசிரியர்களும் ஒருமித்த கருத்துடையவராகவே இருக்கின்றனர்.

நாடகப் பாத்திரங்களின் பண்பு நலன்கள்

காத்தவராயன்

நாடகத்தின் தலைமைப் பாத்திரமாகப் படைக்கப்படுபவன் காத்தவராயன் அவன் இறைவனால் படைக்கப்பட்ட தேவகுமாரன். தலைவனாக, மந்திர, தந்திர, வீர ஆற்றல்களில் மிகச் சிறந்தவனாகப் படைக்கப் படுகிறான். நாரத மகாமுனியின்

சொற்கேட்டு ஆரியமாலையின் பேரில் மாறாக் காதல் கொள்கிறான். அவளை மணக்க விரும்புகிறான்.

இந்நாடகத்துள் காத்தவராயனை இறைவனாகப் பார்ப்பதைவிட மனிதனாகப் படைக்கும் இடங்கள் பல.

மகமாரி காத்தவராயனிடம் ஆரியமாலையை மறந்துவிடு என்று சொல்லும் வேளை

ஏதேது சொன்னாலும் எதிர்வார்த்தைப் பேசுகிறாய்
என்ன அவள் மயக்கம் - என்மகனே

என்று கேட்கும் தாய்க்குப்

பூதலம் புகழ்ந்த ஆரியமாலையைப்
புணர்ந்தால் தீரும் மயக்கம் - என்தாயே (21)

என்று கூறி விபூதி பெற்றுச் செல்கிறார்.

காத்தவராயனைச் சிறந்த இசைஞானம் மிக்கவராகவும் காணமுடிகிறது. கின்னரம், வீணை, தம்புரா ஆகிய இசைக் கருவிகளை மீட்டுவதிலும் சிறந்தவராகக் காணமுடிகிறது. அவன் வீணை மீட்டிப் பாடுவதைக் கேட்ட ஸ்ரீரங்கத்தாசியானவள்

"காசுடன் பணமும் வேண்டா முன்கைவீணை ஓசை போதும்"

என்று கூறி மகிழ்கிறாள். இச்சொல்லிலிருந்து அவன் இசை ஞானத்தைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

வண்ணாரநல்லி வீட்டிற்குச் சென்று துணி துவைக்கும் வண்ணானாக மாறும் போதும். பண்டாரமாக நின்று குறி சொல்லும் போதும். குறத்தி வடிவாய்த் தோன்றி குறி சொல்லும் போதும். செட்டியாய் நின்று வியாபாரம் செய்யும் போதும் காத்தவராயனை மனிதனாகத்தான் காண இயலுகிறது.

மூவகைப்பட்ட சமுதாயத்திற்கும் உரியவனாகப் படைத்து அச்சமுதாயங்களுக்கு ஏற்பப் பணியாற்றுவதை விளக்குகிறார்.

காத்த முத்து நாடகத்தில் மந்திரங்களை அறிந்து. தந்திரங்களை உபயோகித்துச் சின்னானை அடக்குகின்றபோது காத்தவராயரின் வீரம் புலப்படுகிறது.

மந்திர தந்திர ஆற்றல்களால் ஆகாதன எல்லாம் இறையாற்றலால் எளிதில் நடந்துவிடும் என்பதும் அந்நாடகத்தில்

உணர்த்தப் பெறுகிறது. காத்தவராயனை இறைபாத்திரமாகப் படைத்தாலும் அவனிடம் மனிதப்பண்புகளே அதிகமாக விளங்குகிறது.

ஆரியமாலை

ஆரியப் பூராசனின் ஒரே மகளாகப் பிறந்து ஏழுசுற்றுக் கோட்டைக்குள் ஏவலரையும் பாவலரையும் அடக்கி ஆண்டு வரும் ஓர் அரசியாகப் படைக்கப் பெறுபவள் ஆரியமாலை. பெண்களின் முன்னேற்றத்தில் விழிப்புணர்வு ஏற்படும் வகையில் இவளை நாடக மேடைமுன் காணவைத்திருக்கிறார் ஆசிரியர். அவரது நூற் கொள்கையினை பெண்ணின் பெருமையைத் தெரிந்து கொள்ள ஆரியமாலை பாத்திரப் படைப்பு ஒரு சான்றாக அமைகிறது.

அரசியாயிருந்தும், வண்ணானாகிய காத்தவராயன் தகாது சொன்ன சொற்களை நினைத்து வருந்திய போதும், பிழை ஏதும் செய்தறியாதபோது இத்தகைய இழிநிலை ஏற்பட்டுவிட்டதே என்று தன் தந்தையிடம் சொல்லும் போதும் இயல்பான பெண்மனத்தைத் காணமுடிகிறது.

காத்தவராயன் பண்டாரமாய்த் தோற்றம் கொண்டு ஆரியமாலைக்குக் குறிசொல்லும் போது அவன் ஏளனமாய்ப் பேசுகின்றான். இடக்காய்ப் பேசும் அந்த ஆண்டியை எல்லைக் கப்பால் துரத்திவிடுங்கள் என்று கட்டளை இடுகிறாள் ஆரியமாலை. இவ்விடத்தில் மிகுந்த கோபங் கொண்ட பெண்ணாகப் பார்க்கச் செய்கிறார் ஆசிரியர்.

குறத்தி சொன்ன குறியைக் கேட்டு வண்ணானைத் தேடிச் செல்லத் துணிகிறாள் ஆரியமாலை. உடனே சேனாபதியை வரவழைக்கிறாள். தாதியராகிய இராணுவத்தை அணிவகுத்து நிற்கச் சொல்லி குதிரை மேலேறிச் செல்கிறாள். ஆரியமாலையின் தலைமையில் அணிவகுத்துச் செல்லும் பெண்களின் துணிவினை ஆங்கிலேயரை எதிர்த்து வீரத்துடன் போரிட்ட ஜான்சிராணி இலட்சுமிபாயின் வீரத்தோடு ஒப்பிட்டு நினைவூட்டுகிறார். ஆரியமாலையும் தாதியினரும் அணிவகுத்துச் செல்கின்ற காட்சியை,

"குதிரைமே லேறுகின்றாள் குச்சலிப்பெண் கொக்கரித்து
அதிர வெடிகள் தானெழும்ப ஆனைமே லேறு கின்றாள்
குணிக்குழல் தோளில் வைத்துக் குமரிப்பெண்கள் முன்நடந்தார்
மண்ணுந்துப் பாக்கிக்கொண்டு மல்லப் பெண்கள் தான்நடந்தார்" (75)

என்ற பாடலடிகள் எடுத்துக் காட்டுகின்றன. இவற்றில் ஆரியமாலையின் வீரத்தைக் காணமுடிகிறது.

உகந்தாயி

காவேரிப் பூம்பட்டிணத்தில் சிறந்த வியாபாரியான மாணிக்கச் செட்டியின் மகள் உகந்தாயி. அவள் ஒசந்தி, ஒகந்தி, ஓந்தி, உகந்தழகி என்றெல்லாம் குறிப்பிடப்படுகிறாள். அவள் காத்தவராயனிடம் நூல் விலை பேசும் போது செட்டிப் பெண்ணாகக் காட்சி தருகிறாள். காத்தவராயன் இளைப்பாயிருக்கிறதென்று கூற அவரை உபசரித்து வீட்டில் இல்லத் தலைவியாக விளங்குகிறாள். காத்தவராயனை மனத்தில் காதலனாக நினைத்தபின்

"மணமது செய்ய வாக்கு மன்னவர் தரவே வேணும்"

என்று காத்தவராயரிடம் வேண்டி அவர் வலப்பாகம் அடைந்தவள் என்ற நிலையில் ஒரு கற்புக்கரசியாகவே விளங்குகிறாள். இந்நிலைகளில் உகந்தாயி என்ற பாத்திரப் படைப்பு சிறந்த படைப்பாக அமைந்துள்ளது.

கறுப்பாயி

கறுப்பாயி, கறுப்பழகி, கறுப்பி என்று குறிப்பிடப் படுகிறாள். செம்பு குமாரன் வனத்தில் ஏழு சுற்றுக் கோட்டைக்குள் ஏழு கருப்பருடன் மிகுந்த வீரமுடைய மலைச்சாதிப் பெண்ணாகக் கறுப்பாயி என்ற பாத்திரம் படைக்கப் பட்டிருக்கிறது. கறுப்பாயி காத்தவராயருடன் சாவல் சண்டைக்குச் செல்கிறாள். அவர் கறுப்பாயியின் ஏழு சாவல்களையும் தம் ஒரு சாவல் கொண்டு வீழப்பண்ணியபோது வெகுண்டு, காத்தவராயரை மந்திரக்காரன் என்று நினைக்கிறாள். உடனே மந்திரவாள் உருவிக் காத்தவராயரைத் துரத்துகின்றாள். இந்நிகழ்ச்சி அவளுடைய வீரச் செயலுக்குச் சான்றாக அமைகிறது. பிறகு காத்தவராயர் சுவாமி என்று அறிகிறாள். அவரை வணங்கி மூர்ச்சையாகிக் கிடக்கின்ற

தன் அண்ணன்மாரை எழுப்பித் தர வேண்டுகிறாள்; தங்கள் குலதெய்வமாய்த் திகழவேண்டும் என்றும் கேட்கிறாள். கறுப்பாயியின் இச்செயல்கள் காத்தவராய சுவாமியின் பேரில் அவள் கொண்டிருந்த பக்தி உணர்வை வெளிப்படுத்துகின்றது.

ஸ்ரீவள்ளியின் அவதாரமாகவே கறுப்பாயியைப் படைத்திருக்கிறார் சாமிக்கண்ணுக்கவுண்டர். அந்தக் கருத்தில் இவ்வாசிரியரும் உடன்படுவதாகவே தெரிகிறது.

கட்டியங்காரன்

"கட்டியங்காரன் என்ற சொல்லிற்கு அரசன் முன் புகழ்மொழி கூறுபவன் என்பது பொருள்"[32] பாத்திரங்களின் அருமை பெருமைகளை விளக்கி அறிமுகப்படுத்துவதும் அவ்வப்போது நகைச்சுவையை எழுப்புவதும் இவனுடைய பணிகளாகும். இந்நாடகத்தில் நாரதருடன், கட்டியங்காரன் நடத்தும் உரையாடல்களில் நகைச்சுவை இழையோடுகிறது. அது தவிர இந்நாடகத்துள் கட்டியங்காரனின் பங்கு குறிப்பிடத்தகுந்த அளவில் இல்லையென்றே கூறவேண்டும். காத்தவராயன், சின்னான், நாரதர் ஆகியோரை அறிமுகப்படுத்தும் போது மட்டும் கட்டியங்காரனின் பண்பு வெளிப்படுகிறது.

வங்கணச் சின்னான்

"மலையாள தேசத்துத் தொட்டியத்துச் சின்னான்" என்று குறிப்பிடப்பட்டுள்ள சின்னான் ராஜாவை, 'வங்கணச் சின்னான்' என்று இவ்வாசிரியர் பல இடங்களில் சுட்டிக் செல்கிறார்.

மந்திர தந்திர வித்தைகளில் மிகச் சிறந்தவனாகக் காத்தமுத்து நாடகத்தில் படைக்கப் பெறுகிறான். ஆனால் இந்நாடகத்துள் காத்தவராயனுக்குத் தோழனாகவே படைத்திருக்கிறார். தோழனாகிய சின்னான் பூனை வடிவெடுத்து, கிளியாயிருந்த காத்தவராயரைப் பிடித்து வந்து அவன் மேற்கொண்ட செயலை நினைவு படுத்துகிறான். மேலும் கறுப்பாயி வளர்த்த ஏழுசாவல்களையும் சாவல் வேடமிட்டுச் சென்று, அக்சாவல்களை வீழப்பண்ணி உதவி செய்கிறான். இவ்வாறு காத்தவராயனின் உற்ற தோழனாக இருக்கும் பாத்திரமாகச் சின்னானைக் காணமுடிகிறதே தவிர மந்திர ஆற்றலினனாக இந்நாடகத்தில் காண இயலவில்லை.

பார்க்கவியல்கிறது."[33] என்ற ஏ.என். பெருமாள் அவர்கள் கூற்றும் இந்நாடகத்துக்குப் பொருந்துமாறு உள்ளது.

நடைச்சிறப்பு

நாடகம் சிறப்புற அமைய அதன் மொழிநடை பெருந்துணை புரிகிறது. பொருள் சிறப்பு. அழகு. தருக்கம். உணர்ச்சி. புலப்பாடு. வேகம் ஆகியவை நாடகத்தின் மொழிநடையில் இருக்கவேண்டும்.[34] ஒலிச்சிறப்பு முக்கியமாகக் கருதப்பெறுகிறது. 19ஆம் நூற்றாண்டிலும். 20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்து நாடகங்கள் பலவும் பெரும்பாலும் பாடலும் உரையாடலும் கலந்து எழுதப் பெற்றுள்ளன.

தெருக்கூத்துக்களிலிருந்து வளர்ந்து வந்தவையே நாடகங்கள். எனவே. தெருக்கூத்து நடத்துவதற்கேற்பப் பாடல்கள் எழுதப்பட்டன. அவ்வாறு எழுதப்பட்ட பாடல்கள் நாடகமாக. நாடக அரங்கத்தில் அரங்கேற்றம் பெற்றபோது சிற்சில மாறுதல்களைத் தரவேண்டிய கட்டாயத்தில் இடை இடையே உரையாடல்களுடனும் அமையப்பெற்றன.

நாட்டார் நாடகங்களில் பாடல்கள் நாடகத் தொனியில் அமைந்துள்ளன. இருவர் மாறிமாறிப் பேசும் இடங்களைத் (தர்க்கம்) தருப்பாடல்களில் அமைத்துவிடுகின்றனர். அவர்கள் மேடையேறிப் பாடல்களைப் பாடி நடித்தாலும் நாடகம் போன்றே அமைந்திருக்கின்ற வகையில் பாடல்களின் சொற்கள் வளம் பெற்றவையாக அமைந்திருக்கின்றன.

காத்தவராய நாடகத்திலும் ஆசிரியர் தரு. திபிதை என்ற இசைப் பாக்களில் பாடல்களை அமைத்துத் தந்திருக்கின்றார். திபிதை என்பது இரண்டடிக் கண்ணிகளாலாகிய இசைப்பாடல் வகையாகும். இரண்டு கண்ணிகளைச் சேர்த்த நான்கு அடிகளில் விருத்த நடையில் 65 பாடல்களும். தரு[illegible] பாடல்களும் ஒவ்வொரு பாடலுக்கிடையிலும் உரையா[illegible] அமைந்துள்ளன. இவை தவிர கொச்சகக் [illegible] ஒரு பாடலும். வெண்பாவில் ஒரு பாடலும் பொது [illegible]ருத்தச்[illegible] இரண்டு பாடல்களுமாக மொத்தம் 119 பாடல்களை இந்நாடகத்[illegible] காணமுடிகிறது. தருக்கள். பல்லவி. அனுபல்லவி சரணம் [illegible] அமைப்பில் பாடப்பெறும். இப்பாடல்[illegible] நாட்டுப்புற

பாடல்களாகப் பாடப்பெறுவதால் நாடகம் காண்போரைக் கவரும் வண்ணம் அமைகிறது.

உரையாடல் பாடல்கள்

உரையாடல்களையும் பாடல் அமைப்பில் தரும் முறையை நாட்டார் நாடகங்களில் மிகுதியாகக் காணலாம். இரண்டு பாத்திரங்கள் கேள்வி பதிலாகப் பாடலிலே உரையாடுவதைக் கேட்கலாம். காத்தவராயரும் உகந்தாயியும் உரையாடுகின்றதை ஏசல் தருப் பாடலில் காணலாம்.

உகந்தாயி : எந்தூர் வாருங் காணும் செட்டி யாரே - உந்தன்
சொந்தஊர் சொல்லுங் காணும் செட்டியாரே!

காத்தவராயர் : சந்திர வதன னாளே உகந்திப் பெண்ணே - நான்
தருமா புரிப்பட் டணத்தான்

உகந்தாயி : வர்த்தகன் கோத்திர மென்னச்
சொல்லுஞ் செட்டியாரே - உங்கள்
குடிப்பேர்கள் என்ன வென்றுஞ்
சொல்லுஞ் செட்டி யாரே!

காத்தவராயர் : கோத்திர மான கடவுள் ரிஷி கோத்திரம் - எங்கள்
தோப்பனார் பேர் சிவனா செட்டி - தாய்மாரி

உகந்தாயி : உந்தன்பே ரென்ன சொல்லுஞ் செட்டி யாரே!

காத்தவராயர் : கந்தம் வீசும் குங்கும முலை யாளே - என்பேர்
காத்த செட்டி தோழன் சின்னான் தாண்டி [90]

இதுபோன்ற உரையாடல் மூலம் நாடகம் பார்க்க வந்த பார்வையாளர்களுக்குச் சலிப்பு ஏற்படா வண்ணம் உணர்த்த வேண்டியவற்றை எளிய முறையில் மக்கள் விருப்பத்திற்கிணங்க ஆசிரியர் அமைத்துக் கூறுவதைக் காணலாம்.

பலவகைப் பாடல்கள் அமைப்பு

தருப்பாடல்கள் விருத்தப் பாக்களில் பாடப்பட்டிருப்பினும் சில பாடல்களில், அடியளவோ, சீர்களின் அளவோ ஒத்து வராமல் பாடுவதற்கு வசதியான அமைப்பில் பாடல்களை இயற்றியிருக்கின்றனர்.

கூர்விழி மாதே குயிலே
கோவித்துக் கொள்ளாதே - அவள்
கொஞ்சக் காரணல்லன் கூத்தாட்டன்
கொண்டு வைப் பாண்டி
வேருடன் மல்லிகை முல்லை
முடிந்த சிகையின் உன்னை
வேடிக்கை யாகமணம் செய்யா
மலவன் போகான் [66]

என்ற இப்பாடலில் விருத்தப்பாவிற்கான சீரளவோ, அடியளவோ ஒத்துவராமல் எதுகையும் அமையாமல் பாடும் வசதிக்கேற்ப பாடல் அமைந்துள்ளது. சீர்கெடும் இடங்களில் பாடல்களை நீட்டிப் பாடி சரி செய்திருக்க வேண்டும்.

பாடலின் ஒவ்வொரு அடியும் இறுதியில் ஒரே சொல்லாக முடியுமாறு பல அடிப்பாடல்களும் வருகின்றன.

என்னைக் களவு செய்ய
இசைந்ததோர் கண்ணலூர் - மாரியம்மா
எப்படி யுமுன்சித் தத்துக்கு
இரங்காதோ - மாரியம்மா
ஆரிய தேசம் அறிவானோ
உன்மகன் மாரியம்மா
அவனை அனுப்பி அவமானம்
செய்வித்தாய் என்னைநீ மாரியம்மா [77]

இந்த முறையில் 12 அடிகள் 'மாரியம்மா' என்ற சொல்லை இறுதியில் பெற்று முடிகின்றன. ஆரியமாலை இறைவனிடம் சொல்லிப் புலம்புவதாக அமைந்த பாடலில்[51] 'சிவனே' என்ற சொல் 8 அடிகளிலும் இறுதியில் அமைகின்றது.

பொது வசனம்

பாடல்களிலேயே எளிய சொற்களை அமைத்து நாடகம் செய்திருப்பினும் பாடல்களில் அலங்காரச் சொற்கள், அடைமொழிச் சொற்கள், எதுகை, மோனை அமைப்பு முதலானவை அமைந்திருப்பதைக் காணலாம். தெருக்கூத்தின் முடிவுக் காலத்தில் நாடகங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே காலத்திற்கேற்றாற் போல் மாற்றங்கள் தேவைப்படுவதால்

பாடல்களின் இடையிடையே உரையாடலுடன் கூடிய பொதுவசனங்களை உரை நடையில் அமைத்தனர் நாடக ஆசிரியர்கள். கதையை வளர்த்துச் செல்லும் பகுதியாகவும், கதையை விளக்கிச் செல்லும் பகுதியாகவும் இப் பொது வசனங்கள் அமைந்திருக்கின்றன. இந்நாடகத்துள் கதாபாத்திரங்களே உரையாடுகின்ற வசனங்களைக் காணலாம். நாட்டுப்புற மக்கள் பேசுகின்ற பேச்சு வழக்கினை இவ்வசனங்களில் காணலாம்.

சான்று

காத்தவராயர் : **அகோ வாரும் பிள்ளாய் வங்கணச் சின்னான் இந்த ஆரியமாலையைக் களவு செய்ய நான் வருகிற விதத்தையும் விபூதி எறிந்து அவள் சிலை போல நிற்கும் விதமும் பாரும் பிள்ளாய் நான் செய்யும் சாமர்த்தியம்.**

சின்னான் : **அப்படியே மகா பாக்கியமாச்சுது சுவாமி** (79)

கதைக்கு ஏற்றாற்போல் அமைகின்ற பொது வசனங்களும் உண்டு.

பொதுவசனம்

காவேரிப் பூம்பட்டிணம் உகந்தாயி தன்னையும் பொருத்தி அப்பால் வருகிற வழியில் செம்பு குமாரன் வனத்தினில் ஏழுசுற்றுக் கோட்டையும் அலங்கார உப்பரிகையுங் கண்டு நாரதமகாமுனி சொற்படி இங்கே ஏழு கறுப்பர் தங்கை இருக்குமிடமென்று சந்தோஷப் பிரியனாகிச் சின்னானை அழைத்து நீ ஒரு பொற்சாவல் போலவும் நான் ஒரு பிடாரன் போலவும் புறப்பட்டார்கள்.(94) என்பது போன்ற வசனங்கள் கதையை விளக்கிச் செல்ல உதவுகின்றன.

பிறமொழி கலந்தநடை

'பிறமொழி கலப்பு' என்பது எல்லா இலக்கியங்களிலும் உண்டு. பிறமொழி கலந்த நடையமைப்பினை நாட்டார் நாடகங்களில் மிகுதியும் காணலாம். பக்தி இலக்கியங்கள் பலவற்றில் மணிப்பிரவாள நடையைக் காணமுடிகிறது. இதுபோன்று காலத்திற்குத் தகுந்தாற்போல் இலக்கியங்களில் மொழிநடையமைப்பு மாறுபடுகிறது.

வடமொழிச் சொற்களும் ஆங்கிலமொழிச் சொற்களும் தமிழ் மொழியில் மிகுதியும் கலந்துள்ளன. அவை தமிழ்ச் சொற்களைப் போல் பேச்சுவழக்குச் சொற்களாகவும் மாறிவிட்டிருக்கின்றன.

மேலு மேலு **சபாசெல்ல**(7)

புத்திரன் ஒன்று **புனிதனே** வேணும்(5)

ஸ்ரீரங்கம் என்னும் **மகாஸ்தலம்** அதிலே(24)

அவள் ஆயிரம் பொன் **நித்திரைக்கு** வாங்கியும்(24)

இத்தனை **சொகுசாய்** பாடுகிற **புருஷன்** யாரடி(26)

மகா **சந்தோஷ** மாச்சுது(27)

அதிரூப சுந்தரி

பட்டஞ்சு **வேஷ்டி** உடுத்து

பரிமள கந்தம் பூசி(67)

அகத்திலே போயி நீ கேட்கிற

திரவியத்தைத் தருகிறோம்(62)

ஆசீர்வாதம் பண்ணி அனுப்பினால்

பக்ஷமாய்(97)

பஷ்ஷனம்(97)

இவை போன்ற பல சொற்கள் பேச்சு வழக்கில் இருப்பதால் எளிதில் கலந்து விடுகின்றன. மக்களும் அதை விரும்பிச் சுவைத்திருக்கின்றனர் என்பதையும் அக்கால மொழி நடையமைப்பையும் இதன் மூலம் அறிந்து கொள்ளவியல்கிறது.

வட்டார வழக்குச் சொற்கள்

பேசும் மொழி ஒன்றேபாயினும் பலவட்டாரங்களில் வாழ்கின்ற மக்கள் பேசும் மொழி அந்தந்த வட்டாரத்திற்கேற்ப சிற்சில மாறுதல்களுடன் பேசப்படுகின்றன. சங்கப் புலவர்கள் பல்வேறு பகுதிகளைச் சார்ந்திருந்ததால் அவர்கள் பாடல்களில் வட்டார வழக்கினைக் காணலாம். சென்னையில் வாழும் மக்கள் பேசும் பேச்சு வழக்குச் சொற்களுக்கும். கன்னியாகுமரிப் பேச்சுவழக்குச்

சொற்களுக்கும் இடையே மிகுந்த வேறுபாட்டைக் காணலாம். இந்நாடகத்தில் திருநெல்வேலி, இராமநாதபுர மாவட்ட பேச்சு வழக்குச் சொற்களைக் காணமுடிகிறது.

'கட்டியங்காராய் வாடா தாசினிச் சேதி யெல்லாம்
திட்டமா யறிந்து கொண்டு சீக்கிரமாய் வாடா வென்றால்
அட்டியே செய்து விட்டால் அறிக்கை சொல்லாமல் போனால்
நட்டியே உனக்குச் செய்த நான்தரும் பொருள் தானே'[110]

இப்பாடலில் அமைந்துள்ள அட்டி என்னும் சொல் 'தடை' என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது.

நட்டி என்ற சொல் நஷ்டம் என்ற வடசொல்லின் பேச்சு வழக்குச் சொல்லை 'நட்டம்' என்று வழங்குவதுண்டு. எதுகைக்குத் தகுந்தாற்போல் நட்டி என்று அமைந்துள்ளது.

ஆரடா துட்டா வாடா என் தங்கையைக்
கொண்டு போறியா[103]

என்ற அடிகளில் யாரடா என்பது ஆரடா என்றும் துஷ்டா என்ற சொல் துட்டா என்றும் வழங்கிய பேச்சு வழக்குச் சொற்களாம்.

மண்ணிய என் அண்ண மாரை
வல்லவனே நீர் எழுப்பும்[104]

என் அண்ணன்களை என்பது 'அண்ணமார்' என்று வழங்கப் பட்டுள்ளது.

'வெத்திலையில் மருந்தை இட்டுச் சுருள்மடித்து
அவள் சுருள் மடித்து
அவண்டியவர் கையில் தந்து - சுவாமி
திண்ணென் னாளே'[28]

வெற்றிலை. வெத்திலை என்றும். 'உண்' என்பது திண் எனவும் வழங்கப்பட்டுள்ளன [28] 'உன்னை **வல்விடும்பாய்ச்** சொன்னவனைப் பிடித்துவந்து சிர **ஆக்கினைப்** பண்ணி விடுகிறோம்'

அகந்தையாய், (குறும்பாய்ப்) பேசினவனை என்ற சொல்லிற்கு **வல்விடும்பாய்** என்ற சொல்லைக் கூறியிருக்கிறார். **ஆக்கினை** என்னும் சொல் **தண்டனை** என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது.

தோதகம் செய்ய வேண்டாம் செட்டியாரே[90]

'வருத்தம்' என்ற பொருளில் 'தோதகம்' என்ற சொல்லைக் குறிப்பிட்டுள்ளார்.

ஓமல் செய்யாமல் துயில் வெளுத் துகந்துநீ வருகைதானே[36]

'ஆபவாதம்' (ஒவ்வாப் பேச்சுக்களைப் பேசாமல்) (குற்றம் பேசுதலைச் செய்யாமல்) என்ற பொருளில் 'ஓமல்' என்ற சொல்லைக் குறிப்பிட்டிருக்கிறார் எனத்தெரிகிறது.

வண்ணார நல்லி வீட்டுக்குப்போய் அவள்
வர்த்தமான மெல்லாம் கேள்விப்பட்டு

சங்கதியெல்லாம். (செய்தி எல்லாம்) என்ற பொருளில் வர்த்தமான மெல்லாம் என்ற சொல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல வட்டார வழக்குச் சொற்கள் இந்நாடகத்துள் கலந்துள்ளன. இவ்வாறுள்ள பாடல்கள் பொருள் விளக்கம் பெறவும், வட்டார வழக்குச் சொற்களின் ஆட்சியை அறிந்து கொள்ளவும் பயன்படுகின்றன.

இயற்கை இறந்த நிகழ்வு

நாட்டார் நாடகங்களில் இயற்கை இறந்த நிகழ்வுகள் நாடகக் கட்டுக்கோப்புக்கு மிகவும் உதவுகின்றன. இறை பாத்திரங்கள் நிறைந்திருக்கும் புராண நாடகங்களில் இயற்கை இறந்த நிகழ்வுகள் தவிர்க்க முடியாதவை. மக்கள் அந்நிகழ்ச்சிகளை மறுக்காது ஏற்றமையாலும், மிகவும் ஆர்வத்துடன் அந்நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தமையாலும் நாடகங்களில் இயற்கை இறந்த நிகழ்வுகளைக் கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இந்நாடகத்தில் காத்தவராயன் ஆரியமாலையை அடைய வேண்டுமென்பதற்காக, கிளியாக மாறுவதும் பெண்குறத்தியாக மாறுவதும், சின்னான் பூனைவடிவமாகவும் சாவலாகவும் உருமாற்றம் அடைவதும் இயற்கை கடந்த நிகழ்வுகளேயாகும்.

காத்தவராயர், தாதியருடன் சந்திரபுஷ்ப நதிக்கரையில் ஆரியமாலை நீராடும் போது விபூதி எறிந்து அவளைச் சிலையாக்கியதும், எதிர்த்துவந்த ஏழு கறுப்பரையும் விபூதி மந்திரித்து மூர்ச்சைப்பண்ணச் செய்ததும் மந்திர ஆற்றலினால்

செய்த நிகழ்ச்சிகளேவானாலும் இயற்கையை மீறிய நிகழ்ச்சிகளாகும்

நாடகத்தில் விறுவிறுப்பு காட்டுவதற்காகவும். சிக்கல்களைத் தீர்ப்பதற்காகவும் இயற்கை கடந்த நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

உவமைகள்

இலக்கியம் என்று தோன்றியதோ அன்றே இலக்கியக் கலைகளும் தோன்றியிருக்கின்றன. கவிதை இலக்கியங்களில் உவமைகளும். உருவகங்களும் பயன்படுத்தப் பெற்றால் அஃது படித்தவர்களுக்கு மட்டுமே பயன்பெறுவதாய் உள்ளன. நாட்டுப்புற மக்களின் பாடல்களிலும். பழமொழிகளிலும், விடுகதைகளிலும் மிகுதியாக. எளிய சொற்களில் கூறப்படுகின்ற உவமைகள் மிகச் சிறந்தவையாக விளங்குகின்றன.

எந்த ஒரு பொருளையும் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளோடு ஒப்புமைப்படுத்தி பேசுவது ஏட்டு வழக்கிலும். நடைமுறை வழக்கிலும் காண்கின்ற ஒன்று.[36]

"தெரிந்தது கொண்டு தெரியாததை உணர வைப்பது" 'உவமை'[37] உவமை என்பது பொருளைத் தக்க ஒப்புமை கொண்டு உணர்த்துவதாகும்[38] எனும் ரா. சீனிவாசன் அவர்களின் கூற்றும் இதைத் தெளிவுபடுத்துகிறது.

உவமைகளைத் தொல்காப்பியர் நான்கு வகைகளாகப் பிரித்து விளக்கிக் கூறுகிறார்.

'வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்'[39]

தண்டியாசிரியரும்

பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்
தொப்புமை தோன்றச் செப்புவ துவமை[40]

என்று உவமையைக் குறித்துக் கூறுகிறார்.

இந்நாடகத்தில் வினை. மெய். உரு என்ற வகைகளால் உவமைகள் பாடல்களில் கலந்துள்ளன.

வினையுவமம்

காத்தவராயர் கிளியாக மாறி ஆறியமாலை கையில் விளையாடுகின்ற வேளையில். அவனுடைய தோழன் சின்னான் பூனையாக மாறிக் கிளியைக் கவ்விக் கொண்டு வந்து விட அப்போது காத்தவராயர் சின்னானிடம். ஆரியமாலையிடமிருந்து என்னைக் கொண்டு வந்தது எப்படியிருந்த தென்றால்·

மனையில் பெண்ணைத் தூக்கிக் கொண்டு
போனாப் போலவும்
பாலுஞ் சோறும் கலத்தில் இட்டுக் கையைப்
பிடித்துக் கொண்டது போலவும்[33] இருந்தது.

என்று கூறும் தொடர்களில் உவமத்தின் சிறப்பை அறிந்து கொள்ள முடிகிறது.

சேவகனாகக் காத்தவராயன் தோன்றி சோமாசிப் பட்டர்களிடம் பணம் கேட்கும்போது அவர்கள் மறுத்துக் கூறும் சொற்களில்

வட்டிக்குக் குடுத்தவன் போல
வழியில் மறித்துக் கொண்டாய்
பொன்பெட்டி எடுத்தவன் போல
பிறகாலே ஓடிவந்தாய்[61]

என்ற உவமைகளைக் கூறியிருப்பதைக் காணவியல்கிறது.

மெய்யுவமம்

இந்நூலுள் கதாநாயக. நாயகியர்களின் உருவ அமைப்புக்குக் கூறும் உவமைகள் நயம் மிகுந்தவையாக அமைந்துள்ளன.

மருவல்லார் பணிமனைக் காத்த வராயன் வருகிறார்
திருக்கதிருக்கு இரவில் சூரியன் நிகரிவ ரென்னவே[9]

என்பது அவ்வுவமை.

கலவிசெய் மதன்போலக்
கட்டியங்காரன் வந்தான்[7]

என்பது கட்டியங்காரன் வடிவுக்குக் கூறப் பெறும் உவமை.

பானைசேர் குழலால் காளி
பாலன்முன் தோன்றினாளே[32]

என்பது காளியின் குழலை உவமப்படுத்துவதாகும்.

பதங்களின் தோற்றத்தைக் கூற வந்த ஆசிரியரின் உவமைகள் வியப்பிற் குரியவை.

சான்று

நண்டுசட்டித் தலையும் - நல்ல
கோட்டான் போல இருவிழியும்
அண்டை வெட்டினாப் போல வாயும்

....

பதின்கலச் சால்வையிலும் - மூக்கு
பாரிக்காட்டை வழிக்க வந்தது போல்[42]

சேவகனாக வந்த காத்தவராயரின் உருவத்தைக் கூறவந்த ஆசிரியர் கூறும் உவமையும் சிறந்ததாக இருக்கிறது.

வண்டி போல் பாகை கட்டி
வரிசையாய் கபாய்த் தொடுத்து [58]

இதுபோன்ற பல உவமைகளைக் கூறியிருக்கிறார் ஆசிரியர்.

பண்புவமை

குவளை விழி[290]

கரிய வேல் விழி[15]

சேல் பொரு விழி[87]

என்று ஆரிய மாலையின் கண்களை உவமைப்படுத்துகிறார் ஆசிரியர்.

'மாந்தளிர் மேனியான்[88]

எனக் காத்தவராயரின் மெய்யின் பண்பையும்,

பால்கொள்ளும் வாயிலாள்[87]

பைங்கிளி மொழியிலாள்[87]

என்று உகந்தாயியின் பண்பையும் உவமைப்படுத்துகிறார்.

நிரல் நிறை உவமம்

உவமைகளை நிரல் நிறைப் படுத்தி உவமப் பொருளோடு உவமித்துக் கூறும் பாடல்களும் உள்ளன.

சான்று

கண்ணும் புருவமும் மன்மதன் கைவில்லும் அம்பும்
நூலிலும் கோரும்சம நுண்மை யவளிடை
அவளிதழ் பாகு கற்கண் டையா[16]

தன்மை நவிற்சியணி

எந்த ஒரு பொருளையும் செய்யுளுள் அமைத்துப் பாடும்போது அப்பொருளின் தன்மையை உள்ளவாறு அழகுபட எடுத்துரைப்பது தன்மை நவிற்சியணி எனப்படும்.

சிவபெருமானை காத்தவராயன் அழைக்கின்ற விதத்தை இயல்பாகக் கூறியுள்ளார்.

சான்று

பாம்பணி மேனியானே பங்கயப் பாதத் தானே[20]

மலையாள ஜோகியின் உருவ அழகை உள்ளது உள்ளவாறே இயல்பாகக் கூறுவதும் சிறப்பு வாய்ந்ததாகும்.

பக்கக் கொண்டை அழகும்
பத்தரை மாற்றுப் பொற்
குண்டல வழகும்சிக்கு வலப்போர்வையும்
கழுத்தில் பாம்பும் திருநீற்று மையழகும்
பக்கக் குச்சழகும் பல்லின் ஒளிவழகும்
கைக்குப் பொன்கடையமும் காலில் சிலம்பணிந்து
வந்தான் மலையாள ஜோகி[35]

பெயரடைகள்

இசைப்பாடல்களாக அமைக்கப் பெற்ற இந்நாடகத்துள் பல பெயரடைச் சொற்கள் உள்ளன. காத்தவராயனை மருகனாக நினைத்துக் கூறும் அடைமொழிகளே இதற்கு அமைகின்றன.

மால் மருகன் காத்தமுத்து[23]

சங்கரன் மகன் முருகன்[23]

சிங்கார முருகன்[23]

கோவிந்தன் மருகன்[99]

தாயசிமாரிக் குமாரன்

மாரிமுத்துக் குமாரன்

சிங்கார வடிவேலன்[100]

திருத்தங்கை மருகன்

என்பன காத்தவராயன் பெறும் அடை மொழிகள்.

விசைய ஆரியமாலை

பத்தினி மாலையாள்

செல்வியாள் மாலை

போன்ற பல அடைமொழிகள் ஆரியமாலை என்னும் பெயருக்கு முன் வருகின்றன.

விளிச் சொல் பெயரடை

மதிவளர் வதனத் தாளே! மங்கையர் மெட்டி யாளே!

பூரண மதிவதனப் புண்ணியா!

வேம்பணி மாலையாளே!

கந்தனே! குமாரசுவாமி! காத்தவராயா![34]

திருவளர் புயனே! காத்தமுத்துச் செல்வனே![43]

போன்ற விளிச் சொல் பெயரடைகளைப் பாடல்களில் ஓசைநயம் தோன்ற அமைத்துப் பாடியிருக்கிறார்.

யாப்பமைப்பு

பாடல்கள் யாவும் விருத்தப்பாக்களினால் இயற்றப் பெற்றிருப்பதனால் எதுகையும், மோனையும் இயற்கையாகவே பாடல்களில் அமைந்து விடுகின்றன.

தஞ்சமென் றழைத்த தென்ன
தமியாளை மகனே இப்போ
அஞ்சக மொழியாள் கூறும்
அப்பனே என்று கூற
வஞ்சியாள் சேலை தப்ப
வரவிடும் பூத மம்மா

பஞ்சுமெல் லடியி லாளே
பகவதி எனச் சொன் னாளே[140]

இந்தப்பாடல் எதுகை மோனையுடன் அமைந்த பாடலாகும். இந்த நிலை விருத்தப்பாக்கள் அனைத்திலும் காணமுடிகிறது.

இயைபுத் தொடை

வெற்றிசேர் உக்கிரமா காளி
வேலன்முன் தோன்றி னாளே
பத்தியான பாலன் முன்பாய்
பத்திரகாளி தோன்றி னாளே
சுற்றிலும் பூதங்கள் சூழ
இந்திர காளி வந்தாளே[39]

என்ற பாடலின் இறுதிச் சொற்கள் அனைத்தும் இயைபுடன் அமைந்துள்ள இயைபுத்தொடைப் பாடலாகும்.

இசைச் சந்தப்பாக்கள்

தந்தனான தந்தனான தந்தனா
தந்தனான தந்தனான தந்தனா

என்ற சந்தத்திற்கேற்ப

அன்பானதோ எங்கள்வா னூரத்துக்கு
தென்மேற் காள்கோலிய நல்லூர்
நண்பானநகர் வளவனூர் நல்ல
நங்கையருள் ஊதிருநாம நல்லூர்
பேரான உக்கிர நாடு
பெருமைக்குத் திருவாலன் காடு
காராளர் புகழ்கொடை நாடு
அத்தைக்காத்துக் கொண்டிருக்கும் வீடு[64]

இந்தப் பாடல் அமைந்துள்ளது.

"வந்தான் மலையாள ஜோகி - பாம்பாட்டி
வந்தான மலையாள ஜோகி -
திந்தோம் திமியென்று தாளந் தீந்துக் கொண்டு
சீகாரகரக் குடுக்கை மகுடிக் குழலூதி
வந்தான் மலையாள ஜோகி"[35]

என்ற பாடலில் மலையாள ஜோகி வருகின்ற பாடல் துள்ளியோடுகின்ற தாள நடையில் அமைந்துள்ளது.

பூதங்கள் வருகின்றதையும் காளி காத்தவராயன் முன் வருவதையும். ஏழு கறுப்பரும் காத்தவராயனை எதிர்த்து வருவதையும் காட்டும் பாடல்கள் இசையுடன் அக்கதா பாத்திரங்களாகவே மாறிவிடுகின்ற பாடல்களாக அமைந்து காண்பவருக்கு களிப்பூட்டுவனவாக உள்ளன

மரபுத் தொடர்

புதிய ஒரு கருத்தைக் கூற வேண்டுமாயின் பன்னெடுங்காலம் வழக்கில் இருந்து வந்த மரபுத் தொடர்கள் பழமொழிகளைக் கொண்டு ஒப்புமைப் படுத்திக் கூறுவதுண்டு. நூலில் வரப் பெறும் கதை மாந்தர்களின் பண்புகளைக் கூறுவதற்கும். சிறப்பினை உயர்த்துவதற்கும் மரபுத் தொடர்கள் ப்யன்படுகின்றன.

ஆரியமாலையை மணம் செய்ய வேண்டுமென்று கூறிய காத்தவராயர். தாயாகிய மாரியம்மை சொல்கின்ற பெண்களையெல்லாம் மறுத்துவிடுகிறார். அவர் ஆரிய மாலையைப் பற்றிக் கூறுகிறார். அப்போது தாயானவர். அவர் கூறிய சொற்களினால் மனம் மகிழ்ந்து கூறும் பாடலில்

நல்லபுத்திரன் நீயென்று நாடியே சொன்ன வார்த்தை
கல்லுக ளுருகும் அந்தக் கட்டைகள் துளுக்கும் நீதான்
வல்லவர் மனம் நினைந்த மாலையை மணஞ்செய் வீரே[22]

என்ற மரபுத் தொடரைக் கையாண்டுள்ளார்.

வண்ணான் கூறிய வன் சொற்களைக் கேட்ட தாதியர் ஆரியமாலையிடம் சொல்கையில்

"கிண்டிவிட்டு சண்டை பார்த்தான்
உன்னைக் கிள்ளுக் கீரை யாக்கி விட்டான்"[49]

என்பது நாட்டுப்புற மக்களால் சொல்லப்பட்டு வருகின்ற மரபுத்தொடர். 'இழிவாகப் பேசிவிட்டான்' என்பதற்கு இந்தப் பழமை வார்த்தை சுட்டப்படுகிறது.

பிள்ளைக்கலி நீத்த நங்கையே[53]

என்ற மரபுத் தொடர் பழங்காலந்தொட்டு நாட்டுப்புறப்பாடல் களில் கையாளப்பட்டு வருகின்ற மரபுத் தொடராகும்.

நாடகத்தில் காணும் சுவைகள்

மனிதனின் பல்வேறு உணர்ச்சிகள் பல்வகைச் சுவைகள் தோன்றக் காரணமாயிருக்கின்றன. நகை, அழுகை, இளிவரல், மருட்கை, வீரம், வெகுளி, அச்சம், இன்பம் ஆகியவை மெய்ப்பாடுகளாகும். இவ் எண்வகை மெய்பாடுகளும் ஒரு நாடகத்தில் அமைவது சிறப்பாகும். குறிப்பிட்ட சில சுவைகள் மட்டும் வருவதும் உண்டு. ஆனால் முக்கியமான சுவைகளான இன்பம், அவலம், நகை, வீரம் ஆகிய சுவைகள் எல்லா நாடகங்களிலும் இடம் பெறுகின்றன.

"மனிதவாழ்வு இன்பமும், துன்பமும் நிறைந்தது என்பதைக் காட்டும்போது நகையும் அழுகையும் இடம் பெறுகின்றது. போட்டி மனப்பான்மை வருகின்ற போது வீரச் சுவை புலனாகின்றது. எதிர்ப்பின் காரணமாக வெகுளிச்சுவை தோன்றுகிறது. மனிதன் தன்முயற்சியினால் முடியாத செயல் ஒன்றைச் செய்ய விரும்பினால் வியப்புச் சுவை உருவாகின்றது. தோல்வியும் கோழைத்தனமும் இளிவரல் சுவைக்கு வழி வகுக்கின்றன"[41] நாட்டார் நாடகங்களில் அனைத்து சுவைகளும் இடம் பெறினும் நகை, அழுகை, வீரம் ஆகிய மூன்று சுவைகளே அதிகமாக இடம் பெறுகின்றன.

நகைச்சுவை

காத்தவராயனின் காவலாய் உள்ள கட்டியங்காரனிடம் நாரதர் தான் வந்த சேதியைக் காத்தவராயனிடம் சொல்லுமாறு கூறுகிறார். அப்போது கட்டியக்காரனுக்கும், காத்தவராயனுக்கும் இடையே நடக்கின்ற உரையாடல்கள் நகைப்பினை உண்டாக்குகின்றன.

கட்டியங்காரன்

சரணம் சரணமையா சுவாமி! தெய்வலோகத்திலே இருந்து
நான் வந்தேனையா சுவாமி.

காத்தவராயர்

தேவலோகத்திலே இருந்து நீ வந்ததேது!
முட்டாளே போடுடா கன்னத்திலே

உ. நி. நீ.
எண் 40276
நூலகம்

கட்டியங்காரன் நாரதரிடம்

கண்ணங்காணும், கொள்ளைக்கார ரிஷியே! நீ வந்தாயென்று
சொன்னதும் காத்த வராய சுவாமி முட்டாளைக்
கன்னத்தில் போட்டுத் துரத்தி விடு வென்று சொன்னாரய்யா

நாரதர்

அட மூடா! நம்மை அப்படிச் சொல்வாரா?
தேவலோகத்திலே இருந்து நாரதமகாமுனி வந்திருக்கிறார் என்று
சொல்லும் பிள்ளாய்[53]

இவ்வுரையாடல் வசனங்களில் நகைச்சுவை மிளிர்கிறது.

பூதங்களின் உருவ அமைப்பினைக் கூறும் பாடலிலும் நகைச்சுவை இடம் பெறுகிறது.

இளிவரல்

வண்ணான் கூறிய இழி சொற்களைத் தாதியர் மூலம் கேட்ட ஆரியமாலை சோமாசிப்பட்டர்களிடம் கூறுகையில்

என்ன சொல்வே னைய்யமாரே - நான்
ஏது சொல்வேன் அய்ய மாரே

....

பன்னுமொழி நல்லி வீட்டில் - ஒரு
பயபல துணிவ தாகச்
சொன்ன சொல்லை என்ன
சொல்வேன் சோமாசி அய்யரே[55]

இளிவரல் சுவை புலனாகிறது. இயலாமையை வெளிப் படுத்துகின்றபோது இளிவரல்சுவை அமைகிறது.

வியப்பு

எதிர்பாராது நடப்பனவும் திடீரென அறியப் பெறுவனவும் நாடகங்களில் வியப்புச் சுவையை அளிக்கின்றன. காத்தவராயன் கிளிவடிவாக மாறுவதும் பின்பு வண்ணானாக மாறி கழுதை ஓட்டிச் செல்வதும், பண்டாரமாக மாறி குறி சொல்வதும், சேவகனாகத் தோற்றம் கொண்டு சோமாசிமார்களை விரட்டுவதும், திடீரென்று பெண்குறத்தியாக மாறிக் குறி சொல்வதும், குறத்தியாயிருந்தவர் செட்டியாய் மாறுகொண்டு வியாபாரம் பண்ணும் போதும்

பிடாரனைப் போல மகுடிக்குழலூதி வருகின்ற செயல்கள் யாவுமே வியப்பிற்குரிய நிகழ்ச்சிகளாக நாடகத்தில் அமைந்துள்ளன.

ஆசிரியர் பெண்கள் குதிரைமேலேறி துப்பாக்கியுடன் அணிவகுத்துச் செல்லும் காட்சியை வருணிப்பதிலும் புதுமையான ஒரு நிகழ்ச்சியைச் செய்கின்றதால் வியப்பு மேலிடச் செய்கிறார்.

வீரம்

கறுப்பாயியுடன் சாவல் சண்டைக்குச் செல்கிறார் காத்தவராயர். கறுப்பாயியின் சாவல்கள் வீழ்ந்துவிடவே அவள், காத்தவராயன் மந்திரக்காரன் என்றறிந்து மந்திர வாளுருவிக் கொண்டு அவரைத்தாக்க முறப்படுகிறாள். தங்கையை அழைத்துச் சென்ற காத்தவராயரை நோக்கி, ஏழு கறுப்பரும் வருகின்ற விதம் வீரச் சுவைக்கு எடுத்துக் காட்டாகின்றது.

வெகுளி

மனிதனின் வேக உணர்வில் இயலாமையில் கோப உணர்வு உண்டாகிறது. மனிதனிடம் இயல்பாக அமைந்துவிட்ட ஓர் உணர்வு என்றே சொல்லவேண்டும்.

ஆரிய மாலை பண்டாரமாக வந்த காத்தவராயரிடம் வண்ணானிருக்கும் இடத்தைச் சொல்லுமாறு கேட்கிறாள். அப்போது காத்த பண்டாரம் அவனைப் பற்றிய எல்லா செய்திகளையும் கூறியபின் இறுதியில்

.. உன்னை
வேடிக்கையாக மணம் செய்யா மலவன் போகான் (66)

என்று கூறியவுடன் ஆரியமாலை தாதியைப் பார்த்துக் கோபம் கொண்டு இந்த "இடக்கான ஆண்டியை ஏண்டி அழைத்து வந்தீர்கள்? உங்கள் ஈரலைப் பிடுங்கிப் போடப் போகிறேன்" என்று கூறுகிறாள்.

சொற்களில் கோபச் சுவையை அமைத்துக் காட்டும் முறை இதில் நன்றாக அமைந்துள்ளது.

இன்பம்

இன்பம் மனிதர்களால் விரும்பப்படுவது. மனித மனம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கவே விரும்புகிறது.

காத்தவராயர் ஸ்ரீரங்கதாசியிடம் கின்னரி மீட்டி ஆடிப்பாடி அவருடன் இன்பமாயிருக்கின்ற நிகழ்ச்சியிலும் தாதியருடன் கிள்ளையைப் பிடித்து அதனோடு கொஞ்சி விளையாடும் ஆரியமாலையிடத்தும் இன்பச் சுவையைப் பெறச் செய்கிறார் ஆசிரியர்.

நாடகங்கள் தோன்றிய காலத்துக்குத் தகுந்தவாறு சுவைகளை அமைத்திருக்கின்றனர். இந்நாடகத்துள் அவலச்சுவை இடம் பெறவில்லை. இன்பத்திற்கும், கோபத்திற்கும், வீரத்திற்கும், வியப்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்துச் சுவைகளை நாடகத்தினுள் புகுத்தியிருக்கிறார் ஆசிரியர்.

சமூக நிலை

நம்பிக்கை

வாழ்வின் அடிப்படையே நம்பிக்கை தான். நம்பிக்கை இல்லையெனில் நாடும் வீடும் நலமுற வழியில்லை.

"நம்பினார் கெடுவதில்லை - நாலுமறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரணடைந்தால் - அனைத்து வரம்பெறலாம்"[42]

என்று பாரதி ஆண்டவனிடம் கொண்டிருந்த நம்பிக்கையை அறுதியிட்டுக் கூறுகிறார். நம்பிக்கையினையே தம் வாழ்வின் பற்றுக் கோடாகக் கொண்டு நாடோடி மக்கள் நாடு தொறும் வாழ்ந்து வருகிறார்கள்.

"ஒரு சமுதாயத்தின் நம்பிக்கைகளைக் கொண்டு அச்சமுதாயத்தின் அறிவுத் திறனை அளவிட இயலும் சிந்தனைத்திறன் மிக்க சமுதாயத்தில் நம்பிக்கைகள் குறைவாகவே இருக்கும்."[43]

தெருக்கூத்துக்களோ நாடகங்களோ வெறும் பொழுது போக்கிற்காக மட்டும் நடத்தப் பெறுவதில்லை. மக்கள் வாழ்க்கையோடும் வழிபாட்டு முறைகளோடும் அவர்களுடைய இன்ப துன்பங்களுடனும் கலந்து படைக்கப்பட்டவை. முறையற்ற மூடநம்பிக்கைகளைக் கண்டித்துக் கூறும் இயல்புடையவையாகக் கூடச் சில நாடகங்கள் தோன்றியுள்ளன.

பழந்தமிழ் மக்கள் தெய்வத்திடம் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தனர். எதை வேண்டினும் அவர்கள் கடவுளிடமே முறையிட்டனர். அப்படியே ஏதேனும் தீங்கோ அல்லது நோயோ

ஏற்படின் அதை நீக்குமாறு கடவுளிடம் முறையிடுவர். ஆரியமாலை அரசியாயிருந்து கோவில் பணிகள் அனைத்தும் சிறப்பாகச் செய்கிறாள். இருப்பினும் அவளுக்கு வண்ணான் மூலம் துன்பம் ஏற்படுகிறது. அரசியான அவளை வண்ணான் வேசி என்று கூறுகிறான். அப்போது அவள் இறைவனிடமே சென்று

கோவில் படியைக் குறைஅளந் தேனோ - சிவனே
கொஞ்சமா கிலுமுன்னைக் குறித்து அறியேனா - சிவனே
நாவில்பழுதாக நல்லோரைச் சொன்னேனோ - சிவனே[51]

என்று முறையிடுகிறாள்.

பண்டாரங்களை அழைத்துக் குறிகேட்கும் வழக்கம் இருந்துள்ளது. பண்டாரங்கள் சொல்லும் குறியைக் கேட்டு அவன் சொன்னது பலிக்கும் என்று எண்ணினர் இழந்த பொருள்களை மீட்டு விடவும். காணாமல் போன மனிதர்களைக் கண்டறியவும் அவன் சொல்லும் குறியினால் செய்துவிடலாம் என்று நம்பினர்.

தாதி: தாதி 'வாருமம்மா ஆரியமாலை' இந்தப் பண்டாரம் சாஸ்திரம் சொன்னது சொன்னபடி பலிக்குது. அந்த வண்ணான் **இருக்கும் நிலையைக் கேட்டால் சொல்வார்[65]**

ஆரியமாலை: "**குறிகளைக் கேளுங்கள் பெண்ணே**"

என்ற வசனங்களில் இந்த நம்பிக்கையினைக் காணமுடிகிறது.

குறத்தியிடம் குறிகேட்கும் நம்பிக்கையும் இருந்துள்ளது. சங்ககால இலக்கியங்களிலும் இன்றைய நாட்டுப்புற இலக்கியங்களிலும் குறத்தி குறி சொல்லும் நிகழ்ச்சியைச் சுவைபடக் கூறியிருப்பதை அறியலாம். குறத்திகுறி சொல்வதனால் நினைத்த காரியம் நடக்கும் என்ற நம்பிக்கை அரசி முதல் அடி மட்டத்துப் பெண்கள் வரை கொள்ளும் நம்பிக்கையாகும்.

"அடிக் குறத்தி நான் வைத்த பூங்காவனம் அழித்து என் பிதாக்களையும் மோசம் பண்ணிப் போயிருக்கிறான். அவன் நிலையறிந்து சொல்லும் பெண்ணே!"[71]

என்று ஆரியமாலை குறிகேட்க '

'மாமயிலே **மாலையரே மனதுவைத்துக் கேளும் உன் மனதிலுள்ள வர்மம் எல்லாம் - வகுத்துரைப்பேன் சொல்லக் குறியைக் கேளும்"[72]**

என்று குறத்தி குறி சொல்லத் தொடங்குகிறாள்.

குறிகேட்கும் வழக்கம் அனைவரிடத்தும் இருந்து வந்துள்ளது.

பழக்க வழக்கங்கள்

ஒரு சமுதாயத்தினரை முழுமையாக அறிந்து கொள்ள அச்சமுதாய மக்களின் பழக்க வழக்கங்களையும் அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. இந்நாடகத்தில் ஆரிய தேசத்தில் வாழ்கின்ற மக்கள் சமுதாயம், காவேரிப் பூம்பட்டிணத்தில் வாழ்கின்ற செட்டியார் சமுதாயம், செம்புகுமாரன் வனத்தில் வாழ்கின்ற வேடுவர்கள் சமுதாயம் என்ற மூவகைப்பட்ட சமுதாயத்தைக் காணமுடிகிறது.

பரத்தமை ஒழுக்கம் இருந்திருக்கிறது. 'விலைமாது' என்றும், ஆயிரம் பொன் நித்திரைக்கு வாங்குபவள்' என்றும் ஸ்ரீரங்கதாசியைக் குறிப்பிடுவதிலிருந்து தாசியின் பரத்தமை ஒழுக்கத்தைத் தெரிந்து கொள்ளமுடிகிறது. இருப்பினும் மனித சமுதாயத்திலிருந்து விலக்கப்பட வேண்டியது என்பதால் காத்தவராயர் ஸ்ரீரங்க தாசியை அழித்துப் புறப்பட்டு விடுகிறார்.

காத்தவராயர் ஆரிய மாலையைப் பார்க்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு, அவள் துணிகளை வெளுக்கும் வண்ணார நல்லி வீட்டிற்குச் சென்று, வண்ணானாக மாறித் துணிகளை குதாவின் மேல் போட்டுக் கோலையாற்றங்கரைக்குச் செல்கிறார். பூதங்களை வரவழைத்துப் புடவைகளைத் துவைத்து பாறை மீதில் உலர்த்தி சலவைப்பண்ணுமாறு சொல்கிறார் காத்தவராயர். இத்தகைய வண்ணார் தொழில் முறை தற்காலத்தவை. தான் வாழ்கின்ற சமுதாயத்தினரின் உண்மைத்தன்மையை இலக்கியங்களில் இயற்கையாகவே படைத்து விடுகின்றனர் என்பதை வண்ணார் துவைத்து சலவை செய்து கொடுக்கும் தொழில் முறையில் தெரிந்து கொள்ள வைக்கிறார் ஆசிரியர். இந்த வண்ணார் இனத்தைச் சேர்ந்தவர்கள் காளியம்மையைக் குல தெய்வமாக ஏற்றுக்கொண்டு வழிபட்டு வந்திருக்கின்றனர்.

ஆரிய தேசத்தை ஆட்சி செய்து வருகின்ற ஆரியமாலையைச் சாதாரண வண்ணான் தகாத சொற்களைக் கூறக்கேட்டு தந்தையராகிய சோமாசிப்பட்டர்களும் தாதியரும் மிகவும் வருத்தமுறுகின்றனர். அரசியான தன் நிலையை இத்துணை இழிவாகப் பேசிவிட்டானே என்று நினைத்து வருந்தியவளாகவும்

அதே சமயத்தில். வண்ணானைக் கட்டி இழுத்து வந்து தண்டனை கொடுக்க வேண்டும் என்று கூறுகையில் அரசியரின் துணிவும் மனதைரியமும் உடையவராகக் காணமுடிகிறது.

சமுதாயத்தில் பெண்களுக்கு உயர்ந்த இடம் கொடுக்கப் பெற்றிருந்திருக்கிறது. இராணுவத்திற்குத் தலைமை ஏற்றுச் சேனாதிபதி பொறுப்பிலும் இராணுவ வீரர்களாகவும் பெண்களையே வைத்துக் கூறி இருப்பது ஆசிரியர் சமுதாயத்தில் பெண்களுக்கு உயர்ந்த. ஆண்களுக்கு நிகரான சிறப்புக் கொடுக்க வேண்டுமென்பதையும் துணிவில்லாது. எந்த அறிவையும் வளர்த்துக்கொள்ளாது இருக்கின்ற பெண்களுக்கு துணிவு வரவேண்டும் என்பதையும் இந்நாடகத்திலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

எத்துணை உயர்ந்தவர்கள் ஆனாலும் சேவகனார் போன்ற தொழிலாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் குறிப்பிட்ட காலத்தில் கொடுத்து விட வேண்டும் என்ற நியதி இருந்திருக்கிறது.

குறத்தி. பண்டாரம் போன்றோரிடம் குறிகேட்கும் வழக்கம் இருந்து இருக்கிறது. குறி சொல்வோருக்கும் பணம் அல்லது அணிகலன்கள் கொடுக்கும் வழக்கமும் இருந்துள்ளது. "பொன்நூறு தருவாளோ" என்று குறத்தி கேட்கின்ற தொனியில் பணம் கொடுக்காமல் குறி கேட்போரும் இருந்திருக்கின்றனர் என்பதும் தெரிய வருகிறது.

விருந்தோம்பும் பண்பும் மக்களிடையே சிறப்பாகக் காணப்படும் பண்பாக அமைந்துள்ளது. தீண்டாமைப் பேய் தாண்டவமாடுகின்ற நேரத்தில் அந்தனர். தாழ்ந்தவர் என்ற பாகுபாடு இல்லை. எல்லோரும் மனிதர்களே என்ற கொள்கையில் குறத்தியை ஆரிய மாலையிடம். 'பெண்களுக்குப் பெண் பேதகமில்லை' என்று பேச வைப்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

கடையம். தாவடம். மூக்குத்தி. சுட்டி. காதோலை. கடுக்கன், சல்லடம். சிலம்பு ஆகிய அணிகலன்களை ஆண்களும் அணிந்து கொள்ளும் வழக்கம் இருந்திருக்கிறது. சூரி. மகுமச்சு. வாள், ஆறணிச்சவுக்கு. கோடாலி. தடி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளனர். துப்பாக்கியும் கூறப்பட்டிருக்கிறது.

சாவல் சண்டைகளும், பறவைகளைக் கண்ணி வைத்துப் பிடித்தல் போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளும் நாடகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. இந்நிகழ்ச்சிகள் சமுதாயத்திலும் ஊடாடி இருக்கின்ற நிகழ்ச்சிகளாகவே இருத்தல் வேண்டும்.

திருமணச் சடங்கு நிகழ்ச்சிகள் நாடகத்துள் மிக அருமையாகக் கூறப்பட்டுள்ளன. தங்க ரேக்கால் பந்தல் போட்டு, விசைய துந்துபி முழங்க, ரிஷிகள் வேதம் படிக்க மாங்கல்யம் கட்டும் நிகழ்ச்சியைக் குறிப்பிட்டிருப்பதன் மூலம் அக்காலத் திருமண முறையை அறிந்து கொள்ள இயல்கிறது.

"காத்தவராய சுவாமிக்கும் கன்னி ஆரிய மாலைக்கும்
கோத்திரம் விளங்கவென்று ரிஷிகள் கூப்பிட்டு வேதம் படித்தார்
பார்த்தவர்கள் கொண்டாடப் பத்தினி கழுத்தைக் காட்ட
காத்த வராய சுவாமி கையால் மாங்கல்யம் கட்டினார்"[118]

என்ற பாடல் மூலம் திருமணச் சடங்குகளையும், திருமணம் நடந்தபின் மணமக்கள் தெருவீதியில் பவனி வருவது வழக்கம் என்பதனை காத்தவராயர் வருகின்ற பவனி தருப் பாடலிலும் காண இயல்கிறது. அவ்வாறு பவனி வருகையில் பெண்கள் மகிழ்ச்சியுடன் கும்மிப்பாடல்களைப் பாடுவதும், ஒயிலாட்டம் போன்ற பலவகை ஆடல்களை ஆடிக்கொண்டு பவனி வருகிற தலைவன் தலைவியரைப் புகழ்ந்து பாடுவதும் வழக்கமாக இருந்திருக்கின்றன.

அடிக்குறிப்புகள்

1. நாஞ்சில் நாட்டில் நாடகம் - ஆய்வேடு. பக்.36.
2. தமிழ் நாடக வரலாறு. பக். 26.
3. மேற்படி. பக். 25.
4. அடியார்க்குநல்லார். (உரை). சிலப்பதிகாரம். 1:3-12.
5. மீனாட்சிசுந்தரம். தெ.பொ.. பிறந்தது எப்படியோ?. "முத்தமிழ்". பக். 13.
6. கலைக்களஞ்சியம். தொகுதி - 6. பக். 352.
7. மேற்படி நூல்
8. இலக்கியச் சிந்தனைகள். "நாடகக் கலையின் வரலாறு". பக். 16
9. தொல்காப்பியம். அகம் - நூ. 53
10. பெரும்பாணாற்றுப்படை. 55
11. பட்டினப்பாலை. வ. 113
12. திவாகரம். பக். 216
13. மறைமலையடிகள். சாகுந்தல நாடக ஆராய்ச்சி. பக். 8.
14. நாஞ்சில் நாட்டு நாடகம். பக். 39
15. இந்திய மேலை நாட்டு நாடக மேடை நிலைகள். பக். 5
16. தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும். பக். 20
17. மேற்படி. பக். 47
18. ஏலாதி. பா. 25
19. தமிழ் நாடகத் தோற்றமும் வளர்ச்சியும். மேற்கோள். பக்.
20. தமிழ் நாடகம் ஓர் ஆய்வு. பக். 300
21. தொல்காப்பியம். நூ. 247
22. நெல்லை மாவட்ட சிறு தெய்வங்கள் - ஆய்வு. துளசி. இராமசாமி. (நாட்டுப்புறங்களில் மக்கள் வணங்கும் சிறு தெய்வங்களை 'திராவிட தெய்வங்கள்' என்று மக்கள் பெயர் கொடுத்துள்ளார் இந்நூலாசிரியர்)
23. தமிழ் நாடகம் - ஓர் ஆய்வு
24. மதுரைத் தமிழ் அகராதி தொகுதி - 1
25. மதுரைத் தமிழ் அகராதி. தொகுதி - 1

26. மதுரைத் தமிழ் அகராதி தொகுதி - 1
27. அபிதான சிந்தாமணி, பக். 405
28. கலைக்களஞ்சியம், தொகுதி - 1
29. காத்தவராயன் சண்டை என்னும் காத்தமுத்து நாடகம், பக். 6 - 18.
30. சிவவாக்கியார் போதம்.
31. காத்தவராய சுவாமி கதை, பக். 6 - 8.
32. தமிழகத்தில் தெருக்கூத்து, பக். 9
33. தமிழ் நாடகம் - ஓர் ஆய்வு, பக். 229
34. தமிழ் நாடகம் ஓர் ஆய்வு, பக். 300
35. அபிதானசிந்தாமணி.
36. குசலவர் சுவாமி கதை, அய்வேடு, பக். 16
37 புக்குளிக் கரணாம்பிகை மாலை - ஆய்வேடு
38. சங்க இலக்கியத்தில் உவமைகள், பக். 1
39. தொல்காப்பியம், உவமையியல், நூ. 272
40. தண்டியலங்காரம், நூ. 31
41. தமிழ் நாடகம் ஓர் ஆய்வு - பக். 300
42. பாரதியார் பாடல்கள்
43. தமிழர் நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும்

இயல் மூன்று

நூல்

காப்பு

திருவளர் கமலப் போதில் திசைமுகன் நெடுமால் வானோர்
உருவுகண் டறியா னான ....
வருசுக வண்ண முத்து மைந்தன்நா டகத்தைப் பாட
ஒருமரு கன்யானை உகந்து காத்த .... (1)

செந்தமிழ்ப் புலவோர் பாதம் சென்னியில் சூட்டி நாயென்
சிந்தையில் நினைவை தாக .... சொன்ன
அந்தரி கவுரி யாயி அடியவன் புகழ்ந்து ரைத்த
சந்ததம் காத்த முத்து .... கஞ் சொல்வேன். (2)

தோடையம்

தானை தந்தன தனத்த தனதானன தந்தன தனதன தனன்னா
நானில மெங்கும் புகழவரும் நாரணன் தந்தை உதவ வாரும்
.... மதன் காத்த வல்லவனைப் பாடல்
பூரணப்புங்க கவன் நாவில் புகழ நாமகளைப் போற்றி
.... மாமுகனை இங்குத் துதிப்போமே
இன்னில மெங்கும் புகழவரும் எழில்வானப் பதியில்
.... எழுத்துப் புதல்வனைப் பாட
கன்னிகள் ஏழுசக்தியுடன் கமலந்திரி அம்பிகை யுடன்
.... பதங்கள் தணையே
தென்னவநாடு புகழவரும் சேகர காத்த வராயன்
.... மதிமந்திரி யுடனே
பண்ணுதமிழ் பாவலர் புகழா கப்பா வையார்
.... போத்தி ராசன் நம்மை யுடன்காக்க! (3)

மங்களம்

மங்களம் - நித்தியமங்களம்
மங்களம் - செயமங்களம்

கொல்லி மலை வாசருக்கும் - மகிழ்
காத்தவராயருக்கும் - மங்களம்
வீராதி வீரனுக்கும்
விசையப் பிரதாபனுக்கும்
கார்குழல் மாரியர்க்கும் - மகிழ்
காத்த வராயருக்கும் - மங்களம்

விந்தைபெறு தோளனுக்கு
மெல்லி மாரனுக்குச்
செந்தமிழ்சேர் மாரியர்க்கு மங்களம் - மகிழ்
செல்வன் காத்தவராயருக்கு - மங்களம் (4)

அகவல்

சீர்வாளர் கயிலை திங்கள்சேர் சடையார்
வாரணி தனத்தான் மகிழுமை யிடத்தான்
ஐங்கரன் முருகன் அய்யன் சங்கரன்
சபையில் தானு கந்தருள் வேதியர்
வேதம் விளம்பித் துதிஎனத் தொழவே
பார்வதி அம்மன் பயின்ற தக்கனும்
ஆரணன் தன்னை அழைத்து வேற
நினைவாய் இசைய வேணு மென்று
உரைக்க ஆழிக்குள் நெடுமால் துக்கிசைத்
தார்பின் தேவர் கோனிந் திரன்முனிவர்கள்
கூடமுவுல குந்தனி முனியீஸ் வரரும்
சண்டி காமுண்டி சரஸ்வதி கங்கை
எண்டிசை போற்றிய ஆவிலந் தணர்முன்
நான்முக் கண்ணரை இகழ்ந்த நலத்தவர்
அனைவரைக் கூட்டி வேதிய னிசைந்து
சேஷயிட் டெவற்கும் செயக்கம்ப னாட்டி
அக்கினிக்கு பொதிக்கா கொடுத்து முக்கணர்
தன்னிலும் முன்னவனாக தவமது புரிய
சங்கரி மகிழ்ந்து அவசர மாக
அரனைத் தொழுது அன்னைசெய் யாகம்
தன்னையே பார்க்க என்னையே விடைகொடு
மென்ற ஈஸ்வரியை திருமுக மலர்ந்து
தேவியைக் கடிந்து பெருவேள் விக்குப்போய்

வாவென்ன
அப்பொழுது உமையும் அடிபணிந் தகன்று
ஒப்புளத் தக்கன் யாகத் துக்கே
அன்னையைப் பணிய அவனிறு மாந்து
என்னைபோ வென்று எதிரில்லா திருக்க
இயல்பது வில்லால் தீரன்செய் யாகந்தான்
தவமில் லாமல் தக்கன்செய் யாகம்
மழையிருள் கூந்தல் மங்கையாள் விதித்து
பழையதன் பதியில் பார்வதி வரவே
அன்றுமால் காணா தரன்கை புரியச்
சென்று வேரவை செயவீர பத்திரன்
அன்றுதா னுதித்தனன் அகோர உக்கிரமதாய்
என்னையே ....வைக்
கொன்றைவார் சடையார் கொடுமைசேர் வேள்வியை
இன்றுநீர் காத்து ஏகுமென் றருளச்
சென்றுபூ தத்துடன் சிவகணஞ் சழத்த
தன்னையே மதித்து தக்கனைச் செயித்து
ஸ்ரீமகத் தருகினில் ஓமகுண் டலத்தில்
ஏகக் கடிதில் எழுந்தரு ளிவர
கெங்கை முத்தென்று கௌமாரி யம்மன்
அங்கமர்ந் தருளி ஆரடா என்று
சத்தமா தாக்களும் தானெழுந் தருளி
வெற்றிசேர் வீர பத்திரன் தன்னைக்
கடித்துஉக் கிரமதாய்க் கனஅமர் பொருதக்
கடிந்தமா தர்தனைச் சமரினில் வென்று
ஓமகுண் டலத்தில் உதவியாய்க் காத்த
நேமமா தாக்களை நிலத்தினில் கிடத்தி
வந்தனர் வீர பத்திரன் அரனைச்
சுந்தரத் திருவடி தொழுதபின் ஈசர்
கெங்கைமுத் திவள்செய் கிருபத்தி னாலே
பங்கப் படுத்தின பராக்கிரம வீர
அகோரமா தாக்களை அரன்வர வழைத்துப்
பூதலந் தனிலே போயவ தரியென
அப்பொ தாலு மங்குசம் பாசம்
ஒப்புடன் கயிறும் உயிர்த் தூண்டிலுமே
தானுகந் தருளி சங்கரிகௌ மாரியை

ஈசனும் அனுப்ப இவள்மன மகிழ்ந்து
காஞ்சியி லுகந்து கம்பையா றதனில்
செஞ்சடை ஈசரைத் தியானித் திருந்தனள்
அருந்தவம் அதனால் அர்த்தநா ரீசன்
வரந்தர வந்த மாரியைக் கண்டு
ஏதுஉன் தபசு யென்றவர் உரைக்க
உந்தனை இகழ்ந்த ஒன்றலன் தக்கன்
மன்றிநான் போன வகைபாவ மறவும்
புத்திரன் ஒன்று புனிதனே வேணும்
இத்தலம் புதுகா இன்பமாய்க் காக்க
கறுத்தன்காங் கையனைக் கருத்தினில் நினைத்து
பத்தினி மாரி பாலக னாக
வாசமா மகரிஷி வரந்தந்து போனபின்
திருவளர் வானூர் தெய்வ மாக்கதை
நகரில்...
மருமிகு வன்ன முத்துமை ஈன்ற
காத்தவ ராயக் களையந்த சுவாமியும்
தோத்திமத்த தொட்டியச் சின்னானை அடக்கி
நாரதர் மொழிய நன்னி(றி)யாய்க் கேட்க
ஆரிய மாலை அவள்மயி லாக
கார்குழல் மாரிதன் காதலன் தொழவும்
வாரியே அணைத்து வளர்விடை தரவும்
அதுகாணும் வாடா வளர்காத் தவனும்
இங்கித சொறங்கமே வந்து குறைதான்
கொள்ளக் கின்னரி பாடிச் சீரங்க
தாசிப் பொன்மணி பரித்து இருவரும்
கூடி இன்பமாய் நாந்து மருவுசேர்
மாலை மலர்க் காவினில் கிளியாய்
அந்தவே ளையினில் மாலையைக் கண்டு
சிந்தையாய் அவள்கரஞ் சிக்கெனக் கிளிதனைப்
பொன்பணிசேர் சின்னான் பூனையாய்க் கவ்வி
வண்ணார நல்லி வளவினில் வந்து
கண்ணா யிருந்த காதலி நடத்தை என்ன
என்னா வென்று இருவருங் கேட்டு
கன்னியாள் சேலைக் குதாவில் வைத்து
அன்னையாள் காளி அவள்தனை நினைக்க

வன்னநற் பூத மலராத் துயில்பட
கொடியிடைப் பூங்கா குதாவைவிட்டு
அடியனைத் தாதிகண் டவள்தனக் குரைக்க
மடமயில் மாது மாலையாள் புலம்பக்
கொடிதனில் சத்தம் கடிவார்த்தை யாகக்
கோட்டையில் ஏதோ கூச்சல் தானெனக்
கேட்டுநற் சோமாசி பட்டர்கள் வந்து
கார்குழல் மாதைக் கைதனை அமர்த்திப்
பாரியப் பங்காப் பருவமாப் பார்க்க
ஆரியப் பராசன் தானும் அறிய
சரன்கோன் காத்த பண்டார மாகிக்
குறிதனை மாதுக்கு உண்மையாய் உரைக்க
மறுபடி தெய்வக் குறத்தியாய் வந்து
மாலைக் குறிகள் மகிழ்ந்திட உரைத்து
நீலியாள் நினைத்த காரியம் நன்று
பொன்னிகள் பேசின புருஷனாய்க் காணுது
அன்னிலை காட்டுவேன் அரசிநீ வந்தால்
நன்மையாய்ப் பேசி ரானுவத் துடனே
சந்திர புஷ்பச் சன்னிதி இறங்க
வந்தவன் மாதை அவன்சிலை யாக்கினன்
அந்தணன் வடிவாய் வந்தவ னெழுப்பி
வாகுசேர் முதலை வங்கினில் வைத்து
நாகத்தின் மகனை நற்காவல் இருமென்று
வானவர் மெச்ச வணிகர்போ லிருவரும்
கானகம் நடந்து காவேரிபட் டணத்தில்
மாணிக்கச் செட்டி மகளொ ருத்தியையும்
கடைவீதிப் பட்டணம் காவேரி தாண்டி
பிடாரன் போய்யன் பொற்சாவல் சின்னான்
தடந்தனில் கறுப்பி தைய்யலை வென்று
உடன்பெறு கறுப்பர் எழுவரும் மறிக்க எதி
எதிர்த்தனர் தன்னைச் சபித்தவா றெழும்பி
முதளைமா மடுவில் முயப்பிற் றவந்து
மந்திரிச் சின்னான் கழாதரைக் கூட்டி
வந்தனன் கண்ணனூர் மாரிக் குரைத்தனன்
மனமது மகிழ்ந்து மகனை வாழ்த்தினள்
முனிவரும் மூவர் தேவரும் வருந்தி

ஆரிய மாலைப் பிதாக்களை அழைத்துக்
காரியக் காத்தான் கல்யாணச் செய்தி
வாவை நல்லூர் வளர்வன்ன முத்து
ஞான பக்தர்தொழும் நன்மைகொ ளோலன்
விக்கிர மாதாக்களை வென்ற கெம்பீரன்
இக்கவி யதனில் இயவால கருவன்
நேர்த்தியாய்க் கணபதி நிமலனைப் போற்றின்
காத்த வராயன் கதையைநா டகமாய்
இசைபெறும் புலவோர்க் கெதிமக்க மென்னத்
திசைதனி லோங்கச் செய்துரைத் தனனே. (5)

கட்டியக்காரன் வருகை

நெற்றியில் நாமமிட்டு நிறைந்த கபாயமிட்டு
குத்தினித்த மானுந்தொட்டு கோணங்கிக் குல்லாபோட்டு
சித்தசன காத்தமுத்து திருமனைவாசல் காக்கும்
கற்றிடும் புலவோர் மெச்சக் கட்டியக் காரன் (6)

கட்டியக்காரன் வருகிற தரு

பல்லவி

மேலு மேலு சபாசு சபாசென்ன
வேடிக்கை கட்டியக் காரன் வந்தான்

அனுபல்லவி

வால மாமதன் காத்த வராயன்
வாச லரமணைச் சேதி சொல் (மேலு)

சரணம்

சலனை வல்ல வாட்டுடன்
சாலுவையுறு மாலைக் கொண்டு
கலவிசெய் மதன்போலக்
கட்டியக்காரனும் வந்தான் (மேலு)

கையினில் பிரம்புங்கொண்டு
காலினில் சிலம்பணிந்து
தையலவர் மோகங்களாத்த
கள்ளிமுறுக்கு மீனசயுடனே (மேலு)

முகத்தில் பளபளப்பு தன்னில்
அறிக்கை சொல்ல காத்தவன்
அரன்மனை சேதி சொல்ல
மேலு மேலு சபாசு சபாசென்ன
வேடிக்கை கட்டியக்காரன் வந்தான் (7)

பொது வசனம்

மத்தளம் போடுகிற பேரும் தாளம் அடிக்கிற பேரும் சுற்றிலும் நின்று பார்க்கிற பேரும் யார் காணுந் தெரிய சொல்லுங் கோளய்யா?

நாங்கள்தான் வித்து வாங்கிஷர் வாய்யா வித்துவானோ கத்துவானோ அல்லவையானா தாங்கள் தான் கூத்தாடிகளோய்யா?

கூத்தாடிகளோ பேய்த்தாடிகளோ அல்ல ஐயா நாங்கள் கத்து சொல்லிகள் கத்து சொல்லியோ வித்து சொல்லியோ எங்களை இன்னேரம் விசாரித்தீரே; நீங்கள் எங்கிருந்து வந்தீரய்யா?

பொதுவசனம்

ராசராசாக்கள் போற்றும் ராச பிரதாபனான கண்ணனூர் அம்மன் குதிகொண்ட வானப் பதியில் வன்ன முத்தம்மாள் அருளிய காத்தவராய சுவாமியும் மந்திரி தொட்டியத்துச் சின்னானும் சாதிருக்கு வருகிறார்கள்.

காத்தவராயன் வருகை

திபிதை

இன்னிலம் புகழ்வா னூர்வா ழிசைவன்ன முத்து ஈன்ற
மன்னகாத் தவரா யன்தன் மந்திரி சின்னான் கூட
கன்னியர் கவுரி வீசக் காமவே ளிவனே யென்று
தன்னிக ரில்லை யென்று தான்மிகச் சதிரில் வந்தான் (8)

காத்தவராயன் வருகிற தரு

பல்லவி

மருவல்லார் பணிமனை காத்தவராயன் வருகிறார் - திருச்
சதிருக்குள் எதிராக இரவில் சூரியன் நிகரிவ ரென்னவே

அனுபல்லவி

எல்லாருங் கொண்டாடித் தொழுதிட - மருவல்லார்
கன்னியார் இருபுறமும் கவரிகள் வீச
கைத்தலம் தங்கப் பிரம்பையூனிக் கொண்டு
இன்னிலம் புகழ வன்னமுத் தீன்றருள்
இந்திரன் நிகர் தந்திர னாகிய (மருவல்லார்)

சரணம்

தங்கப் பட்டுஞ் சரப்பணித் தாயிகத்து - சந்திர
காவிப் பொன்னுரு மாலையுங் கண்டு - கட்டிப்
பங்கைப் பாதமுணும் பாதக் குறடும்
பளிங்கு லேகினி மூக்குச்சூரியும் கொண்டு (மருவல்லார்)

சரிகை யாலரை நிறைந்தக பாய்தரித்துச்
சாதிக்காய்பூ சல்லடங் காலில் தொட்டு
அரையினில் படகுக் கச்சு கச்சைகட்டி
அரிவையர் கண்டு அதிமோக மாகவே
காத்தவராயன் வருகிறார் திருச்சதிருக்கு எதிராக (9)

திபிதை

கட்டியக் காராய் வாடா காசினிச் சேதி யெல்லாம்
திட்டமா யறிந்து கொண்டு சீக்கிரமாய் வாடா வென்றால்
அட்டியே செய்து விட்டால் அறிக்கைசொல் லாமல் போனால்
நட்டியே உனக்குச் செய்த நான்தரும் பொருள் தானே. (10)

காத்தவராயர் சொல் வசனம்

அகோ வாரும் பிள்ளாய் கட்டியக் காராய்! நம்முடைய சதிருக்குப் பிராமணரிஷிகள் கவிவாணர் நாடகசாலை அரிதேசி. பரதேசி இவர்கள் வந்தால் அட்டி பண்ணாமல் வழிவிடும் பிள்ளாய்.

கட்டியக்காரன் சொல் வசனம்

அப்படியே நல்லதையா சுவாமி. இன்றைய தினம் காத்தவராய சுவாமி சதிருக்கு வருகிறவர் கையிலே அவதாரம் வாங்கிடச் சொன்னார்.

பொது வசனம்

நாரத மகாமுனி காத்தவராய சுவாமி சதிருக்கு வருகிற விதம்.

சிங்காரத் தரு

பல்லவி

இந்திர லோக மிருந்து நாரதரும்
இங்கே வார சொகுசைப் பாரும்

அனுபல்லவி

அந்த மிகும் வன்ன முத்தம்மாள்
இந்த சதள அரமணையை தேடிக்கொண்டு (இந்திர)

சரணம்

மேனி யெங்கும் விபூதி தாளித மகாசாபம்
மேரு மகுட சடையுடன் நானிலத்தினைக் கண்டு
மகிழ்வுறும் ரிஷிநா ரதரும் தோணினாரே (இந்திர)

கின்னரி தாள மீட்டிப் பாடி ஒயிலான
கீர்த்தி காத்தவனை நாடி நன்ன
திருசேர் வானப் பதியில் நடனமாடி
நாரதரும் தோணி னாரே (இந்திர)

கொடுவரி தோலுடையும் ருத்திராட்சம் கோர்வை
தாவடம் அழகும்நடு நாயகம் போல வேதான்
பிரிம்ம ரிஷிநா ரதரும் தோணி னாரே
நாரதரும் இங்கே வார சொகுசைப் பாரும் (இந்திர) (11)

திபிதை

அன்புசேர் காத்த முத்து ஆஸ்தானக் காராய் சேளும்
இன்பமா மும்பர் நாடு இருந்துநான் வந்தோ மிங்கே
தென்புடன் சேதி சொல்லிச் சீக்கிரமாய் வாரு மென்று
நண்பதாய்ச் சேதி சொல்லி நாரத ரனுப்பி னாரே (12)

நாரதர் சொல் வசனம்

வாரும் பிள்ளாய் வாசல் காராய்! ஏண்டா திகைக்கிறாய்? தேவலோகத்திலே இருந்து நான் வந்தேனென்று சொல்லும் பிள்ளாய்.

திபிதை

கன்னலின் மொழியாய் கேளும் கழலிணை போற்றி போற்றி
பன்னியக் கீதை வீணை பாடும்நா ரதரும் வந்தார்
உன்னுட றிக்கை சொல்லி யொருனொடி தனில்வா வென்றார்
சொன்னது உமக்குச் சொன்னேன் சுவாமிநீ ரறிந்து கொள்வீர் (13)

கட்டியக்காரன் சொல் வசனம்

சரணம் சரணம் சரணமையா சுவாமி! தெய்வலோகத்திலே இருந்து நான் வந்தேனைய்யா சுவாமி.

காத்தவராயர் சொல் வசனம்

தெய்வ லோகத்திலே இருந்து நீ வந்ததேது? முட்டாளே போடுடா கன்னத்திலே.

கட்டியக்காரன் சொல்வசனம்

என்னங்காணும்; கொள்ளைக்கார ரிஷியே! நீ வந்தாயென்று சொன்னதும் காத்தவராய சுவாமி முட்டாளைக் கன்னத்தில் போட்டுத் துரத்தி விடுவென்று சொன்னாரய்யா.

நாரதர் சொல்வசனம்

அட மூடா! நம்மை அப்படிச் சொல்லுவாரா? தெய்வலோகத்திலே இருந்து நாரதமகா முனி வந்திருக்கிறார் என்று சொல்லும் பிள்ளாய்.

கட்டியக்காரன் சொல்வசனம்

அப்படியே நல்லதைய்யா சுவாமி! சரணம் சரணமையா காத்தவராய சுவாமி தேவலோகத்திலே யிருந்து நாரத மகாமுனி வந்திருக்கிறார் ஐயா!

காத்தவராயர் சொல்வசனம்

மகா பாக்கிய மாச்சுது! வரச் சொல்லும் பிள்ளாய்.

திபிதை

நாரத முனியே வாரும் நலம்பெற சதிரில் வந்த
காரண மேதோ வென்று காத்தவ ராயர் கேட்டு
பூர ணமதி வதனப் புண்ணியா உனக்கு அன்பாய்
வாரண முலையாள் தன்னை வகைபெறப் பார்த்து வந்தேன் (14)

பொதுவசனம்

நாரதர் வந்தவுடனே காத்தவராய சுவாமி நல்ல சமாச்சாரம் வருகிறதென்று ஆசனங் கொடுத்து எங்கே வந்தீரென்று கேட்க (அதற்கு நாரதர்) உமக்கு உச்சிதமான பெண்களைப் பார்த்து வந்தேனையா

திபிதை

கூரியவேல் விழியா ளரளைக் கொட்டு நேரிள முலையாள்
நாரியர்க் குள்ளே அன்னம் நடையினாள் நளின மின்னாள்
ஆரிய தேசந் தன்னில் அரிதெனும் மாலை யென்றும்
சீருள மங்கை தன்னைச் சிறப்புடன் கண்டு வந்தேன் (15)

நாரதர் சொல்வசனம்

கேளுமையா காத்தவராய சுவாமி! ஆரிய தேசத்தினிலே ஆயிரம் சோமாசிப் பட்டர் குமாரத்தி ஆரிய மாலை யென்று ஒரு கன்னி ஏழு சுற்றுக் கோட்டைக் குள்ளே ஏழு அறைக்குள்ளே ஆயிரம் தாதிமார்களுடன் வளர்கிறாள். வெகுரூப சௌந்தரியாக இருக்கிறாள். அதுவுமல்லாமல் காவேரிப் பட்டணம் மாணிக்கச் செட்டி குமாரத்தி உகந்தாயி என்ற வெகு சுந்தர மானவள் அப்பால் செம்பு குமாரன் வனத்திலே ஏழுசுற்றுக் கோட்டைக் குள்ளே ஏழு கறுப்பருடன் பிறந்த தங்கை கறுப்பாயி என்னும் நல்ல குணமுள்ளவள். இவர்கள் மூன்று பேரையும் கைவசப் படுத்த வேணும்; தேவரீர்.

காத்தவராயர் சொல்வசனம்

அப்படியே நல்லதையா சுவாமி; ஆரிய மாலை வருணிப்பை சொல்லுமையா

நாரதர் சொல் தரு

ஆரிய தேசத்தில் சீருள்ள மங்கை காணெய்யா
அவளைப் போலும் உலகில் அரிவையரைக் காணேனையா

ஆரிய ஏழு மதிலுள்ள கோட்டைக்குள்ளையா - அந்தப்
பாவையைக் கண்டு பன்ன மொழியிது மெய்யாம்
செக்கச் சிகப்பி சித்தாடை மாது காணையா - இந்தத்
தேசத்தில் தெரிவைக் கெதிரான பெண்கள்
பண்ணிப் பதிந்தநூற் போல கிண்ண முலையுள்ள மாது - உலகில்
பாவைய ருமிவள் பாதத்துக் கொப்பணை யாகாது
கண்ணும் புருவமும் மன்மதன் கைவில்லும் அம்பும் - இந்தக்
காசினியில் இவள் போலக் கன்னியைக் காணேனையா
நூலிலும் கோருசம நுண்மை யவளிடை சுவாமி
அவளி தழ்பாகு கற்கண்டையா சுவாமி (16)

திபிதை

தெரிவைய ரழகும் இந்த தேசத்தி லொருபெண் ணில்லை
மருவுசேர் முல்லை மார்பா மாரிதா னருளும் சேயா
அரிவையர் ரூபம் சொல்ல அங்கனே கணைய தானான்
வருசுக மூர்ச்சை தீர்ந்து மாரித ளடிப ணிந்தான் (17)

போற்றியே தெண்ட னிட்ட புத்திரன் தனையெ டுத்து
நேர்த்தியாய் வாழ்த்தி மைந்தா நீவந்த வரபே றென்னக்
காத்தவ ராய சுவாமி கருத்தினில் இருக்கு மாசைக்
கேற்றதாய் கரமுந் தந்து கிருபைவந் தருள்செய் வாயே (18)

பொது வசனம்

தாயாகிய தேசமாரியைக் காத்தவராய சுவாமி அடிபணிந்த மாத்திரத்திலேயே எடுத்து வாழ்த்தி வந்த காரிய மென்ன வென்று கேட்க, நினைத்தபடி வாக்குத் தந்தருள வேண்டும் என்று கேட்கிறார் காத்தவராய சுவாமி.

வன்ன முத்து மாரியம்மை சொல் தரு

மகனேநீ குறித்துவந்த வண்மைதனை மனதறிந்தேன்
அகமகிழ்ந்து கேட்குமவர் அதைமறவா யென்மகனே
ஆரியபெண் தானொழிய ஆகாதோ மற்றொருபெண்
வாராய் குழல்மாதை மகனேநீ எங்கே கண்டாய்?
அம்புவிழி மாதரசை அய்யனேநீ எங்கே கண்டாய்?
கும்பமுலை மாதவளைக் குருநாதா எங்கே கண்டாய்?
சூழமதில் சூழ்ந்திருக்கும் ஆரியப்பெண் காவலிலே
ஏழுசுற்றுக் கோட்டைக்குள்ளே எப்படிநீ கண்டுவந்தாய் (19)

திபிதை

பாம்பணி மேனி யானே பங்கயப் பாதத் தானே
நான்பிள்ளை யானால் எனக்கு நல்லதோர் வரமுந்தந்து
ஆண்பிள்ளை பாதகி உன்கை அரிதான நீறுதந்து
வேம்பணி மாலை யானே விடையுந்தந் தனுப்பு வீரே. (20)

காத்தவராயர் சொல் வசனம்

வாருமம்மா தாயே! ஆரிய மாலை என்னும் பெண்ணை அழைத்து வரத் தக்கதாக விபூதி அளித்து வாழ்த்தி விடை கொடுத்து அனுப்புமம்மா.

மாரியம்மை சொல் வசனம்

நல்லது மகனே! என் வார்த்தையைக் கேட்டு என் அண்ணன் மாயவன் மகளும் தொண்ணூற்றெட்டு சாதியிலே வகைக்கொரு பெண்ணும் கல்யாணம் பண்ணித் தருகிறேன். ஆரியமாலை என்கிற பெண்ணை மறந்துவிடு மகனே.

காத்தவராயர் சொல் வசனம்

மறந்து விடுகிறேன்! அந்தப் பெண்கள் நாடும் குலமும் சொல்லுமம்மா:

ஏசல்தரு

அண்ணன் ஆயன்மக ளெண்ணும் உன் பெண்டாக
அத்தி தருகிறண்டா - என்மகனே!
உங்கள் அண்ணமக ளிடைச்சி ஆகாது - எந்தனுக்கு
ஆசையவள் மேலில்லை - என்தாயே!
வட்டிக்குப் பணம்தரும் செட்டிப் பெண்களைக் கொண்டு
மருவ மணம் செய்வேன் - என்மகனே!
இஷ்டமான செட்டிப் பெண்கள் எனக்குத்
தந்தை யேற்கா தெந்தனுக்கு - என்தாயே!
உச்சித மாகிய குச்சிலிற் பெண்களை
உகந்து தருகிறேண்டா - என் மகனே!
முலைக் கச்சை கட்டுமந்த குச்சலிற் பெண்கள்
கால்வழி எனக்குத் தங்கை யாமே!
உறவதான அந்த உச்சிதத் தேவசனம்
மறவர் பெண்களைக் கொண்டுதாரேன் - என் மகனே!
இரவும் பகலுமெனக் கிதம்சொல்லு மந்த

மறவர் பெண்கள் என்னுடன் பிறப்பாமே - தாயே!
ஏதேது சொன்னாலும் எதிர் வார்த்தை பேசுகிறாய்
என்ன அவள் மயக்கம் - என் மகனே!
பூதலம் புகழ்ந்த ஆரிய மாலையைப்
புணர்ந்தால் தீரும் மயக்கம் - என்தாயே! (21)

திபிதை

சொல்லுக்குச் சொல்லு வேறாய்ச் சொல்லுகிறாய் - என் மகனே!
நல்லடித் திரன்நீ யென்று நாடியே சொன்ன வார்த்தை
கல்லுக ளுருகு மந்தக் கட்டைகள் துளுக்கும் நீதான்
வல்லவர் மனம்நி னைந்த மாலையை மணஞ்செய் வீரே! (22)

பொதுவசனம்

அப்படித் தாய் சொன்ன வார்த்தைக்கு எதிரெதிராய்ச் சொல்லும்போது காத்தவராய சுவாமி மனதிலே நினைத்தபடியே ஆசிர்வாதம் பண்ணி விபூதியும் மந்திர வாளுங் கொடுத்து ஆரிய மாலையை மணம் செய்து வருவீரென்று ஆசிர்வாதம் பண்ணி அனுப்பினாள் பராசக்தி. அனுப்பவே வங்கணச் சின்னானும் காத்தவராய சுவாமியும் தேவிசணம் நோக்கி வருகிறார்கள்.

தரு

இண்ணி லத்தோர் புகழவே இயல்வன்ன முத்தே போற்றி
மன்னன்வங் கனச்சின் னானும் மால்மருகன் காத்த முத்தும்
வண்ணத்தெரு வீதிகண்டு மனதில் சந்தோ ஷங்கள் கொண்டு
அன்னைசில வுந்தா ளேன்னு ஆசைமங்கை தன்னைக் கூட
வண்ணமலை நதிகடந்து வாழும்பூங்கா வனம்க டந்து
அன்னநடஞ்செய் சோலை கண்டு அழகுகுயில் காவுங் கண்டு
மனமகிழ் கொள்ளிடம் தாண்டி வந்தார் சீரங்கப் பதியில்
கனமுடன் கங்கை யாடிக் கருணைதிரு நீற ணிந்து
தினமகிழ ஈசனைப் போற்றிச் சிந்தைதனை தளிகள் கூர்ந்து
சங்கரன்மகன் முருகன் ஈனமுடன் சீரங்கவீதி இன்பமுடன்
கண்டு மெச்சி தினகரன் ஒளிவள் காத்த சிங்காரமுருகன் நின்றான்.
(23)

திபிதை

சுற்றிலும் மதிலும் நல்ல சொகுசான கோபுரமும்
மித்தவந் தனிலே கண்டே னென்றார் சின்னான்

பக்தியாய் அன்பருக்கும் பாக்கியம் கொடுக்கும் அந்த
வெற்றிசேர் அரங்க மென்று விருப்பமாய் ஓதினானே. (24)

காத்தவராயர் சொல் வசனம்

வாரும் பிள்ளாய் சின்னான் சுற்றிலும் ஏழுமதிலும் இருபத்தெட்டுக் கோபுரமும் தெரிசின மாச்சுதே! சொல்லும் பிள்ளாய் பார்த்து!

சின்னான் சொல் வசனம்

ஸ்ரீரங்கம் என்னும் மகாஸ்தலம் அதிலே ஒருதாசி ஸ்ரீரங்கம் என்று இருக்கிறாள். அவள் ஆயிரம் பொன் நித்திரைக்கு வாங்கியும் கற்பழியாமல் இருக்கிறாள்.

காத்தவராயர் சொல் வசனம்

அப்படியா? அவளை நாம் மோசஞ் செய்யுற விதங்களைப் பாரும் பிள்ளாய்.

பொதுவசனம்

என்று கூறி காத்தவராய சுவாமி அந்தத் தாசியிருக்கிற வீதியிலே தேரின் முட்டின் மேல் ஏறிக்கொண்டு கின்னரி மூட்டிப் பாடுகிறார்

காத்தவராயர் சொல் தரு

பல்லவி

அன்னமே - அடி - அன்னமே - ஆசை - யானேனடி
இன்னம் உன்மீதில் - மிகநாடுதே - மனந்தேடுதே (அன்னமே)

அனுபல்லவி

கும்பமுலை மாத ருன்னைக் கொஞ்சிவிளை யாடிமிக்க
கூடுதே கின்னரி பாடுதே - அன்னமே
காமனைந்து கணையாலே கணையாய் வருகுதடி
அஞ்சியே - அடிவஞ்சியே (அன்னமே)

சரணம்

கொஞ்சுகிளி விலைமாதே கோதையே
உந்தனைக் கூடத் தேடுதே - மனம்நாடுதே
அன்புடன் காத்தமுத்து அய்யன்கின் னரியை மீட்டிப்
பாடவே பெண்கள் மனம் நாடுதே (அன்னமே) (25)

திபிதை

கின்னரி ஓசை கேட்கும் கீதை சீரங்கத் தாசி
நண்ணாக மீட்டிப் பாடும் நாயகன் ஆரடிசொல்
விண்ணாட்டில் கண்ட தில்லை மெல்லியே யவன்சு ரூபம்
பண்ணாகப் பாடு மிந்தப் பரிமளன் தனைய ழைப்பாய்! (26)

ஸ்ரீரங்கதாசி சொல் வசனம்

அகோ வாருங்களடி பெண்களே; கின்னர ஓசையுடனே இத்தனை சொகுசாய்ப் பாடுகிற புருஷன் யாரடி பெண்ணே!

தாதி சொல் வசனம்

இந்த நாட்டிலே அவனைப்போல புருஷனைக் கண்டதில்லை அம்மா!

தாசி சொல் வசனம்

மகாபாக்கிய மாச்சுது! அவனை அழைத்துக் கொண்டு வாருங்களடி பெண்களே!

தாதி சொல் வசனம்

அப்படியே அழைத்து வருகிறேன் அம்மா!

திபிதை

ராசமன் னவனே கேளீர் நங்கையா ளழைக்கச் சொன்னாள்
காசுடன் பணமும் வேண்டாமுன் கைவினை ஓசை போதும்
வாசமாம் சீரங்கத் தாசி வரவிடும் தாதி யோநீ
ஆசையாய்க் காத்த முத்து அவளகந் தனில்ந டந்தார். (27)

தாதி சொல் வசனம்

வாருமையா ராசகுமாரனே! உம்மை எங்களம்மா அழைத்துக் கொண்டு வரச் சொன்னாள். ஆனபடியினாலே வந்தோம்.

பொது வசனம்

மகா சந்தோஷமாச்சுது! அந்தச் சீரங்கத்தாசி என்னை அறிவாளோ? என்று அவ்வளகத்துக்கு நடக்கும் போது காத்தவராய சுவாமியை சீரங்கத்துத் தாசி எதிராக வந்து தழுவிக் கொண்டு

தன்னுடைய பஞ்சணை மெத்தை மீதில் வைத்துக் கொண்டு பேசுகிறாள் சிங்காரமாக.

ஏசல் தரு

பல்லவி

எந்த நாட்டிலிருந்து வந்தீரோ என்சாமி!
என் எண்ண மீடேறினேன் என்சாமி!

அனுபல்லவி

சந்திர வதனாளே பெண்மயிலே - அடிபெண் மயிலே
தமியாக வந்தேன்சேர் - பெண்மயிலே - இந்தவேளை.

சரணம்

என்சேர் என்சாமி ஓகோ என்சாமி
என்னபாக்கியம் பெற்றேனையா - என்சாமி!
சிந்தனை இல்லாமல் பேசும் பெண்மயிலே!
ஓகோ பெண்மயிலே!
நானுன் மையில் பெண்மயிலே
வெற்றிலையில் மருந்தை இட்டுச்
சுருள்மடித்து - அவள் சுருள் மடித்து
வேண்டியவர் கையில்தந்து - சுவாமி
திண்ணென் னாளே.
கற்றவித்தை சூதறிவேன்
வெற்றிலை தன்னில் - பெண்ணே
வெற்றிலை தன்னில்
கனிவாயி லுள்ளடக்கி மென்று - திண்ணாரே. (28)

திபிதை

சத்தும் மொத்தம் சிணுங்கி நின்று முத்து மூக்குத்திச்
சந்திர காவிச் சேலை ஓலை சிந்தாக்கு வேணும்
பத்தினி வன்னமுத்த மன்றாளுஞ் செயனார்
பணமுடன் கடக்கணந் துணாள் சரப்பளி தந்தாள். (29)

தரு

இவள்காத் திரிக்கு இராமுப்பதும் இருந்தறிந்து
அவள் சோர்ந்து விழவே - அள்ளி

வென்னீர் தாமெறிந்து குவளைவிழி அசைத்துக் குலுக்கி
அவளைப் பாரில்விழுந் தாள்தவித்து வீழ்ந்தவள்
களபொரு வளையெல்லாம் தான்பறித்து
அதுவேளையா மென்னாலே
அவளகம் விட்டுவந்து இதுவேளை சமையமென்று
இனிமந்திரி சின்னான் வாரீர்
சீரங்க பதிறங்க எல்லை - திருத்தங்கை மருகன் தாண்டி
விதமாகப் பேசிக்கூடி வெகுதூரம் தானடைந்தார்.

திபிதை

சிந்தை மகிழ்ந்து நின்று சீரங்கம் தாண்டி அப்பால்
விந்தைசேர் நந்தவனம் வேடிக்கை யாகப் பார்த்து
பைந்தொடி மாலைக் கன்னிப் பாவையாள் சூழக் கண்டு
சுந்தரரூபன் சுவாமி சுகித்திடுங் கிளியேதானான் (30)

பொதுவசனம்

காத்தவராய சுவாமியும் வங்கணச் சின்னானும் சீரங்கம் விட்டு வார வழியிலே, பூங்காவனம் கண்டு, யாருடைய நந்தவனம் என்று கேட்கவே அதிலே ஆரியமாலையும் சிறிது தாதிமார்களுடனே பூங்காவனம் வருவதைக் கண்டு காத்தவராய சுவாமியும் பஞ்சவர்ணக் கிளிபோலே நின்று கூப்பிட்டார்.

ஆரியமாலை சொல்தரு

பல்லவி

கிள்ளைதனைப் பிடியுங்கடி, தாதிமார்களே!
கிள்ளைதனைப் பிடியுங்கடி!

அனுபல்லவி

கள்ளப் பார்வை பார்க்குதிதோ காசினியில் கண்டதில்லை
மெள்ளநாத தூங்கலோசை மெத்தென நடந்துமிக்க (கிள்ளை)

சரணம்

அம்பினாலே எய்ய வேண்டாம் அதிதியுடன்
ஆடிப்பாடி போகவேண்டாம்
கும்பமுலை மாதே நீங்கள் குழுவாக
கண்ணி கொண்டு வைத்து
இன்பமுடன் கிளிதன்மேல் விசையா ளென்றாள் மிக்க (கிள்ளை)

சுத்திலூர் நந்தவனம் தனில் - தாதிமார்களே
மெத்தெனச் சூழ்ந்து கொள்ளுங்கடி!
கற்றவித்தை பேசவேண்டாம் கைக்குள்ளே கிள்ளைச் சிக்கி
உத்தமியே உன்தயவு உண்மை வைத்து அன்புடனே (கிள்ளை)
(31)

பொதுவசனம்

ஆரியமாலை சொல் கேட்க கிளி பறந்து அவ்விடத்தில் காதிலேறச் சீருடன் அணைத்துக் கொண்டாள். சிந்தை மிக மகிழ்ந்தனள் கணிகை ஆரியமாலை கடிகி அரண்மனையில் வந்தாள் கிள்ளை தனை பிடித்துக் கொண்டு.

திபிதை

அடவுடன் கிள்ளை தன்னை ஆரிய மாலை கண்ணி
திடமுடன் பிடித்துக் கொண்டு சீருடன் கொலுவில் வந்தாள்
மடமயில் எதிராய்ச் சின்னான் வந்தவன் மாயகாலங்
கடகக்கைக் கிள்ளை தன்னைக் கவ்விக்கொண் டோடி னானே(32)

பொதுவசனம்

ஆரியமாலை பூங்காவனத்திலிருந்த பஞ்சவர்ணக்கிள்ளை தனைப் பிடித்துக் கொண்டு வெகு சந்தோஷமாகித் தன் கொலுவில் வந்து இரத்தினம் இழைத்த கடகத்தின் மேலே கிளியை வைத்துக் கொண்டு ஆசையுடனே விளையாடிக் கொண்டு இருக்கிற வேளையிலே வங்கணச் சின்னான் அவள் மோகத்தினாலே கொஞ்சறதிலே சுவாமிகள் வாரதில்லை என்று எண்ணி மாறுசாலமான பூனை வடிவெடுத்து ஆரியமாலை மனந் திடுக்கிடப் பயப்படாமல் கவ்விக் கொண்டு போய் காதவழி நடந்து விட்டான். கிளியாகிய காத்தவராய சுவாமியை விட்டான்.

திபிதை

வங்கணச் சின்னான் வாடா மாலையாள் தாமி ருக்க
அஞ்சாமல் கவ்விக் கொண்டு அடஞ்செய்து கொண்டு வந்தாய்
பஞ்சபா தகத்தில் மீறும் பாதகா பாவி யென்று
ரஞ்சித காத்த முத்து நலம்பிற ஓதி னானே. (33)

காத்தவராயர் சொல் வசனம்

வாரும் பிள்ளாய் வங்கணச் சின்னான்! ஆரிய மாலை கையி லிருந்து விளையாடுகிற வேளையிலே நீ என்னைக் கொண்டு

வந்தது எப்படி இருந்தது என்றால், "மணையில் பெண்ணைத் தூக்கிக் கொண்டு போனாப் போலவும்." "பாலுஞ் சோறும் கலத்திலே இட்டு கையைப் பிடித்துக் கொண்டது போலவும் இருந்தது."

சின்னான் சொல் வசனம்

அவள் முகத்தைக் கண்டவர்கள் திரும்பிப் போறதில்லை. ஆனபடியினாலேயும் தேவர் சித்தம் சும்மாயிராது அதை மனதிலே வைத்துக் கொண்டு எடுத்து வந்தேன் சுவாமி. வண்ணாரநல்லி வீட்டுக்குப் போய் அவள் வர்த்தமானமெல்லாம் கேள்விப்பட்டு பின்னை அவளைக் கொண்டுவரலாம் சுவாமி.

திபிதை

இந்தவூர் புதுமை என்ன எனக்குநீ யறியச் சொல்வாய்
விந்தைசேர் நல்லி யந்தார் விளம்பிடும் வசன மென்ன
கந்தனே குமார சுவாமி காத்தவ ராயா கேளீர்
பந்துநே ரிளமு லையாளாரிய பாவையாள் சீர்மையென்றாள். (34)

குயில்மொழித் துயிலெழுந்து கோறையாத் தங்க ரைக்குப்
பயணமாய்ப் போறேன் அப்பா பாலகா என்று கூறக்
கயல்விழி மாதே நல்லிக் கார்குழல் துயிலே தந்தால்
வயனமாய் வெளுத்துக் கொண்டு வாரேன் என்றுரை செய்தான். (35)

தாமரை ஓடைப் பக்கம் தையல்பூங் காவு முண்டு
மென்பெறும் சோமாசிப் பட்டர் வேண்டுநல் வயலு முண்டு
சாமளி துர்க்கைக் கோயில் சமீபத்தில் இருக்கும் அப்பால்
ஓமல்செய் யாமல் துயில்வெளுத் துகந்துநீ வருகை தானே. (36

தரு

ஆடைகள் பொன்னாடை வஸ்திரம்
அயன் மூட்டையாகக் கட்டி
நாடெல்லாம் தூக்கிக் கொண்டாட
நறுக்குதாவின் முதுகில் போட்டு
பாடக கால மாலை சேலை
பழுதில்லாத காணம் கட்டி
வாடை வீசுங் கங்கைக் கரையில்
வருகிறாரே காத்தமுத்தும்

வந்தவர் கங்கைக் கரையில்
வாசம்பெறு மூட்டைத் தள்ளி
அந்திநேர மட்டும் மேய
அன்புடன் குதாவை யோட்டி
சந்ததங் கரும்பைப் போலத்
தமியாகத் தின்னு மென்று
சொந்தமாய் பூங்காவைக் காட்டி
சுவாமியும் வருகின் றாரே. (37)

திபிதை

வளாய்த் தேனான காத்த வல்லவன் மனதி லெண்ணி
யாளிவா கனத்தி லேறு மவள்தனை தோத்திரம் செய்ய
காளிதன் மனத றிந்து காத்தவ ராயன் நினைந்தா னென்று
பானைசேர் குழலாள் காளி பாலன்முன் தோன்றி னாளே. (38)

காளியம்மை தோன்றுகிற தரு

பல்லவி

வெற்றி சேர் உக்கிரமா காளி
வேலவன் தோன்றி னாளே.

அனுபல்லவி

பத்தியான பாலன் முன்பாய்
பத்திரகாளி தோன்றி னாளே.

சரணம்

முத்துவண்ணச் சேலைகட்டி மோகன
மாலை யணிந்து
சுற்றிலும் பூதங்கள் சூழ
இந்திர காளி வந்தாளே.
நெற்றியிலே வெண்ணீ றணிந்து
நீல ஒளிப்பொட்டு மிட்டு
கத்திசூலங் கையில் கொண்டு
காளியும் வந்துதோன்றி னாளே.
கணங்கள் குடை பிடிக்க
கன்னியர்கள் கவுரி வீச

அனங்கெனும் காளி யம்மை
அய்யன் முன்பாய்த் தோன்றினாளே. (39)

திபிதை

தஞ்சமென் றழைத்த தென்ன தமியாளை மகனே இப்போ
அஞ்சுக மொழியாள் கூறும் அப்பனே என்று கூற
வஞ்சியாள் சேலை தப்ப வரவிடும் பூத மம்மா
பஞ்சுமெல் லடியி னாளே பகவதி எனச்சொன் னானே (40)

மாரியம்மை சொல்வசனம்

அகோ வாரும் தம்பி காத்த முத்து! என்னை அழைத்த கவை என்ன? சொல்லு

காத்தவராயர் சொல்வசனம்

லோக பராசக்தியே இந்த ஆடையை எடுத்து அடிக்க பூதங்களை வரவிடும் அம்மா!

மாரியம்மை சொல்வசனம்

அப்படியே அனுப்பு விக்கிறேன் மகனே!

திபிதை

ஆதர வாகச் சொன்ன அன்புள்ள காளி யேவல்
பூதங்க ளிரைஞ்சு கொண்டு பூமியும் நடுங்கத் தானே
சீதரன் காத்த முத்துச் செல்வனைத் தேடிக் கொண்டு
காதலாய்ப் புகழ்ந்து கங்கை கரைதனைக் கண்டுது இப்போ. (41)

பூதங்கள் வருகிற தரு

பல்லவி

தந்தினதென தெந்தினா தெந்தினனா தினாதென் னானா
கையில்தண்டுங் கொண்டு காளிகாவல் காத்திருக்கும்

அனுபல்லவி

பூதம்அய்யன் காத்த முத்துயேவல் அன்புட னேமிகச்
செய்ய வைய்யநடுங் கிடவே - பூதம்
வந்தென் களரியில் தோன்றிடுமாம் (தெந்தின)

சரணம்

அண்ணாவே பிரம்மா நமக்கு
நண்ணாய்த் தலையிலெழுதி விட்டாய்
வண்ணார நல்லிப் புடவை
வாங்கித் தப்பவும் ஆனோமே (தெந்தின)
நண்டுசட்டித் தலையும் நல்ல
கோட்டான் போல இருவிழியும்
அண்டை வெட்டினாப் போல வாயும்
அழகான கைகால் வீதம்
மண்டலம் நடுங்கிடவே பூதம்
வந்தே வளரியில் தோன்றிடுமாம் (தெந்தின)
பதிங்கலச் சால்வயிறும் - மூக்கு
பரிக்கோட்டை வழிக்க வந்ததுபோல
ஒதுங்கியே மலடாதில் கொணாய்
ஓசையிட்டு வந்தது போல
விதங்கொளுங் காத்தமுத்தைத் தேடி
வேடிக்கை பூதம்வர வரத்தே (தெந்தின) (42)

திபிதை

திருவளர் புயனே காத்தமுத்துச் செல்வனே அழைத்த தென்ன
மருமிகு காளி ஏவல் வணங்கியே இங்கு வந்தோம்
எரு கேளாய்ப் பூதம் மொயங்கியே சேலை தப்பிப்
பெருமைசேர் பாறை மீதில் போட்டுநீ ருலத்து வீரே. (43)

பூதங்கள் சொல் வசனம்

ஆகோ வாருமையா காத்தவராய சுவாமி! காளியம்மையும் ஏவல் பணிவிடை செய்ய அனுப்பிவித்தாள் ஆனபடியாலே வந்தோமய்யா!

காத்தவராயர் சொல் வசனம்

மகா சந்தோஷமாச்சுது பூதங்களே! இந்தப் புடவையை நன்றாய்ச் சலவை பண்ணி உலர்த்தி மடித்துப் பண்ணுங்கள் பூதங்களே.

பூதங்கள் சொல் வசனம்

அப்படியே நல்லதையா சுவாமி.

திபிதை

பொன்னிற மாலை ஏவல் புரிந்திடும் தாதி மார்கள்
இன்னிலம் மெச்சத் தானே இவர்களும் கூடிக் கொண்டு
நன்னியப் பூங்காத் தேடி நாடிமா துகளும் வந்தார்
மின்னலின் ஒளிவள் போல மெல்லியருந் தோன்றி னாரே. (44)

தாதியர் வருகிற தரு

பல்லவி

சீறாய்த் தாதியர் வாறார் பயனாய் - சிங்காரமாகச்
சீறாய்த் தாதியர் வாறார்.

அனுபல்லவி

பாறாள் ஆரிய மாலைப் பணிவிடை
செய்யும் பெண்கள் (சீறாய்)

சரணம்

சந்திரகாவிச் சேலையுங்கட்டி அம்புகள் எய்யும்
மந்தமதப் பையிலைத் தெட்டிப் புகழ்த்தாக
விந்தை பெறுந் தம்பூரைமீட்டி - வேடிக்கையாக
பந்து இளந்தனத்தைக் காட்டி - அதிகமான (சீறாய்)

சிங்கார வார்த்தைகளைப் பேசிப்பதங்கள்
பாடிஇங்கித வாதுகளையே அன்னநடையார்
கொங்கைமேல் சவ்வாதுகள்பூசி இருபுறமும்
தங்கள் கரத்தைவீசிச் சொகுசாய் (சீறாய்)

நெற்றியில் செந்தூரப் பொட்டிட்டு சரிகையாலே
குத்துமுலை ரவுக்கைத் தொட்டு அரையில்சேலை
பத்துலட்சம் பொன்பெற்ற பட்டு ரத்தினம்
பெத்தஉச்சித தங்கப்பணி யிட்டு ஒயிலாக (சீறாய்) (45)

திபிதை

பத்தினி மாலை யாளுக்குப் பணிவிடை செய்யும் பெண்கள்
சித்திடை மாது நால்வர் சிங்கார வனத்தைத் தேடிப்
பக்தியாய் மலருங் கொய்து பாவையர் அணுகும் போது
கத்திடுங் குதாலைக் கண்டு கலங்கியே விளங்கி னாரே. (46)

செங்கமலவல்லி சொல் வசனம்

பெண்களுக்குச் சேனாபதியான செங்கமல வல்லி கோபித்துக் கொண்டு, அன்னவல்லி, கமலவல்லி அதிரூபவல்ல இந்த ஆண்மையுண்டா? வண்ணார நல்லிக்குப் புடவை எடுத்து தப்பினால் இப்படி நந்தவனத்தை அழிக்கலாமா? இத்தனை ஆங்காரமா? அந்த வண்ணார நல்லியை அழையடி பெண்களா?

தாதியர் சொல் வசனம்

அப்படித் தானே அழைக்கிறோம் அம்மா!

திபிதை

ஆருடா வனத்தை நீதான் ஆண்மையாய்க் குதாவை விட்டு
வேருடன் பிடுங்கித் தின்ன விட்டியோ கெட்டி கட்டி
சீருட னிருக்கும் அந்தச் செல்வியாள் மாலை யண்டை
பாரடா உன்னை ஆட்டம் பண்ணுகிறேன் நானும் என்றாள்.

தாதியர் சொல் வசனம்

ஆருடா பூங்காவனத்தை எல்லாம் குதாவை விட்டு அழித்துப் போடுகிறாய். அரசியான ஆரியமாலை யண்டையிலே உன்னைக் கொண்டு போய் ஒரு ஆட்டம் பண்ணி விடுகிறோம் பாரும் பிள்ளாய்.

ஏசல்தரு

வண்ணான் காத்தவராயர் சொல்தரு

ஆரிடா ஏகாலி வாடா வென்று அழைக்க
அதிகார மென்னடி உந்தனுக்கு?

தாதி சொல் தரு

சீராஞ் சோமாசி யருள்செல்வி
வனத்தை எல்லாம்
திருடா நீயழித்து விட்டாய் அதனாலே

வண்ணான் காத்தவராயர் சொல் தரு

திருடாவென்று அழைத்தாய் திருடி - ஆரியப்பெண்ணை
தட்டிக்கொண்டு வந்தேனோ? என்னடி தாதி?

தாதி சொல்தரு

புருடாய்ப் பண்ணுகிறாய்நீ பூவை மாலையாள் கேட்டால்
போடுவாள் கால்விலங்கு பொய்யல்ல வாடா!

வண்ணான் காத்தவராயர் சொல் தரு

போடுவாளோ விலங்கு பூவைகைப் பிடித்தேனோ
பொல்லாப்புப் படவேண்டாம் பூவையரே! (ஆரிடா)

தாதி சொல் தரு

கொடுமுலைக் கன்னியை வீடுசொல்லிப் பேசுகிறாய்
கொஞ்சமாய்ப் போகாது குடிகேடா வாடா!

வண்ணான் காத்தவராயர் சொல் தரு

கொஞ்சமா நானுமென்னவஞ்சி சலுகை வந்து
குத்திடுமோ கொல்லுமோ கோரைப்பல்லி யடி (ஆரிடா)

தாதி சொல் தரு

அஞ்சிப் பேசாமல் போனாய் ஆகாலி ஏகாலி அறிவேன்
உன்சேதி யெல்லாம் அமட்டுகிறாய் வாடா! (47)

திபிதை

சிலைந்தல் தாதி மார்கள் சிவசிவா வண்ணான் இந்த
தலமையை யாளும் பெண்ணைத் தாழவே வைதா னென்று
பலப்பல நினைவ தாகிப் பாவையர் ஒருநொ டிக்குள்
நலமிகு மாலை முன்பாய் நாயகம் புலம்ப லுற்றார் (48)

தாதியர் ஆரிய மாலை முன் புலம்பல் தரு

பல்லவி

சரணம் அம்மா தாயே உந்தன் தாளிணைக்கு - சரணம் அம்மா!

அனுபல்லவி

துரணமாக வண்ணான் உன்னைச் சொன்ன
சொல்லை என்ன சொல்வேன் (சரணமம்மா)

சரணம்

கத்துங்குதாக் காலில் விட்டான்
உன்னைக் கற்பழியப் பேசிவிட்டான்

உத்துஉன்னைப் பார்த்தவன் போல
　　பாவிஉருவை எல்லாம் சொல்லி விட்டான்.
கிண்டி விட்டு சண்டை பார்த்தான்
　　உன்னைக் கிள்ளுக் கீரையாக்கி விட்டான்
சண்டி வண்ணான் சொன்ன சொல்லைத்
　　தாயே நாங்கள் ஏதுரைப்போம். (49)

திபிதை

தாதியர் சொல்லக் கேட்டு சங்கரா என்று மாயன்
சோதனை நானே ஈசன் புண்ணிய மிதுவோ என்று
காதலாய் வைத்த பூங்கர காறண ரில்லாப் போலே
ஏதிவ னழிப்பு கென்று இசையுடன் புலம்பி னாளே (50)

ஆரியமாலை சொல் தரு

பத்தினி தன்னைப் பழுதாய் உரைத் தானே - சிவனே
பாரில்பர தேசியாய் பாரிலாக்கி விட்டாய்
பிரம்மா இத்தனைப் பழுதாக என்னை ஏசுவானோ - சிவனே
உமக்கெள் ளளவுங் கிருபை இல்லாமல் போச்சுதே - சிவனே
கோவில் படியைக் குறைஅளந் தேனோ சிவனே - என்று
கொஞ்சமா கிலுமுன்னைக் குறித்து அறியேனோ - சிவனே
நாவில் பழுதாக நல்லோரைச் சொன்னேனோ - தெய்வமே
இந்த நிலைமையோ ஏகாலி நாடியென் னையே - சிவனே (51)

திபிதை

புலம்பிடும் சத்தம் கேட்டுப் புண்ணிய சோமாசி மார்கள்
பிலங்களும் குன்றிச் சீறிப்பே தையா ளிடமே தேடி
நலம்பெறும் மாதே உன்னை நாவினால் பழுது சொன்ன
வலம்பனார் உரைசெய் யென்று மாதவர் தோணி னாரே (52)

பொதுவசனம்

ஆரியமாலை புலம்புகிற சத்தங் கேட்டு சோமாசிமார்கள் ஆயிரம் பேரும் அதிகோபத்துடனே புறப்பட்டு ஆரியமாலை இருக்கும் ஏழு சுற்றுக் கோட்டைக்குள்ளே வருகிறார்கள்.

சோமாசிமார்கள் வருகிற தரு

பல்லவி

அய்யமா ரிங்கே வருகிறார் - மிக
அலங்கார வேடிக்கை யாகவே

அனுபல்லவி

கையால் சிகையும் உதறியே
கழுத்திலே முப்புரிநூ லுருவியே

சரணம்

பிள்ளைக் கலிநீத்த நங்கையே
உன்னைப் பேசினவர் யாரிங்கே
எள்ளள வும்பய மில்லாமல் உன்னை
ஏசினவரை சொல் என்ற
சிங்கார மானஎன் செல்வியே - புவி
நங்கைய ருக்கெல்லாம் தங்கமே
இங்கித குணமான மங்கையே - சிவ
சங்கரன் பூசைக்குள் தங்கையே
அச்சமில் லாமல் வந்தாரோ - உன்னை
லச்சைக்கு வாவென்று சொன்னாரோ
இச்சையில் லாமலே சொன்னாரோ - வெண்ணறு
கச்சைகட்டி அய்யர் வந்தாரோ (53)

திபிதை

மாதவர் வந்து செல்வ மங்கையே புலம்பவேண்டாம்
மேதினி தனிலே உன்னை விசேடங்கள் சொல்லும் பேரை
ஆதரவாகச் சொல்லும் அதிரூப மகளே என்று
காதலால் வந்த அய்யர் காரிய மாகக் கேட்பார் (54)

பொதுவசனம்

அகோ வாருமம்மா! என்று மாதவாகிய ஆயிரம் சோமாசிமாரும் வந்து உன்னை விசேடங்கள் ஏறுமாறாய்ச் சொன்னவரைச் சொல் என்று கேட்கிறார்கள் சோமாசிமார்கள்.

ஆரியமாலை சோமாசிமார்களிடம் சொல் தரு

பல்லவி

என்ன சொல்வே னைய்யமாரே - நான்
ஏது சொல்வே னைய்யமாரே

அனுபல்லவி

வன்னமட மாதே உன்னை - மனங்
கலங்கச் சொன்ன வார்த்தை
பன்னுமொழி நல்லி வீட்டில் - ஒரு
பயபல துணிவ தாக
சொன்ன சொல்லை என்ன
சொல்வேன் சோமாசி அய்யமாரே

சரணம்

தாதியரைப் பேசியதும் தமியேனை ஏசியதும்
வேதவல்லா ரைகோணம் வேசியற்போ லாக்கி என்னை
கோதுமயி லாடுஞ்சோலை கோசரத்தை விட்டழித்து
சூதக வண்ணான் என்னைச் சொல்லாதுஞ் சொன்னான் ஐயா (55)

திபிதை

சொன்னது செவியில் கேட்டுச் சோமாசி மார்வெ குண்டுக்
கன்னிமை புலம்ப வேண்டாம் காரிய வசம தாக
மன்னிய ஒருநொ டிக்குள் வண்ணானைப் பிடித்து வருகிறோம்
அன்னமே அஞ்ச வேண்டாம் அவன்தனைப் பிடித்து வாறோம்
(56)

சோமாசிமார் சொல் வசனம்

அகோ வாருமம்மா ஆரியமாலை! உன்னை வில்லிடும்பாய்ச் சொன்னவனைப் பிடித்து வந்து சிர ஆக்கினைப் பண்ணிப்போடுகிறோம் அம்மா.

சோமாசிமார்கள் வண்ணானைப் பார்க்கச் சென்ற தரு

பட்டஞ்ச வேட்டி உடுத்து பரிமள கெந்தம் பூசித்
திட்டமாய்த் திருநா மமிட்டு சகியைப் பிடித்துக் கொண்டு

இஷ்ட முடனே சோமாசிப் பட்டர் தோணி னாரே
நந்தவனம் தன்னைத் தேடி நான்குதிக்கும் பார்த்துக் கொண்டு
சுந்தரச் சோமாசி மார்கள் சொகுசாக வேந டந்தார்
ஆரடா குதாவை விட்டு ஆங்காரி ஏகாலி என்று
நேரதாப் பூங்காவை வந்து நின்று பார்த்தார்கள் - தோட்டத்தை
சுற்றி வந்தார்கள் துடந்தக் கெஷியைப் பாதகாரகஞ் செய்த
வண்ணான் எங்கே போனான் என்பார்கள் (57)

சேவகன் போல் காத்தவராயர் வருகிற விதம்

திபிதை

வண்டிபோல் பாகை கட்டி வரிசையாய் கபாய்த் தொடுத்து
மண்டல மகுமச்சம் வாளும் பாங்குட னீட்டிக் கொண்டு
அண்டையி லிருந்தோர் மெச்ச ஆறணிச் சவுக்குங் கொண்டு
கொண்டவன் மருகன் வந்து கூப்பிட்டான் ஐயா மாரே (58)

காத்த சேவகன் சோமாசிமார்முன் தோன்றிய தரு

பல்லவி

ஆரியப்பூ மகாராசன் அனுப்பும் ராவுத்தன்
காரிய வசமதாகக் காத்த சேவகனும் வந்தான்

அனுபல்லவி

மீசையை முறுக்கிக் கொண்டு மினுக்கு கபாய்த் தொடுத்து
ஆசையுட னேரா வுத்தன் அய்யமார் முன்பாக வந்தான்
சோமாசிப் பட்ட ரெல்லாரும் சொன்ன பணம் தாருமென்று
எமராசன் தரவள் போல எதிராய் வந்து தோணி னானே (59)

திபிதை

பணமதைத் தாருங் காணும் பார்புகழ் அய்ய மாரே
குணமதாய் என்கையில் தந்தால் கூசாமல் போவேன் நான்
சினமதில் நீட்டிக் கட்டிச் சிக்கிய அண்ணாந் தாலும்
மனமுடன் பொருளைத் தந்து மாதவா அனுப்பு வீரே (60)

சேவகனாரிடம் சோமாசிமார் சொல் தரு

பல்லவி

காட்டினில் வளைத்துக் கொண்டு
கையில்பணம் தாருமென்னும் சேவகனாரே - இப்போ
சாட்டிக் கொண்டு அடித்தாலும்
தருவோமோ பணமிப்போ சேவகனாரே

அனுபல்லவி

எண்ணாமல் வனமழித்து வண்ணார நல்லிக்கு ஏத்த சேவகனாரே
கொன்றாலும் பணம் வருமோ கூப்பிடாமல் போங்காணும்
சேவகனாரே

சரணம்

வட்டிக்குக் கொடுத்தவன் போல
வழியில் மறித்துக் கொண்டாய் - சேவகனாரே
பொன்பெட்டி எடுத்தவன் போல
பிறகாலே ஓடிவந்தாய் - சேவகனாரே
அஞ்சாமல் மறிக்க வந்த
ஆணவம் உனக்கேது இப்ப - சேவகனாரே
மிஞ்சின வார்த்தைகள் சொல்ல
மேலுமை யார் கொடுத்தார் - சேவகனாரே (61)

திபிதை

இன்னமும் கலவி யோத இனிவிடேன் ஐய்ய மாரே
பொன்னதே வாங்கிக் கொண்டு போறேன் நான்அர மனைக்குச்
சொன்னது கேளா மூர்க்கச் சேவகர் சொல்லக் கேளாய்
மன்னியே அகத்தில் வந்து வளர்பொன்னைத் தருகிறேன்கான்(62)

காத்த சேவகன் சொல் வசனம்

அகோ வாருமையா மாதவரே உங்கள் கையிலே ரொக்கமாய் பொன்னை வாங்கிக் கொண்டு போவேன் காணும்.

சோமாசிமார்கள் சொல் வசனம்

மகா சந்தோஷமாச்சுது; அகத்திலே போயி நீ கேட்கிற திரவியத்தைத் தருகிறோம். வாருங்காணும் ராவுத்தரே.

காத்த சேவகன் சொல் வசனம்

அப்படியே யாகுது இந்தக் கேணியிலே சாப்பிட்டு வருகிறேன் நடவுமய்யா சுவாமி.

காத்தவராயர் பண்டார வேடம் தரித்துத் தோன்றுகிற விதம்

திபிதை

நெற்றியில் நீறணிந்து நிறைகாவி தரித்துக் கொண்டு
சித்தாண்டி ஒருவன் கூடத்திறமுடன் இவரைப் பார்க்க
ருத்திராட்ச மாலை மார்பில் உகந்தவர் தரித்துக் கொண்டு
பக்தர்கள் தோத்திரம் செய்யக்காத்த பண்டாரம் தோன்றினாரே
(63)

காத்த பண்டாரம் சொல் தரு

பல்லவி

தந்தனான தந்தனான தந்தனா தந்தனான தந்தனான தந்தனா

அனுபல்லவி

அன்பானதோ எங்கள் வானூரத்துக்கு
தென்மேற் காள்கோலிய நல்லூர்
நண்பான நகர் வளவனூர் - நல்ல
நங்கைய ருள்ள திருநாமநல்லூர் (தனதந்தனான)

பேரான உக்கிர நாடு
பெருமைக்குத் திருவாலன்காடு
காராளர் புகழ்கொ டைநாடு - அத்தைக்
காசியில் வாழ்ந்து காவடிக் காதி
கனத்த அதிகன் பரவுதேவடி
வீசிவந்தார் குமரவடி என்னும்
விந்தமடி தொழுவோர்க்கு என்திருவடி (தனதந்தனா)

நலமான குறிகளும் சொல்வேன்
நாடெல்லாம் மெச்சஅமைதி யாவேன்
பலமான சாங்கத் தொளிப்பேன் - இப்போ
பேசாமல் வனத்தி லொருசாமம் இருப்பேன் (தனதந்தனா) (64)

திபிதை

அய்யரே தம்பி ரானே ஆருங்காணும் வாருமிங்கே
தையலால் குறிகள் கேட்கத் தயவுடன் அழைக்கச் சொன்னவள்
வையகம் மெச்சும் எந்தன் வாக்கிட்ட குறிக ளெல்லாம்
கையதை விரித்துக் கொண்டு களிப்புடன் காத லுற்றார் (65)

தாதியர் சொல்வசனம்

அகோ வாருமையா தம்பிரானே! மகா பெரியவராய் இருக்கிறீர். நீர் குறிசொல்லுகிற அதிசயங்களைக் கேட்டு மகா சந்தோக்ஷமாகி ஆரியமாலை என்னும் எங்கள் அம்மா அழைத்துக் கொண்டு வரச் சொன்னாள் ஐயா!

காத்த பண்டாரம் சொல் வசனம்

அப்படித் தானே வருகிறேன். நடவுங்கள் பெண்களே!

திபிதை

பண்டாரம் வந்தா ரம்மா பலித்திடும் குறிகள் சொல்ல
ஆண்டாழமைப் பேசும் வண்ணான் அவனிலை அறிந்து சொல்ல
மண்டலம் மெச்சும் மாதே மகிமையோ யவன்சொல் வார்த்தை
எண்டிசை மெச்ச சாஸ்திரம் இயம்பிடச் சொல்லுந் தாரிர்

தாதியர் சொல் வசனம்

அகோ வாருமம்மா ஆரியமாலை! இந்தப் பண்டாரம் மகா பெரியவர். தொண்ணூறத்தைந்து வயது சென்றவர். இவர் சாஸ்திரம் சொன்னது சொன்னபடி பலிக்குது. அந்த வண்ணானிருக்கும் நிலையைக் கேட்டால் சொல்லுவார். ஆனபடியாலே அழைத்துக் கொண்டு வந்தோமம்மா.

ஆரியமாலை சொல் வசனம்

மகா சந்தோஷமாச்சுது; குறிகளைக் கேளுங்கள் பெண்ணே.

தாதியர் சொல் வசனம்

வாருங்காணும் பண்டாரமே! அம்பாள் நினைத்த குறிகளை சொல்லுங்களைய்யா.

காத்தபண்டாரம் குறி சொல்கிற தரு

பேரால் பெரியவன் பேருள்ள
மகராசன் பெண்ணே - அவன்

சீரான பெண்களைத் தேட்டுந்
திருடர்காண் மாதே
எல்லைக்குள் இல்லை இவன்போ லுலகினில் பெண்ணே
எந்த நாவினால் ஒன்று நவிலப்போய் வருமோ - மாதே
சல்லிக் காரண்டி தயாகி மாரிக்குமாரன் - எண்ணுந்
தாட்டோடஞ் செய்வோன் தன்முன் மாதரைக் கண்டால்
வண்ணானாக வந்து வன்மம் எல்லாம் அறிந்தானே
இன்னம் மாவாசஞ் செய்திருக்கிறான் மாதே உன்னைக்
கொண்டுபோக
எண்ணாமல் பேசுவான் எதிர்த்து
வந்தவரை மாதே - அவன்
எனக்குள்ளிருக்கும் எந்தன் சொக்குப் பொடிதான்
கூர்விழி மாதே குயிலே
கோபித்துக் கொள்ளாதே - அவன்
கெர்ஞ்சக் காரணல்லன் கூத்தாட்டாங்
கொண்டுவைப் பாண்டி
வேருடன் மல்லிகை முல்லை முடிந்த சிகையாள் உன்னை
வேடிக்கை யாக மனம் செய்யா மலவன் போகான் (66)

திபிதை

ஆரடி தாதி மாரே அகந்தையாய்ச் சொன்னான் ஆண்டிப்
பாரடி உங்களூரில் பறிக்கிறேன் பாவை நானும்
நேரதாய் கோட்டை தாண்டி நிலையுடன் எல்லைக் கப்பால்
வீரவா ளேந்து மாதே விழநீ துரத்து வீரே (67)

ஆரியமாலை சொல் வசனம்

ஆகோ வாரும் பெண்ணே! இந்த இடக்கான ஆண்டியை ஏண்டி அழைத்து வந்தீர்கள். உங்கள் ஈரலைப் பிடுங்கிப் போடப் போறேன். இந்த க்ஷணம் கோட்டைக்கு வெளியே நம்முடைய எல்லை தாண்டி துரத்தி விடுங்கள் பெண்ணே.

தாதியர் சொல் வசனம்

அப்படியே ஓட்டி விடுகிறோம் அம்மா!

பொது விருத்தம்

சந்திரகாவிச் சேலையும் அரையில் சரங்கட்டித்
தாவடமாடக் கோர்வையும் மார்பில் அழகாக

மந்திரவச்சிர குறமதுகூறும் குழக்கூடை மாத்திரைக்
 கோலும் பிள்ளையும் முதுகில் வகையாகக்
கொந்தள வோலைக் கோப்புடன் மூக்குத்தி யுமிட்டுக்
 கோசலதேச மறத்தின் கடைய மதுபூட்டி
இந்தரராச ரிஷிக்கும் குறியோதி இவைபெறும்
 வல்லமை குறிசொல்லக் குறிமாதிவள் வந்தாள் (68)

பொதுவசனம்

காத்தவராய சுவாமி அனேகம் விதத்தினாலே ஆரிய மாலை முகம் பார்க்க வேண்டுமென்று தானொரு தெய்வக் குறத்தியைப் போல வடிவெடுத்து ஆரியமாலை சதிருக்கு வருகிறார்.

குறத்தி வேடமிட்டு காத்தவராயர் வருகிற தரு

அன்னநடை மின்னலிடை அருக்கானக் குறத்தி
ஆசையுடன் மாலையற்கு குறியோத வந்தாள்
மன்னவர்கள் சோர்ந்துவீழ மலர்பாதத்தைப் பிடிக்க
மாமலைக் குறத்தியிவள் உவகையுடனே வந்தாள்.

செந்தூரத் திலகமிட்டுச் சீவிக்கொண்டை முடித்து
செவ்விளநீர் முலையாளும் சொகுசுடனே வந்தாள்
அந்திவேளை குறியோத அன்புடன் நடந்தாள்
கண்டவர்கள் தெண்டநிட காமமிஞ்சித் தென்னக்
கருங்குயிலே குறத்தியாயிங்கே வாடியென்று அழைக்க
இடைசிறுத்து முலைபெருத்து இவள்குலுங்கி நடப்பாள்
இந்திரலோகக் குறத்தியென்று எல்லாரும் மெச்ச (69)

பொதுவசனம்

குறத்தி தெருவழியிலே வருகிறபோது ஆரியப் பூமாலை உப்பரிகையிலே நின்று பார்த்து தாதியை விட்டு அழைக்கச் சொன்னாள்.

தாதியர் சொல் தரு

அன்னமே வாடியிங்கே ஆரியப்பெண் அழைக்கிறாள்
கன்னல்மொழி மாதேநீ காமரதி வாடியிங்கே
கும்பமுலை மாதரசே குறமயிலே வாடியிங்கே
அஞ்சாமல் பின்னாலே அழைக்கிறவள் யாரடிநீ

பஞ்சான முலைமாதே பொன்நூறு தருவாளோ
சொன்னபடி இணங்குவாளோ தோகையிவள் மாலைக்கன்னி
பன்னுமொழி குறிகேட்கப் பரிசுமிகத் தருவாளோ
அப்படியே தருவாள்காண் அழகுற மாதேவா. (70)

பொதுவசனம்

ஆரியப் பூமாலை யண்டைக் குறத்தியை அழைத்துக் கொண்டு போனார்கள்.

திபிதை

பூமகளோ கலைமகளோ பூலோக மடமயிலோ
காமரதி யோஅகலி காதலூரு வசியாளோ
தேவப்பதி யோஅளகை ஸ்ரீராமன் தன்னுலகோ
வாமபுரி மாதோ மலைக்குறவர் மடமயிலே! (71)

ஆரியமாலை சொல் வசனம்

அடிவாடி குறத்தி. உன்னுடையரூப சவுந்தரியத்தைப் பார்த்தால் பூவிலே இருக்கும் மகாலட்சுமியோ. கலை மகளாகிய சரஸ்வதியோ அகலிகையோ. ஊர்வசியோ. இரம்பையோ. தெய்வலோகத்துப் பெண்ணோ. பரமேசுவரியோ அடிகுறத்தி நான்வைத்த பூங்காவனம் அழித்து என் பிதாக்களையும் மோசம் பண்ணி போயிருக்கிறான். அவன் நிலையறிந்து சொல்லடி பெண்ணே!

குறத்தி சொல் வசனம்

அம்மம்மா! அம்மா! அக்கம்மா! ஏக்கம் அனைத்தும் அறிந்து சொல்கிறேன் கேளடியம்மா!

குறத்தி குறிசொல்கிற தரு

மாமயிலே மாலையரே மனதுவைத்துக் கேளும் - உன்
மனதிலுள்ள வற்மம் எல்லாம் வகுத்து
உரைப்பேன் சொல்லக் குறியைக் கேளும்
மேலான புருஷண்டி விசைய மயிலேறும்
மெல்லியர்க்கு ஏற்றவண்டி வில்லியரே - மாலை
கோலாகலப் பிரியன் கோவிந்தன் மருகன்
கொல்லிமலை வாசண்டி குகனெனும் மெய்யான்

அந்திவேளை வருவாண்டி அழகுபெண்க ளோட
அம்மையெமை வன்னமுத்து அளித்தருளும் பாலன்
சந்திரவதனன் வேதயாளக் கண்ணாடி யவன்
சாடைதனைச் சொல்கிறேன் தயவுடனே கேளும்
சந்திரபுஷ்ப நதிக்கரைமேல் சாகையொன்று போட்டுத்
தாளிதமெலாம் திரிந்துஅவன் தமியாயுடன் மீதில்
அந்திபக லுன்னையவ னாதரித்த தெய்வமாம் (72)

குறத்தி சொல் வசனம்

அகோ வாரும் பெண்ணே ஆரியமாலை! என் கையிலிருக்கும் மாத்திரைக் கோலினாலே தொடுகிறதுக்கு முன்னே உன் திருமேனியிலே ஒரு விடத்திலே நினைந்து கொள்ளும் பெண்ணே! தாதைக் கென்றால் தலையைத் தொடுவேன். தாயார்க் கென்றால் வ்யிற்றைத் தொடுவேன். உடன் பிறப்பானால் உடம்பைத் தொடுவேன். உன் தோழியர்க் கென்றால் கையைத் தொடுவேன். நீ நினைத்த மனிதனையானால் நீ நினைத்தஞ்சியைத் தொடுவேன் பெண்ணே!

ஆரியமாலை சொல் வசனம்

இந்தக் கானக் குறத்தி என்கையைப் பிடிக்கலுமாமோ அலைகடல் விழியாளே.

குறத்தி சொல் வசனம்

ஆரியப் பெண்ணே நீர்கேளும்; அந்தணன் மாதே அணுகித் தொடயில்லையோ மாதே?

ஆரியமாலை சொல் வசனம்

கும்ப முலையாளே குறத்தி கோபித்துக் கொள்ளாதே எங்கள் குலத்துக் கடுக்காது கூடவர நீயிருக்க.

குறத்தி சொல் வசனம்

அம்பு விழியாளே! ஆரியப் பெண்ணே! நீர் கேளும் அந்தணன் மாதுடன் அணுகி நானிருந்ததும் இல்லையோ? பெண்ணுக்குப் பெண் பேதகமில்லை.

ஆரியமாலை சொல் வசனம்

குறத்தி இப்ப பேதகமென்று நீ கோபித்துக் கொள்ளாதே! மாதே என்னைப் பழுதாயுரைக்கும் இடக்கன் இருக்கும் நிலைசொல் அன்னப் பெண் குறமாதே! அணுகி நீ உரைப்பாய்.

குறத்தி சொல் தரு

சந்திர புஷ்ப நதிக்கரை தன்னிலிருப்பான்
இப்ப தாமிசம் பண்ணாதே
தண்டிகையேறி நடப்பான் உந்தன்
கையிலகப் படுவான்நீ கடுகநடந்தால் - இனிக்
காரிகையே போவோம் வாரீர்
இளங்குயில் மாதே! (73)

திபிதை

இங்கித மாதே பெண்ணே இசைபெறும் தெய்வ லோகம்
மங்களம் குறத்தி கேளும் வதனசே ருவையைக் காண
நங்கையே என்னைப் பறித்து நாடியே போக வேண்டாம்
குங்கும மலைசிங் காரக் குறவஞ்சி எனவு ரைத்தாள். (74)

ஆரியமாலை சொல் வசனம்

அகோ வாரும் பெண்ணே! குறவஞ்சி மயிலே! அவனிருந்த நிலை கண்டு போக வேணும். என்னுடனே கூடவாருங் குறத்தி.

குறத்தி சொல் வசனம்

அப்படியே வருகிறேன் பயணப்படும் பெண்ணே!

ஆரியமாலையும் தாதியரும் செல்கின்ற தரு

செங்கமலத் தாதியினர் சேனாதிபதி வாரு மிங்கே
இங்கிதமாய் ராணுவத்தை இனிவகுப்பின் பிரிய முண்டாம்
குதிரைமே லேறுகின்றாள் குக்கலிப் பெண் கொக்கரித்து
அதிரவெடிகள் தானெழும்ப ஆனைமே லேறு கின்றாள்
குணிக்குழல் தோளில் வைத்து குமரிப் பெண்கள் முன்னடந்தார்
மண்ணுந்துப் பாக்கிக்கொண்டு மல்லப்பெண்கள் தானடந்தார்
கவரியொரு புறம்வீச கன்னியர்கள் முன்னடந்தார்
பூங்குறத்தி மாலையரும் பொற்தண்டிகை மீதிலேறி

பாங்குடனே தாதியரும் பகருங்கட் டியங்கூறச்
சந்திரபுஷ்ப நதிக்கரைமேல் தாபித்தார்கள் கூடாரம்
விந்தைபெறு மாதர்களும் வேடிக்கை யுடனிறங்கி (75)

திபிதை

மாலையே கேளும் இப்போ வகைபெறு மாத ரெல்லாம்
சோலைகள் நதிகள் தோறும் துப்பாக்கியும் வாளும் கொண்டு
மேலதாய்க் காவல் வைத்து விருதுடன் கல்லது மேல்
வாலமோ கணக்கண் மாரன் வந்தவன் சிக்கு வானே (76)

குறத்தி சொல் வசனம்

அகோ வாரும் பெண்ணே ஆரியமாலை! நல்ல சேவகத்தில் இராணியான பெண்களே யல்லாமல் தண்ணிதுறையிலே யும் தோப்புகள் தோறும் மேலான வழிகள் தோறும் துப்பாக்கியும் வாளும் உருவிக் கொண்டு இரா முப்பது நாழியும் விழித்துக் கொண்டிருந்தால் அவன் வந்து சிக்குவான் பெண்ணே! எங்கள் சிங்கானானவன் கோபித்துக் கொள்வான். நான் போய் வருகிறேன் பெண்ணே!

பொதுவசனம்

குறத்தி மனமகிழ ஆடையும் அணியும் கொடுத்து அனுப்பி வைத்த பின்பு ஆரியமாலை, சேவகத்தில் இராணியான பெண்களை அழைத்து இராமுப்பது நாழியும் விழித்திருந்து அந்தத் திருடனைப் பிடித்துக் கொண்டு வாரும் தாதிமார்களே என்று கூறினாள்.

ஆரியமாலை சொல் தரு

கன்னியரே வாங்களடி காவலிருப்போரே வாங்களடி
மன்னியே இராமுப்பதும் மங்கையரே காவலிரும்
என்னுடைய ஆக்கினையில் எள்ளளவும் பிசகாமல்
அன்னநடை மாதேநீங்கள் அருவையரே முழித்திருங்கள்
சந்ததங்தாக் கிதைப்பண்ணித் தையலரைக் காவல்வைத்து
சந்தரக்கதி ரோன்கிழக்குத் தோன்றியபின் மாலைக் கன்னி
அந்தமாய்அத் தந்துலக்கி ஆரிய மாலையாள்
சந்திரபுஷ்ப நதியிறங்கி ஸ்நானம் பண்ண லுற்றாள் மாது. (78)

திபிதை

வங்கணச் சின்னான் வாடா மாலையைக் களவு செய்ய
மங்கள முடனே நானும் வருகிற விதத்தைப் பாரும்
ஈங்குநீரில் விபூதி எறியறேன் அவள்சிலை போலத்
தங்கிய நீரில் மாலை தையல் தகைப் படாமல் (79)

காத்தவராயன் சொல் வசனம்

அகோ வாரும் பிள்ளாய்! வங்கணச் சின்னான் இந்த ஆரியமாலையைக் களவு செய்ய நான் வருகிற விதத்தையும் விபூதி எறிந்த அவள் சிலைபோல நிற்கும் விதமும் தாதியர் கண்ணில் அகப்படாமல் இருக்கும் விதமும் பாரும் பிள்ளாய் நான் செய்யும் சாமர்த்தியம்.

சின்னான் சொல் வசனம்

அப்படியே மகாபாக்கிய மாச்சுது சுவாமி.

தரு

வஞ்சிமயில் மிஞ்சி ஏங்கும் மதரூபன் காத்த முத்து
கஞ்சமல முகம லர்ந்து காரிகையாள் ஆரி யப்பெண்
மிஞ்சிய வயத்து றவாமல் மேவினான் விபூதி தன்னை
செஞ்சொல் மாது சிலைபோல சிக்கிக் கொண்டாள் நீரதனில்
இளமுலையாள் தாதி மார்கள் எங்கே என்று மிகப்புலம்ப
அளவில்லாத பெண்படையன் ஆரியப்பூ எங்கே யென்று
வளகரத்தைத் தட்டி மாது வந்ததெல்லாம் புதுமை எண்ணார்
களங்க மில்லாது இருந்தோம் காரிகையே தோற்று விட்டோம்.
(80)

திபிதை

ஆரிய தேசந் தன்னில் அந்தணன் ஒருவ னாகிக்
காரிகை தனைஅதட்டிக் காத்த வராய சுவாமி
பாவையர் முலையாள் ஒசிய பாலையைக் காணோ மென்ன
வாரிய குழலாள் அந்த மாதவன் முன்பு உரைத்தார். (81)

பொதுவசனம்

காத்தவராய சுவாமி நீரில் ஆரியமாலை சொரூபம் தெரியாமல் செய்து தாமும் மாறுவேடத்துடன் ஆரியதேசத்து பிராமணரில்

ஒருவனாகிப் பெண்களை அதட்டி ஆரியமாலை எங்கே என்று கேட்க, பயப்பட்டு நடந்த விருத்தாந்தம் சொன்னார்கள். நீங்கள் எல்லாரும் செல்லுங்கள். நான் ஆரியமாலையை அழைத்துக் கொண்டு வருகிறேன் என்று சொன்னார்.

தரு

அந்தணன் ரூபமாய்த் தண்ணி யதனில் வந்து
அந்தமுள்ள மாதை அழைத்தார் மந்திர பலத்தால்
விந்தைமுக மலர்ந்து விசைய ஆரியமாலைக் கன்னி
வீரமுடனே என்ராணுவ மெல்லாம் எங்கே என்றாள்
ஆதரவாகவே சோமாசி அய்யர் என்றெண்ணி
அய்யனருகினில் ஆரிய மாலையும் வந்தாள்
வேதவல்லோனே என்ராணுவ மெல்லாம் எங்கே என்றாள்
- இப்போ
வண்ணானோ எண்ணாமல் வேல்விழி மாதரை என்றாள்
பயப்படாதே பெண்ணே பல்லக்குதனில் ஏறிக் கொள்ளும்
பாப்பானாக வந்த காத்தவராயருஞ் சொல்வார்
ஆரியதேசம் அன்புடனே போய்வரு வோம்வா
அந்தணன் தங்கையே ஆரியமாலை யென்றுரைப்பான் (82)

பொதுவசனம்

பூதங்கள் இரண்டு சுமக்குஞ் சிவிகையில் வைத்து பூவைதனைக் காத்தமுத்து கொண்டு போற விதங்கள்.

தரு

வங்கணச் சின்னானும் மங்கை வடிவமதாகி
அந்தவல்லி பல்லக்கருகில் வங்கணச் சின்னானும் வந்தான்
மீதுலக தொட்டிய நாடுமேவி ஆளுகின்ற சின்னான்
அந்த முதலை வங்கில் கொண்டு போவோம்
சீக்கிரத்திலே வாடா - முக்கட் சந்தி முதலான
செண்பகத் தோட்டம் கைக்கெட்டாத தூரம்
பிச்சைப்புர முதலை வங்கில் வைத்தார்
ஆகமவேதம் அறிந்து ஆரியமாலை தன்னை
அந்த நாகத்தின் மைந்தன் நலமான முத்திடம் வைத்தான். (83)

திபிதை

ஆரிய மாலை தன்னை அழகுசேர் முதலைவங்கில்
நேரதாய் வைத்துப் பின்னும் நிலவொளி நாக மீன்றப்
பாரிய நாகமுத்தை பக்ஷமாய்க் காவல் வைத்துச்
சீருள காத்தமுத்து சின்னானும் வருகி றானே. (84)

பொதுவசனம்

ஆரியமாலையை முதலை வங்கில் வைத்து நாக முத்தையும் காவல் வைத்து அப்பால் நாரதர் சொற்படிக்குக் காவேரிப் பூம்பட்டிணம் வாழ்கிற உகந்தாயி தன்னையும் கைவசம் பண்ண வேண்டுமென்று காத்தவராய சுவாமியும் சின்னானும் கால்கொள்ளும் செட்டியைப் போல வடிவு கொண்டு புறப்பட்டார்கள் இருவரும்.

திபிதை

வணிகன்போல் வடிவுங் கொண்டு வளர்ச்சின்னான் காத்த முத்துங்
கணிகைஉ கந்தாயி பக்கல் கடிகியே நடக்க வேண்டி
மணிக்கயற் அதிராள் போல்கொண்டு மடிச்சிலை
பணமுங் கொண்டு
துணிவதாய் காத்தவராய சுவாமி சகியுடன் வரலுற் றாரே. (85)

பொதுவசனம்

காத்தவராய சுவாமியும் வங்கனச் சின்னானும் இரண்டு பேரும் காவேரிப் பூம்பட்டணம் வியாபாரம் பண்ணுஞ் செட்டியைப் போல வடிவு கொண்டு நடந்தார்கள் இருவரும்.

காத்த செட்டி வருகிற தரு

பல்லவி

செட்டி வந்தானே காத்த சின்னான் செட்டியும் வந்தானே

அனுபல்லவி

மட்டில்லா வீதி வேந்தி மாளிகை தன்னைக் கொண்டு (செட்டி)
காதில் கொத்துக் கடுக்கன் சந்திர காவிப் பாகையும்
தலையில் கட்டி விபூதி
நாதலணிந்து நல்லமுப்புரி பூனூல் போட்டுக் கொண்டு (செட்டி)
காவி வேஷ்டி உடுத்திச் சின்னான் காத்த செட்டியும் வந்தானே

சரணம்

சல்லா நூலுண்டோ பட்டுச்
 சந்திரகாவி காவிலுண்டோ
குல்லாப் பரங்கிகள் கப்பலில்
 கொண்டுவந்த நூலுண் டோவெனச் (செட்டி)
ரெட்டிழைத்த நூலுண்டோ மறவர் வித்திடும்
 நூலுண்டோ இரத்தினப் பூங்குழலாள்
குமரி நாச்சி சிகப்பி வாங்களடி (செட்டி)
ஒந்தி வணிகக் காத்தசின்னான் - செட்டியும் வந்தானே
ஒந்தி வணிகப் பெண்ணே - அடி
ஒந்திப் பெண்ணே
நூலுண்டோ சந்திரப் பச்சையப்
 போதயவாச் சன்னூல் வேணு மென்று (செட்டி) (86)

திபிதை

சேல்பொரு விழியி னாளே சேந்தி சாரதிப் பச்சை
நூல்கொள்ளும் செட்டி வந்தான் அவனிமை சரக்கு வாங்கியில்
பால்கொள்ளும் வாயினாளே பைங்கிளி மொழியினாளே
காலமே வந்தானிப்போநீ கடுகியே அழைத்து வாடி (87)

உகந்தாயி சொல் வசனம்

ஆரடி தாதிமார்களே நூல் கொள்ளும் வர்த்தகன் வந்த பாலனைப் போலக் காணுது. அவனை அழைத்து வந்தால் நம்முட நூலெல்லாம் விலைக் கிரையம் பண்ணலாம்.

தாதியர் சொல் வசனம்

அப்படியே அழைத்து வாறோம் அம்மா!

திபிதை

செட்டியார் இங்கே வாரும் தேன்மொழி உகந்தி நூல்தான்
மட்டில்லாச் சரக்கு முண்டு வாங்குகிற திறமை யுண்டோ?
பட்டிநீ போடி அந்தப் பாவியாள் அவரவெண் ணாதோ?
கட்டிய நூலும் கொள்வேன் காரணார்க் கிதமதாக. (88)

தாதியர் சொல் வசனம்

அகோ வாருங்காணும் செட்டியாரே! எங்களம்மாள் உகந்தாயி வசத்திலே ஆயிரம் வகை நூலத்தினும் வச்சிருக்கு. பார்த்துக் கொள்ளும் வாருங் காணும் செட்டியாரே!

காத்த செட்டி சொல் வசனம்

அப்படியே வருகிறேன் நடவடி பெண்ணே!

திபிதை

மதிவளர் வதனத் தாளே மங்கையர் மெட்டி யாளே
துதிபெற வந்தான் செட்டி துலங்கிடு முன்ச முகம்
விதிதளர்ந் தவனோ காம விடையனோ இரண்டுபேரும்
நதிவளர் நாண லைப்போல் நரைத்தவன் நங்கை யாரே (89)

தாதியர் சொல் வசனம்

பூரணச் சந்திரனைப் போல முக வசீகரமுள்ள உகந்தாயி. நீ சொன்னபடி நூல் கொள்ளும் செட்டியை அழைத்து வந்தோமம்மா.

உகந்தாயி சொல் வசனம்

அடி பெண்களே! அவன் விருதாபியமான கிழவனானால் இங்கே அழைத்து வாருங்கள். வயகாம பிள்ளையானால் நீங்கள் வியாபாரம் பண்ணி அனுப்பி வையுங்கள் பெண்ணே!

தாதி சொல் வசனம்

எண்பதுள்ள வர்த்தகனம்மா!

உகந்தாயி சொல் வசனம்

ஆனால் அழைத்து வாங்களடி பெண்களே!

தாதியர் சொல் வசனம்

அப்படியே அழைத்து வருகிறோமம்மா!

ஏசல்தரு உகந்தாயி சொல் தரு

எந்தூர் வாருங்காணும் செட்டியாரே உந்தன்
சொந்தவூர் சொல்லுங் காணும் செட்டியாரே

காத்த செட்டி சொல் தரு

சந்திர வதனாளே உகந்திப் பெண்ணே - நான்
தரு மாபுரிப் பட்டணம் தான்

உகந்தாயி சொல் தரு

வர்த்தகன் கோத்திர மென்னச் சொல்லுஞ் செட்டியாரே
உங்கள் குடிப்பெயரென்ன என்றுஞ் சொல்லுஞ் செட்டியாரே

காத்த செட்டி சொல் தரு

கோத்திரமான கடவுள் ரிஷிகோத்திரம் - எங்கள்
தோப்பனார்பேர் சிவனாசெட்டி தாய் மாரி

உகந்தாயி சொல் தரு

உந்தன்பே ரென்ன சொல்லுஞ் செட்டியாரே

காத்த செட்டி சொல் தரு

கந்தவீசும் குங்கும முலையாளே என்பேர்
காத்த செட்டி தோழ சின்னான் தாண்டி
இளைப்பா யிருக்குதடி உகந்திப் பெண்ணே
என்தவசம் மெத்தவடி உகந்திப் பெண்ணே!

உகந்தாயி சொல் தரு

இளைப் புண்டா யிருந்தால் செட்டியாரே
என்ன உமக்கு வேணும் செட்டியாரே

காத்தசெட்டி சொல் தரு

செவ்விளநீர் உண்டானால் உகந்திப் பெண்ணே
செவியடைப்புந் தீருமடி உகந்திப் பெண்ணே

உகந்தாயி சொல் தரு

எவ்வளவு உமக்கு வேணுஞ் செட்டியாரே

காத்த செட்டி சொல் தரு

எனக்கு இரண்டு போதுமடி உகந்திப் பெண்ணே

உகந்தாயி சொல் தரு

சொன்னபடி நீர்கேளும் செட்டியாரே - என்னைத்
தோதகஞ் செய்ய வேண்டாம் செட்டியாரே

காத்த செட்டி சொல் தரு

மின்னு மிளங்கொடியே உகந்திப் பெண்ணே
மெத்தைதலை காணி யுண்டோ உகந்திப் பெண்ணே!

உகந்தாயி சொல் தரு

படுக்கவந் தீரோ இங்கே செட்டியாரே - பாவு
நூல்கொள்ள வந்தீரோ செட்டியாரே!

காத்த செட்டி சொல் தரு

எடுக்கும் பஞ்சணையில் படுத்துக் கொண்டால் - உன்
ஆனாயாசம் தீருமடி உகந்திப் பெண்ணே!

உகந்தாயி சொல் தரு

ஆனால் படுத்துக் கொள்ளுஞ் செட்டியாரே
ஆண்பிள்ளைக் கடுக்குமா செட்டியாரே

காத்த செட்டி சொல் தரு

நாளெடுத்து கோடான உகந்திப் பெண்ணே
நல்லது சந்தனக்கழு வுகந்திப் பெண்ணே (90)

திபிதை

வஞ்சனைக் காராய் செட்டி வளம்பெற்ற எந்தன் வீட்டில்
கொஞ்சிநீ படுத்துக் கொண்டால் குப்புறப் பஞ்ச ணையில்
மஞ்சள்நல் வாடை வீசும் மங்கைதன் குரலைக் கேட்க
கஞ்சநேர் வதனப் பசுக்களைக் கொண்டாள் காதல் மங்கை. (91)

பொதுவசனம்

காத்த வராய சுவாமி உகந்தாயி இடத்தில் செட்டியைப் போல் நூல் வியாபாரம் பண்ண வந்து அநேகம் வர்மமறிந்து இளைப்புடன் அவள் பஞ்சணை மீதில் படுத்துக் கொள்ள. இன்னும் எழுந்திருக்கவில்லை என்று உகந்தாயி எழுப்பும் போது கோடி

மன்மத ஒளி தன் முகத்திலே காண்பித்து அவளை மூர்ச்சை பண்ணினார் காத்தவராய சுவாமி

திபிதை

சோர்ந்திடு மோத்தி தன்னைத் துணைக்கரத் தாலும் பற்றி
ஏந்திய தனமும் தொட்டு இன்பமாய்க் கலவி செய்து
மாந்தளிர் மேனி யானும் மங்கைவிட் டெழுந்திருந்த
காந்தனைப் பணிந்து சொல்வாள் காரிழைக் கரசி தானே (92)

பொதுவசனம்

அப்படி சோர்ந்தவுடனே உகந்தாயி தன்னை அன்பருக்குத் துணையாக இரு கரத்தினாலும் தன்மார்போடும் அணைத்துக் கொண்டு முத்தமிட்டு சுகலீலையும் செய்த பிரகாரம் மயக்கமும் நகர்த்தி உகந்தாயி எழுந்திருந்து தனக்குக் காந்தனாகிய பெண்ணுக்குச் செல்வியாள் உகந்தாயி சொல்லுவாள்.

திபிதை

மணமது செய்ய வாக்கு மன்னவர் தரவே வேணும்
சிமைதி லென்று சொல்லச் சிவனருள் புதல்வன் சொல்வான்
குணமுள்ள உகந்தி உன்னைக் குடிவலப் பாகம் வைத்து
அணங்கெனும் மாதே என்று அய்யனும் தம்பால் வந்தான் (93)

பொதுவசனம்

காத்தவராய சுவாமியைப் பார்த்துச் சொல்கிறாள் உகந்தாயி என்னைப் பிரியாது மணம் செய்ய வேணும். அப்படியே நல்லது பெண்ணே. என் வலது பாகம் உனக்குக் கொடுத்தேன். நிசமென்று உகந்தாயிக்கு அமிர்த வாக்களித்துக் காத்தவராய சுவாமியும் சின்னானும் புறப்பட்டு வருகிறார்கள்.

திபிதை

மந்திரி சின்னான் கேளும் வனத்தினில் கோட்டை கண்டேன்
தந்திரக் கறுப்பர் தங்கை தையலால் மருவு நாடு
இந்திர பதியோர் மெச்ச இருவரும் வேஷம் கொண்டு
சுந்திர பிடாரன் சாவ லாகவும் வடிவு கொண்டார் (94)

பொதுவசனம்

காவேரிப் பூம்பட்டிணம் உகந்தாயி தன்னையும் பொருந்தி அப்பால் வருகிற வழியில் செம்பு குமாரன் வனத்தினில் ஏழு

சுற்றுக் கோட்டையும் அலங்கார உப்பரிகையுங் கண்டு நாரத மகாமுனி சொற்படி இங்கே ஏழு கறுப்பர் தங்கை இருக்குமிடமென்று அதிக சந்தோஷ பிரியனாகிச் சின்னானை அழைத்து நீ ஒரு பொற் சாவல் போலவும் நான் ஒரு பிடாரன் போலவும் புறப்பட்டார்கள்.

காத்தவராயர் ஜோகி வேடமிட்டு வருகிற தரு.

பல்லவி

வந்தான் மலையாள ஜோகி - பாம்பாட்டி
வந்தான் மலையாள ஜோகி

அனுபல்லவி

திந்தோம் திமியென்று தாளந் தீந்துக் கொண்டு
சீனாசரக் குடுக்கை மகுடிக் குழலூதி (வந்தான்)

சரணம்

பக்கக் கொண்டை அழகும் பத்தரை மாற்றுச் சொல்
குண்டல வழகும்சிக்கு வலப் போர்வையும்
கழுத்தில் பாம்பும் திருநீற்று மையழகும்
பக்கக் குச்சழகும் பல்லின் ஒளி அழகும்
கைக்குப் பொன்கடையமும் காலிற் சிலம் பணிந்து (வந்தான்)
பேய்க்கொரு மருந்திடுவேன் அன்னந் தன்னைப் பேசாமலேயே
பொசிப்பேன் காய்க்கொரு மருந்திடுவேன்
பழமதாகக் கடுகத்த நதியைத் தூக்குவேன்
வாய்க் கானத்தை மொழிவன் - நம்
கடிக்குழல் படிப்பேன்
புற்றில் பாம்பை யழைப்பேன் புவியில்
மன்னர் வைத்த மோடியை எடுப்பேன்
உற்றுப் பெண்குறி சொல்வேன்
ஊமை செவுடு ஒருநொடிதனில் போக்குவேன்
எத்தாய்த் திரிவேன் கொஞ்சம் ஏழையற்கு
உதவாத பெற்றப் பிறப்பினரை யுற்றுப் பாராமலே (வந்தான்)
(95)

திபிதை

கறுப்பியும் கண்டாள் அந்த காமனோர் சோகி தன்னை
விருப்பமாய்த் தாதி தன்னை வினவியே அழைத்து வைத்து

இருப்பதும் ஆரும் பேரும் மிசையுடன் சொல்லக் கேட்டுத்
தரிப்பதும் ஆடை முத்துத் தந்தவரார் சொல் என்றாள் (96)

பொதுவசனம்

காத்தவராய சுவாமியும் பிடாரனைப் போலக் கறுப்பாயி இருக்கும் கோட்டைக்குள்ளே மகுடிக் குழை பிடித்துக் கொண்டு போனவுடனே அவன் ரூப சவுந்தரியமும் அலங்கார ஆடையும் அணியும் பார்த்துத் தாதியை விட்டு அழைத்து வரச் சொல்லி பாம்பு ஜோகி உனக்கு இத்தனை வெகுமானம் கொடுத்தவர் யாரென்று கேட்கச் சொல்கிறாள் கறுப்பாயி.

ஜோகி சொல் தரு

இந்த வெகுமதி தந்த பேரைச் சொல்கிறேன்
இன்பமுடன் மனதாய்க் கேளாய் இச்சை கறுப்பி
ஆரிய தேசத்தி லொரு மோடி எடுத்தேன்
அன்புடன் நமக்கணிந்த ஆபரணங்கள்
கூரிய வேல்விழி ஆரிய மாலை
கும்ப முலை யாணிமுத்து தாவடம் தந்தாள்
தாமரை யுடையாள் சூழ பட்டணந் தன்னில்
சாவல் சண்டையால் கெலித்தேன் தருமமுடனே
காமரதி உகந்தாயி கையில ணிந்த
கனகமணி யிட்டிழைத்த கடயமும் தந்தாள்
சித்திர வடிவழகி கறுப்பிப் பெண்ணே - உன்
செல்வமும் குணமும் கேட்கத் தேடியே வந்தேன்
பக்தியுடன் கோட்டை காக்கும் என்சாவலுடன்
பாரியதீனி திண்ணுமோ உன்சா வலுந்தான்
வைத்ததீனி திண்ணுமடி அரசி கறுப்பி
வைக்கச் சொல்லும் சாவலுக்கு மண்ணுந்தீனி
பச்சரிசி அங்கலம் சத்தி அங்கலப்
பஷ்ஷணம் வைத்தேன் உந்தன் சாவலுக்குநான்
மெச்சுசாவல் தன்னை விட்டார் மலையாள ஜோகி
மெள்ள நடந்து வரும் சின்ன சாவல்
இத்தனை சின்ன சாவல் என்சாவலுடன்
எதிர்த்துத் தீனிதிண்ணுமோ மலையாள ஜோகி
குத்து தனத்தினாளே கறுப்பிப் பெண்ணே
கொட்டின தீனிதின்னும் என்னுடைய சாவல்

சிறியதாய் தீனிதின்னும் என்னுடைய சாவல்
சண்டைக்கு விடுங்காணும் மலையாள ஜோகி
பரிகாசம் பண்ணாதே அடிபாலைக் கறுப்பி
பாரடிஎன் சாவல் சண்டைப் பக்ஷமுடனே
சாவலுக்குச் சாவல் சண்டைத் தரமு மல்லா
சந்தோஷ மாகினால் அந்தக் கறுப்பி
ஆவலுடன் கறுப்பாயி சாவல் வந்து
அடிக்ககீழே வீழுமோ அய்யன் சாவல்
ஏவல் கொள்ள வந்தவனே பாம்பல ஜோகி
என்னங் காணும் முன்சேதி இப்பவும் தான்னா
உதவுகிறேன் பெண்ணே பாரும் இப்பவும்
நலமுடனே நான் வளர்த்த சாவல்
திறானி சொல்லும் முன்னே அய்யன் மூர்ச்சை தெளிந்து
துடிக்க வாழத் தள்ளுமே பேடுஞ்
சாவலை வேடிக்கை யுடனேவிட வீழத்தள்ளுமே
வல்லமையாள் கறுப்பி வளர்த்த சாவல்
மண்மேல் மூர்ச்சையதாக மயங்கி விழுமே

திபிதை

மந்திரக் காரா ஜோகி மலையாள ஜோகி யுந்தன்
தந்திர சாவ லாலே சந்ததம் வேணு மிப்போ
உந்தனை விடுவதில்லை உகந்துநான் என்று சொல்லி
மந்திர வாளும் உருவி மங்கையும் துரத்தி னாளே. (98)

பொதுவசனம்

எப்படி என்றால் காத்தவராய சுவாமி மலையாள ஜோகியாகச் சின்னான் போர்ச் சாவலாகக் கறுப்பாயி வளர்த்த ஏழு சாவலையும் மூர்ச்சையாகச் செய்ய அதுகண்டு கறுப்பாயி இவன் மந்திரக்காரன் என்று கோபம் கொண்டு துரத்தினாள் ஏழு சாவல்களும் மூர்ச்சை தெளிந்து கூப்பிட்டுது. அந்தச் சத்தங்கேட்டு நீலகிரிப் பர்வதத் தண்டை சுரபி மேய்கின்ற ஏழு கறுப்பரும் புறப்பட்டார்கள்.

திபிதை

சாவலுங் கூச்சல் போடத் தையலா ளில்லை என்று
மேவிய கறுப்பர் நீலம் விளங்கிய கிரியை விட்டு

ஆவலால் கயறுகோல் கொண்டு அழகுமுகம் பிளியும் போதது
பாவையாள் அடிபிடித்த பஷமாய் வருகி றாரே. (99)

பொதுவசனம்

ஏழு கறுப்பரும் வருகிற சிங்காரம் - கம்பளி. கயிறு. கோல். கண்டகோடாலி இதுகளை எடுத்துக் கொண்டு கறுப்பாயி நடந்த அடிபிடித்துக் கொண்டு கோபத்துடனே புறப்பட்டார்கள்.

ஏழு கறுப்பர் வருகிற தரு

பல்லவி

கறுப்பரும் வந்தாரே - ஏழு
கறுப்பரும் சொகுசாய் வந்தாரே
சிறப்புடன் வானப்பதி - நல்ல
சிங்காரக் கொண்டை கட்டி (கறுப்பரும்)

அனுபல்லவி

கீத்து நாமமிட்டு - கையில் கிலுக்குத் தடியும் பிடித்துக் கொண்டு
போத்த கம்பளிக் கயறும் - பேழை போலச் சுருளும்
வயறும் நம்பரும்

சரணம்

தங்கை தன்னை ஆரோ நயந்துடன் கொண்டு போனானென்று
செம்பட்ட மீசையுடன் கறுப்பர் சுருக்காய் முறுக்காய் வந்தாரே
கண்டாரே கறுப்பர் காத்த சுவாவியும் தங்கையுங் கண்டாலே
கண்டாலே கண்டாரே மெத்த குதித்தாரே கூவிஅழைத்தாரே(100)

திபிதை

ஆரடா வாடா இங்கே அருவளங் குடியி ருக்கும்
சீருடா எந்தன் தங்கை செல்வியைக் கொண்டு போறாய்
யாரடா எங்கள் வீரம் பாம்பாட்டி உன்னைப் பிடித்து
நேரதாய் ஆக்கி னைக்குள் நிச்சயம் செய்கு வோமே. (101)

பொதுவசனம்

ஏழு கறுப்பரும் காத்தவராய சுவாமியாகிய பிடாரனைக் கண்டு ஆரடா துட்டாவாடா என் தங்கையைக் கொண்டு போறியா என்று

அதிகோபத்தை அடைந்து உன்னைப் பிடித்து ஆக்கினை பண்ணுகிறேன் என்று தங்கள் கையிலிருக்கும் கண்ட கோடாலி, கழிக்கோல், வளைதடி, சக்கரம் பிடித்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

திபிதை

மண்ணிய கறுப்பர் வார வண்ணமயைக் கண்டு அய்யர்
பொன்னிற வன்ன முத்தின் பூமலர்ப் பதம் நினைந்து
அன்னைதான் தந்த நீரை அள்ளிமே லிரைத்தார் அய்யன்
கொன்னியக் கறுப்பர் சோர்ந்து கூப்பிடாதிருக்க லுற்றார் (102)

பொதுவசனம்

காத்தவராய சுவாமியைத் துரத்திக்கொண்டு வருகிற கறுப்பர் ஏழுபேரையும் பார்த்து விபூதி ஏழுபிரமாணம் காத்தவராய சுவாமி அவர்கள் பேரிலே போடச் சிலை போல நின்றார்கள் ஏழு கறுப்பரும்.

திபிதை

இங்கித சாமி இப்போ எளியவர் செய்த குற்றம்
பங்கயப் பதனே கோபம் பண்ணப் போகா திப்போ
சங்கை யில்லாத எந்தன் தமையனை எழுப்பு மென்று
மங்கை யாள்கறுப்பி காத்த வசந்தனைப் பணிந்து சொல்வாள்
(103)

கறுப்பழகி சொல் வசனம்

காத்தவராய சுவாமி ஏழு கறுப்பரையும் சிலைபோல் நிற்க விபூதி எறிந்தவுடனே, கறுப்பழகி அவர் சுரூபத்தைக் கண்டு இவர் சுவாமி என்று பயந்து எங்களண்ணமார் ஏழு பேரையும் எழுப்பித் தர வேணுமென்று சொல்கிறாள் கறுப்பழகி.

கறுப்பழகி சொல் தரு

பல்லவி

கோபம் செய்ய வேண்டாம் - சுவாமி
குற்றம் செய்ய வேண்டாம் சுவாமி
பாபமிப் போச்சுது இனி - உமை
பாதமலர்க் கண்டவுடன்

அனுபல்லவி

என்ன பாக்கியஞ் செய்தேன் என்னகத்தைத் தேடிவர
பொன்னனிசேர் மேனியனே பூவையற்கு நாயகனே

சரணம்

வடிவழகு ஒப்பனையும் வையகத்தில் கண்டதில்லை
அடியேனைப் பத்திளங்கள் அண்ணமாரை எழுப்பவேணும்
முத்துப்போல் நகையழகா முருகம்பூ வாயழகா
சித்தசன வடிவில் மிஞ்சும் சிங்கார வடிவேலனே
என்னையும் மனம்பொருந்தும் எப்பவும் பிரியாமலே
மண்ணியஎன் அண்ணமாரை வல்லவனே நீர் எழுப்பும் (104)

பொதுவசனம்

இந்தப் பிரகாரம் கறுப்பாயி வணங்கிச் சொல்ல காத்தவராய சுவாமி அதிக சந்தோஷ பிரியனாகி ஏழு கறுப்பரையும் அழைக்கிறார்.

திபிதை

சத்தங் கறுப்பாயி உந்தன் தயவுஎன் மீதில் வைத்தாய்
அந்தநல் லன்பி னாலே அரைநொடி தனில் அழைத்தேன்
முந்தி கோப மில்லை மோகக்கண் ணனடி என்று
சிந்தையும் ஒன்ற தாகிச் சொல்லுவார் துதிவல் லோனே. (105)

பொதுவசனம்

காத்தவராய சுவாமி கறுப்பாயி தன்னை அழைத்துப் பயப்படாதே உன் அண்ணன்மாரை ஏழு கறுப்பரும் இதோ வந்தார்கள் என்று எழுப்பி விட்டார். அதிக வேகமாக எழுந்திருந்து ஏழு கறுப்பரும் காத்தவராய சுவாமி மகிமை எல்லாம் கேட்டுச் சொல்கிறார்.

திபிதை

அய்யனே அடிமை தன்னை ஆள்வது உந்தன் பாரம்
வையகம் புகழும் எங்கள் வண்ண முத்தருளு பாலாமே
துய்ய எழுது தங்கை விளங்கிய முகூர்த்தம் செய்து
துய்யனே இங்கே தானே சுகமுடன் நீறுநீ ரென்றாள் (106)

ஏழு கறுப்பர் சொல் வசனம்

அய்யனே அடியேனை இரட்சிக்கத் தேவரீர் இந்த வனத்திலே எங்கள் தங்கையை விவாகம் பண்ணிக் கொண்டு எங்கள் ஏழுபேருக்கும் தெய்வமாயிருந்து கொண்டு இரட்சிக்க வேணுமென்று சொன்னார்கள்.

திபிதை

அப்படித் தானே அந்த அரிவையை மணமும் செய்து
நல்லபடி காத்த முத்து நாயங்கள் சின்னானும் வடி
விற்பன் னாகமுத்து மேவிய காவல் வைத்துப்
புறபட்ட இடத்தில் வைத்த பாவையை அழைக்க லுற்றார் (107)

பொதுவசனம்

அந்தப்படியே கறுப்பாயி தன்னை மணம் புணர்ந்து அப்பால் வங்கணச் சின்னானும் தாமும் முக்கட் சந்தி முகனை வணங்கி ஆரியமாலை இடத்தில் காவலாயிருக்கும் நாகமுத்தை அழைத்து என் சொற்படி திருமுகங் கொண்டு போய் ஆரியதேசம் ஆயிரம் சோமாசிப்பட்டர் கையில் கொடுத்து அவர்களனைவரையும் அழைத்துக் கொண்டு காவேரிப் பூம்பட்டிணம் உகந்தாயி அவர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு நாம் தேசமாரியாகிய வன்ன முத்தம்மாள் பாதம் வணங்குமுன்னே வாருமென்று சொல்ல நாகமுத்து அதிக சந்தோஷத்துடனே ஆரிய தேசம் நடந்தார்.

காத்தவராயர் ஆரியமாலையை அழைத்துக் கொண்டு வருகிற தரு

வங்கணச் சின்னானே வாரும் மங்கை ஆரிய மாலையை
இங்கித முடனழைத்து இசைந்த சிவிகை ஏற்றி
பொங்கமுடன் பூதம்நாலும் பொற்கொம்பும் தாங்கிவர
நங்கைதனை அழைத்துக் கொண்டு நன்மையுடன் வாரும் என்றார்.
பஞ்சவர்ண புரவியேறிப் பார்வின மலைதாண்டி
கொஞ்சும்கிளி சோலைகண்டு குயில்கள் கூவுங் காவுங் கண்டு
வஞ்சியர்பூங் காவுங்கண்டு மட்டில்லாத நதிகடந்து
செஞ்சொல் வானப் பதிநகர் தெருவுங்கண்டு ஓடமகிழ்ந்தார்
ஓடும் கங்கை தானம் பண்ணி உத்தம நீறணிந்து

வாடைவீசும் நந்தவனம் மல்லிகை முல்லை மலருங்கூடும்
தென்னை தன்னில் வைத்துக் கும்பிட்டு வாய்புதைத்து
வீடுசுகமான அன்னை மெல்லியர் பாதம் பணிந்தார் (108)

திபிதை

வானவர் வணங்கும் அந்த வன்னமுத் தம்மை பாதம்
ஞானக்கண் காத்த முத்து நன்மையாய் வணங்கும் போது
தேன்மொழி மாரியம்மை தென்பொதில் வாசம் தன்னை
ஆனதோர் மகளைக் கண்டு அணைத்தவள் முத்த மிட்டாள்.(109)

பொதுவசனம்

தேவர்கள் வணங்கும் வன்ன முத்தம்மாள் பாதத்திலே புஷ்பங்களை அர்ச்சனை பண்ணிக் காத்தவராய சுவாமி தெண்டனிட ஆசிர்வாதம் பண்ணி இரண்டு கையினாலும் அணைத்து முத்தமிட்டு ஆரியமாலை சமாச்சாரம் கேட்கிறாள் வன்ன முத்தம்மாள்.

திபிதை

முகமது மலர்ந்து வந்த முத்துவே லவனைப் பார்த்து
செகப்புகழ் மாலைக் கன்னி சிக்கின விதம றிந்து
அகமகிழ் மகனே நல்ல அபரஞ்சீ எங்கே என்ன
சுகமுடன் நான்மாலைத் துரந்திரி உமையும் வந்தாள் (110)

பொதுவசனம்

முகமலர்ந்து வந்த மகனைப் பார்த்து அம்மன் கேட்கிறாள். அந்த ஆரியமாலை எங்கே என்று? கேட்டவுடனே வருகிறாள் என்று காத்தவராயன் சொல்கிறதுக்கு முன்பே பூதங்கள் சுமக்கும் பல்லக்கில் ஏறிக்கொண்டு வந்து அம்மன் முன்பாகப் புலம்புகிறாள் ஆரியமாலை.

ஆரியமாலை சொல் தரு

என்னைக் களவு செய்ய
    இணைந்ததோர் கண்ணனூர் - மாரியம்மா
எப்படியும் உன்சித்தத்துக்கு
    இரங்காதோ - மாரியம்மா
ஆரியதேசம் - அறிவானோ
    உன்மகன் - மாரியம்மா

அவனை அனுப்பி அவமானம்
செய்வித்தாய் என்னைநீ மாரியம்மா
காரியமாகக் கருத்தில்
நினைத்தீரே - மாரியம்மா - என்
கற்பழிய உன்கருணை
புரிந்தாயே மாரியம்மா
ஏழுசுற்றுக் கோட்டை அறைக்குள்
இருந்த என்னை மாரியம்மா
எப்படியும் தன்னமிட்டு மோசஞ்
செய்தான் - மாரியம்மா
ஆழநீர் தன்னில் அமர்த்திக்
கல்லாக்கினான் மாரியம்மா - இப்ப
அன்புடன் என்னை எழுப்பிக்
கொண்டு வந்தான் - மாரியம்மா
ஆயிரந் தோழியை அன்பாய்த்
தோற்று விட்டேன் மாரியம்மா
அந்தணர் வங்கிஷமாய்
வந்தருளும் - மாரியம்மா (111)

கொச்சகக் கலிப்பா

ஆரியப் பூமாலை அன்னமே அஞ்சாதே
காரியத்துக் கேற்றவை முடிக்க லாகாதோ
நாரியரே நானிவேறோ நலமான உன்முத்து
வீரியத்தைப் பேசாதே மெல்லியரைச் சொல்வீரே (112)

மாரியம்மை சொல் வசனம்

வாடியம்மா ஆரியமாலைக் கன்னி உன்னை யாரடி எடுத்து வந்தார்? நான் வேறல்லவே! உங்கள் தோப்பன்மார் எனக்குத் தம்பியும் தமையனுந்தான். மனதிலே வேறே எண்ணாதே உங்கள் தோப்பன்மாரையும் அழைப்பிக்கிறேன். உன்தாயும் அழைப்பிக்கிறேன் பயப்படாதே என்று தேற்றினாள் மாரியம்மாள்.

வெண்பா

அயன்நெடு மாலின்அன் புள்ளஇந்திர ரிஷிகள்
தயவுள்ள ஆரிய மங்கை சந்தரிஷி

நயமுடனே கன்னல்நிகர் மதரூபன் காத்தவன் கல்யாணம்
வரவன்ன முத்தம்மாள் மகிழ்ந்தனள். (113)

காத்தவராயர் திருமணத்திற்கு தேவர்கள் வருகின்ற தரு

ஈசனும் விடையேறி இருபுறமும் கவரிவீச
வாசக் கைலாசர் வந்தார்
மாயன் திருமகள் வந்தாள்
வாசவனும் வானியும் வந்தார்
ஆயிரக்கண் இந்திரன் வந்தார்
பூசையிட சதீதரிஷி பூமிதேவி
அம்மன் வந்தார் கின்னர
திம்புருடர் வந்தார்
கிளிமொழி மாது வந்தார்
பொன்னி யம்மை உடன்ஏழு பூமிபுகழ்
சக்தி வந்தார் கன்னல்மதரதி வந்தார்
காமதேனு ரிஷியோகர் வந்தார்
தென்னாட்டுச் சோமர் வந்தார் - தெலுங்கர்
வங்காளர் கலிங்கர் வந்தார் (114)

பந்தல் அலங்காரத் தரு

இங்கிர பவளக் கால்கள்
இருபுறமும் வாழை நட்டார்
தங்கரேக்கால் பந்தலிட்டார் தாளக்கோர்வை ....
கட்டிப் பளிங்குக் கோர்வைகள் கட்டி
நங்கையர் இந்திரப்போல நகரம் அலங்கரித்தார்
துதிப்புலவோர்கள் பாட அம்புவிழி
மாதராட அகலியூர்வசி நாட
இன்பமுடன் தாளம் போட்டு இச்சையாய்
மாதரார் கொண்டாட
அம்மன் மனமகிழ்ந் திட ஆரியர்
மிகக்கொண் டாட
விசையதுந் துபியடித்தார்
விருதுவாத் தியமடித்தார்
அசையும் தோரணம் பிடிபட்டார்
ஆலங்கன்னியர் எடுத்தார்

காத்தவராய சுவாமிக்கும் கன்னி
    ஆரிய மாலைக்கும்
கோத்திரம் விளங்க வென்று - ரிஷிகள்
    கூப்பிட்டு வேதம் படித்தார்
மயிர்ச்சீவி கொண்டை இட்டு
    ஏற்ற அணி பூட்டினார்
இந்திரக்கோல் ஆடைகட்டி நாற்றிசை
    நாடிச் சடங்கில் வலம்வந்தார்
சத்தரிஷி ஓமம்செய்ய தையல்
    அய்யன் முன்பாக
நத்தையர் நடனமாடக் காத்தசாமி
    மாங்கல்யம் தொட்டார்
பார்த்தவர்கள் கொண்டாட
    பத்தினி கழுத்தைக் காட்ட
காத்தவராய சுவாமி கையால்
    மாங்கல்யம் கட்டினார்
ஈசன்உமை சேஷயிட
    யிருந்தவர்கள் கொண்டாட
ஆசையுடன் மால்லட்சுமி
    அன்புடனே சேஷயிட
வாசன் சரஸ்வதியும்
    மங்களமாய் சேஷயிட
ஓசைபட்ட ணத்தவ ரெல்லாம்
    முகந்து சேஷையிட
அன்னரேனும் சேஷையிட
    அரிவையர்கள் சேஷையிட
வன்னமுத்து சேஷயிட
    வருஞ் சோமாசி சேஷயிட (115)

விருத்தப்பா

முக்திபெறும் முகூர்த்தம் நிறைவேற்றி தேவர் முதல்
    வன்மாயன் கலன்னகழ்கீழ்
ஆத்திகளும் பரிகள் குடைபுடைகள் சூழ
    அதிர்ந்திடும் துந்தமியோசை யதுமுழங்க
வெற்றிபெறுஞ் சிவிகையின்மேல் காத்த முத்து
    மெல்லியனும் ஆரியப் பெண்ணோட

தீர்த்தாகத் தையலர்கள் ஓசையுடன்
நடனமாடக் காத்தசாமி தெருவீதியினில் பவனிவந்தார் (116)

பவனித் தரு

தங்கச் சிவிகையேறி தையல் நடனமாடத்
தமியாய்க் கோலம் வாரவரார் - சொல்லடி அன்னே
மங்கை வன்னமுத்தம்மை மைந்தன்காத்த
வராயன் வார கோலங்களிது மின்னே
வட்டக் குடைபிடித்து வளர்தெரு வீதியினில்
வாரவர் யார்? - சொல்லடி - அன்னே
இஷ்ட்ட பாக்கியமருள் வன்னமுத் தம்மை யருள்
எழில்காத்த முத்தடி மின்னே
இடிகொம்பு வானங்கள் இலகுமத்தானப் பொலிவுடன்
இதோ வாரவனார் யாரடி - அன்னே
பத்தினியாள் வருவன்ன முத்தம்மை
அருள்பாலன் காத்தவராயன் மின்னே
காள விளக்கெரிய ஆலவட்டங்கள் வீச
சொகுசாய் வாரவர்யார்? - சொல்லடி அன்னே
பாலமொழி பேசுகின்ற வன்னமுத் தம்மையருள் பாலன்
பாலன் காத்தவராயன் மின்னே
மகுட தோரணமின்ன மாதர் நடனமாட
வாரவர் யாரடி - சொல்லன்னே
அகமகிழ் வானோர் வன்ன
முத்தம்மையருள் அதிபன் .... (117)

சோபனம்

தேவாதி தேவனுக்குந்
தேவேந்திர ராணியர்க்கும்
கோவான காத்தமுத்துக்
குயில்மொழி மாலையர்க்கும் (சோபனமே)
வானவர்நல் லூரில்வளர்
வன்னமுத் தம்மையருள்
ஞானக்கண் காத்தவற்கும்
நங்கை மாலையர்க்கும் (சோபனமே) (118)

தேவிசகாயம்

சுக்கில வருடம் மாசிமாதம் 27 குருவாரம்
திருதியை 25 ரேவதி 14 பிராமியம் 44
கரசை 26 இந்த சுபதினத்தில் ....
லிருக்கும் பரசுராம ஆசாரி காத்தவராய
நாடகம் எழுதி நிறைவேறியது
வீரபாண் டியிலிருக்கும் வயித்தியநாதநயினார்
கையெழுத்து அது அறியவும்.

இயல் நான்கு

முடிவு

முடிவுரை

'காத்தவராயன்' என்னும் பெயருள்ள ஒரு சிறு தெய்வத்தின் கதையை நாடகமாகச் செய்து மக்கள் முன் நாடகமேடையில் நடித்துக் காட்டப்பெற்ற மேடை நாடக நூலாகவே இதனைக் கருதலாம். தெருக்கூத்துக்களிலும், உடுக்கடிப் பாட்டுகளிலும் காத்தவராயன் கதை பாடப்பட்டு மக்களால் மிகவும் ஆர்வத்துடன் கேட்கப்பட்டு வந்ததாகவும் தெரிகின்றது.

காளியம்மன், மாரியம்மன் கோவில் திருவிழாக்களில் காத்தவராயன் கதை முக்கியமாகப் பாடப்பட்டு வருகிறது. மலையாள தேசத்திலும் காத்தவராயனைப் பற்றிய பல கதைகள் பேசப்பட்டு வருகின்றன.

1. 'காத்தவராயன் கதை' என்பது நாட்டுப்புற மக்களிடம் வழங்கிய கதை.
2. விடுதலை இயக்கத்தின் புரட்சி காலமான கி.பி. 1930ஆம் ஆண்டு இச்சுவடி எழுதப்பட்டுள்ளது.
3. சக்தியின் பெருமையை நூல் முழுவதும் கூறிச் செல்வதால் ஆசிரியரின் இறையுணர்வு புரிகிறது.
4. பெண்களைச் சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக மதிக்க வேண்டும் என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டிருக்கிறது.
5. தீண்டாமை என்னும் பேயை விரட்டுவதில் உள்ள தீவிர நோக்கம் புலப்படுத்தப்பட்டுள்ளது.
6. கட்டபொம்மனைப் போன்று காத்தவராயனும் ஒரு சிறந்த வீரனாகக் கருதப்பட்டு, தன் சக்தியைக் கொண்டு சக்தியை அடைந்ததாகத் தெரிகிறது.
7. ஆசிரியரின் மொழிநடை அமைப்பிலிருந்து பழைய இராமநாதபுரம் அல்லது திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சுவடி என்பது தெரியவருகிறது.
8. இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளைப் பெருமளவில் இந்நாடக நூலில் காண முடிகிறது.
9. இறைப் பெயரின் மூலம் நாடகம் உருவாக்கப் பெற்றதென்றாலும் விடுதலைப் புரட்சிக்குரிய வீர

உணர்வினைப் புலப்படுத்துவதாக இந் நாடகம் அமைந்துள்ளது.

10. சுதந்திர மடைந்த மனிதனின் சிந்தைக்கும் கண்ணுக்கும் இன்பமூட்டும் நாடகமாகவும் அமைந்திருக்கின்றது.

சொற்பொருள் அகராதி

1. அகம் - வீடு
2. அங்குசம் - ஆயுதம்
3. அடஞ்செய்துகொண்டு - தூக்கிக் கொண்டு
4. அட்டி - தடை
5. அணங்கு - தெய்வத்தன்மை பொருந்திய பெண்
6. அண்டை - அருகிடம்
7. அண்ணாந்தாள் - ஒருதண்டனை வகை
8. அத்திகள் - யானைகள்
9. அந்தரி - துர்க்கை
10. அபரஞ்சி - புடம்வைத்த பொன்னைப் போன்று விளங்குகின்ற பெண்
11. அபராதம் - தண்டம்
12. அயன் - நான்முகன்
13. அரண் - பரமேஸ்வரன்
14. அரிதேசி - உள்ளூரில் வாழ்பவன்
15. அரை - இடை
16. அனாயாசம் - வருத்தமின்மை
17. ஆகமவேதம் - தருமநூல்
18. ஆங்காரம் - அகங்காரம்
19. ஆசனம் - இருக்கை
20. ஆட்டம் பண்ணுதல் - துன்பப்படுத்தல்
21. ஆலம் - மஞ்சள் சுண்ணாம்பு கலந்த நீர்
22. ஆலவட்டம் - விசிறி
23. ஆரணிச்சவுக்கு - மாகாளியின் கையிலுள்ள சவுக்கு. சாட்டை
24. ஆஸ்தானக்காரன் - அரசனபக்காரன்
25. இதம் - இனியசொல். அன்பு
26. உச்சிதமான - தகுதியான
27. உப்பரிகை - மேல்வீடு
28. உம்பர்நாடு - தேவர்கள் உறையும் நாடு
29. எமராசன்தரவன் - எமதூதன்
30. ஏகாலி - வண்ணான்
31. ஏறுமாறாய் - தாறுமாறாய்
32. ஒருசாமம் - ஏழரை நாழிகை
33. ஓமல் - ஊர்ப் பேச்சு. குறும்புப் பேச்சு
34. ஓமம் - வேள்வி

35. ஓலை - காதணி
36. கபாய் - நிலையங்கி
37. கச்சு - அரைப்பட்டிகை
38. கடகக்கை - கூத்தின் ஒருவகைக் கை
39. கடகம் - கைவளை
40. கடுக்கன் - ஆடவர் காதணி
41. கணிகை - பொதுமகள்
42. கணையல் - நகைத்தல்
43. கண்ணி - வலை
44. கரம் - கை
45. கலம் - உண்கலம்
46. கவரி - சாமரை
47. கவை - காரியம்
48. கழல் - திருவடி, பாதம், சிலம்பு
49. கழாயர் - கூத்தாடிகள்
50. கன்னல் - கரும்பு
51. கன்னமிட்டு - களவு செய்து
52. கா - சோலை
53. காசினியில் - நிலத்தில்
54. காதவழி - பத்து மைல் தொலைவு
55. கால்வழி - வழிவழி
56. கால்விளக்கு - திருமண நிகழ்ச்சியில் எடுத்துச் செல்லப்படும் விளக்கு
57. கிரி - மலை
58. கிருபை - கருணை
59. கின்னரம் - யாழ்வகை
60. கின்னரி - வீணை
61. குச்சலிப்பெண் - அழகுள்ள அணிகலன்களை அணிந்த பெண்
62. குதா - கழுதை
63. கூடாரம் - படாம்வீடு
64. கெதிமக்கமென்ன - ஆயுள் உள்ளவரை
65. கேணி - கிணறு
66. கைவசம் - தன்வயப்படுத்துதல்
67. கொலு - திருவோலக்கம்
68. கோசரம் - பூந்தாது

69. கோட்டான் - கூகை
70. கோணங்கி - உடல்கோணி
71. கோனாய் - ஓணாய்
72. கோத்திரம் - குலப்பெயர்
73. கோரையாற்றங்கரை - புல்நிறைந்த ஆற்றங்கரை
74. சகி - தோழி
75. சங்கை - அச்சம். ஐயம்
76. சதிர் - நாட்டிய அரங்கு
77. சந்ததம் - எப்பொழுதும்
78. சமாச்சாரம் - செய்தி
79. சல்லடம் - குறுங்காற் சட்டை
80. சல்லிக்காரன் - போக்கிரி
81. சரப்பணி - ஒருவகை அணிகலன்
82. சரப்பளி - வயிரக் கழுத்தணி
83. சழத்த - அரியாமையை நீக்கிய
84. சாகை - தங்குமிடம்
85. சாமளி - தர்க்கை
86. சிந்தாக்கு - கழுத்தணி
89. சிவிகை - பல்லக்கு
90. சுரபி - வெண்பசு
91. சூலம் - ஒருவகை ஆயுதம்
92. சூரி - கத்தி
93. சேஷையிட - வாழ்த்திட
94. சொகுசாய் - அழகாய்
95. சோபனம் - சுபம்
96. தண்டு - கதை. கோல்
97. தண்டிகை - பல்லக்கு
98. தப்ப - துவைக்க
99. தபசு - தவம்
100. தம்பூரா - ஒருவகை இசைக்கருவி
101. தாமசம் - தாமதம்
102. தாவடம் - கழுத்தணி மணிமாலை
103. திரவியம் - பொன். பொருள்
104. துந்துமி - பேரிகை
105. தூண்டி - அட்டமங்கலத்தொன்று. இராசசின்னத்தொன்று
குழ்கழி இருக்கை

106. தெண்டநிட - வணக்கமிட
107. தோதகம் - வருத்தம்
108. நவரி - யாழ்
109. நாத்து - நனைந்து
110. நித்திலை - உறக்கம்
111. பணி - அணிகலன்
112. பரதேசி - வெளியூரில் வாழ்பவன்
113. பரிமளகந்தம் - மிகுந்த மணமுடைய வாசனைத் திரவியம்
114. பருவதம் - மலை
115. பாதகாரகம் - தீயசெயல்
116. பாதக்குறடு - மிதியடி
117. பாரிக்கொண்டை - பருத்திக் கொண்டை
118. பிதா - தந்தை
119. மா - காடு
120. வங்கு - குகை
121. விருத்தாந்தம் - செய்தி
122. விருதாய்பியமான - விழுத்தன்மை கொண்ட
123. வலம்பன் - சொன்னவர்
124. வீடு சொல்லி - கீழான வார்த்தைகளைச் சொல்லி.

சொல்லகராதி

1. அகந்தை - 67
2. அகம் - 27
3. அகலி - 71
4. அக்காள் - 33
5. அக்கினி - 33
6. அங்கலம் - 97
7. அங்குசம் - 5
8. அட்டி - 10
9. அணங்கு - 39, 93
10. அண்ணா - 5, 36
11. அண்ணன் - 21
12. அண்டை - 43, 47
13. அண்ணாந்தாள் - 60
14. அண்ணமார் - 103
15. அதிபன் - 117
16. அதிரூபவல்லி - 46
17. அத்தி - 21
18. அந்தணர் - 116
19. அந்தனர் - 5
20. அந்தணன் - 85, 86
21. அந்தரி - 10
22. அப்பனே - 40
23. அபரஞ்சி - 110
24. அபராதம் - 10
25. அமட்டுகிறாய் - 47
26. அமுதவாக்கு - 5
27. அம்பு - 26
28. அம்பு விழி - 19
29. அம்பிகை - 3
30. அம்மன் - 26
31. அயன் - 114
32. அய்யர் - 53
33. அய்யமார் -53
34. அய்யன் - 5
35. அரங்கம் - 24
36. அரசி - 5
37. அரண் - 5
38. அரண்மனை - 7
39. அரிதேசி - 110
40. அரிவையர் - 10
41. அரை - 9
42. அர்ச்சனை - 109
43. அர்த்தநாரீசன் - 5
44. அவதரி - 5
45. அவமானம் - 111
46. அறிக்கை - 7
47. அனாயாசம் - 90
48. அனேகம் - 68, 90
49. அன்னம் - 15
50. அன்னவல்லி - 44
51. அன்னை - 5
52. ஆகமவேதம் - 83
53. ஆகாலி - 47
54. ஆக்கினை - 78
55. ஆங்காரம் - 46
56. ஆங்காரி - 57
57. ஆசனம் - 14, 33
58. ஆசிர்வாதம் - 22
59. ஆட்டம் - 22
60. ஆண்டி - 67
61. ஆண்பிள்ளை - 20
62. ஆண்மை - 46
63. ஆணவம் - 61
64. ஆபரணங்கள் - 97
65. ஆயிரக்கண் இந்திரன் - 114
66. ஆயிரம் - 15
67. ஆரணன் - 5
68. ஆரணிச் சவுக்கு - 58
69. ஆரியதேசம் - 15
70. ஆரியப் பூமாலை - 70

71. ஆரியப்பெண் - 18
72. ஆரியமாலை - 5
73. ஆலங்கன்னியர் - 115
74. ஆலவட்டம் - 117
75. ஆழி - 5
76. ஆனை - 75
77. ஆஸ்தானக்காரன் - 12
78. இங்கிதம் - 45, 107
79. இச்சை - 111
80. இடைச்சி - 21
81. இத்தசுத - 8
82. இந்திரகாளி - 39
83. இந்திரபதி - 94
84. இந்திரலோகம் - 11
85. இந்திரன் - 5, 117
86. இரவும் பகலும் - 21
87. இளநீர் - 90
88. இறுமாந்து - 5
89. இன்னிலம் - 7
90. இஸ்டம் - 21, 57
91. ஈசனுமை - 5
92. ஈசன் - 5
93. ஈஸ்வரி - 5
94. ஈஸ்வரன் - 5
95. உகந்தாயி - 81, 15
96. உக்கிரமாகாளி - 40
97. உச்சிதமான - 14
98. உடன்பிறப்பு - 72
99. உத்தமி - 31
100. உப்பரிகை - 71, 14
101. உம்பர் நாடு - 12
102. ஊமை - 95
103. ஊர்வசி - 71
104. எக்கம் - 69
105. எக்கமா - 69
106. என்பசை - 5
107. எமராசன் - 5, 9
108. எழில் - 3
109. ஏகாலி - 39, 45
110. ஏழரை - 15
111. ஏழுபிரமாணம் - 102
112. குறுமாறாய் - 55
113. ஐங்கரன் - 5
114. ஓமகுண்டலம் - 5
115. ஓமம் - 115
116. ஓமல் - 37
117. ஓடை - 36
118. கங்கை - 5
119. கங்கைமுத்து - 5
120. கச்சு - 32
121. கடகம் - 32
122. கடையம் - 29
123. கடுக்கன் - 86
124. கடைவீதிப்பட்டணம் - 5
125. கட்டியக்காரன் - 6
126. கணபதி - 5
127. கணிகை - 31
128. கணைய - 17
129. கண்ணனூர் - 5, 111
130. கதிரோன் - 78
131. கந்தி - 39
132. கத்துசொல்லிகள் - 7
133. கந்தன் - 33
134. கபாய் - 6
135. கப்பல் - 81
136. கபலம் - 3
138. கம்பீரன் - 5
139. கம்பையாறு - 5
140. கம்பளி - 99
141. கயல்விழி - 35
142. கயறு - 5
143. கரம் - 5

144. கரும்பு - 39
145. கலம் - 33
146. கலிங்கர் - 114
147. கலைமகள் - 71
148. கல்யாணம் - 5
149. கலிவாணர் - 10
150. கவை - 40
151. கவ்வி - 32
152. களரி - 42
153. களவு - 85
154. கழாதர் - 5
155. கழல் - 13
156. கழிக்கோல் - 100
157. கறுத்தன் - 5
158. கறுப்பர் - 5, 99
159. கறுப்பாயி - 15
160. கறுப்பி - 5
161. கற்கண்டு - 16
162. கன்னங்கள் - 39
163. கன்னம் - 13
164. கன்னல் - 13
165. கன்னி - 31
166. கன்னியான் - 5
167. கன்னிமார் - 9
168. காங்கையன் - 9
169. காசி - 64
170. காதவழி - 33
171. காதலன் - 5
172. காத்தமுத்து - 2, 6, 12
173. காத்த பண்டாரம் - 3, 38
174. காத்தவராய சுவாமி - 15, 16
175. காத்தவராயன் - 22
176. காத்த செட்டி - 81, 85
177. காத்தசேவகன் - 60
178. காத்தவசந்தன் - 103
179. காமதேனு - 114
180. காமரதி - 71
181. காமவேள் - 7
182. காமன் - 5
183. காராளர் - 64
184. காரிகை - 73, 86
185. கார்குழல் - 4
186. காவி - 63
187. காவேரி - 5
188. காவேரிப்பட்டணம் - 5
189. காளி - 8, 40, 42
190. கானகம் - 5
191. கிம்புருடர் - 114
192. கிரி - 99
193. கிருபை - 99
194. கிலுக்குத்தடி - 100
195. கிளி - 5
196. கிளி மூக்குச் சூரி - 9
197. கின்னரம் - 26
198. கின்னலி - 30
199. கீதை - 13
200. கீர்த்தை... - 11
201. குகன் - 72
202. குச்சலிப்பெண் - 21
203. குண்டலம் - 9
204. குனிக்குழல் - 75
205. குதா - 5
206. குதிரை - 75
207. குபேரன் - 69
208. குமரவடி - 64
209. குமரிநாச்சிசிகப்பி - 86
210. குமாரசாமி - 35
211. குமாரத்தி - 15
212. குயில் - 23
213. குருநாதா - 20
214. குல்லா - 6
215. குல்லாப் பரங்கிகள் - 86

216. குழக்கட்டை - 68
217. குறவஞ்சி - 74
218. குறவர் - 71
219. குறி - 5
220. கூடாரம் - 75
221. கூச்சல் - 7
222. கூத்தாடிகள் - 7
223. செவித்தல் - 97
224. கேணி - 63
225. கைலாசர் - 115
226. கைவசப்படுத்தல் - 15
227. கொல்லிமலை - 4
228. கொலு - 33
229. கொள்ளிடம் - 33
230. கொன்னியக்கறுப்பர் - 102
231. கோசரம் - 56
232. கோத்திரம் - 38, 90
233. கோயில் - 36
234. கோட்டான் - 42
235. கோட்டை - 5, 16
236. கோணங்கி - 7
237. கோபுரம் - 24
238. கோரையாற்றங்கரை - 35
239. கோவிந்தன் - 75
240. கௌரி - 5
241. கௌரியம்மன் - 5
242. கௌரியாயி - 2
243. சக்கரம் - 10
244. சக்தி - 3, 114
245. சங்கரன் - 5
246. சங்கரி - 5
247. சங்கை - 103
248. சடையார் - 5
249. சண்டி - 5
250. சண்டை - 43, 49
251. சத்தி அங்கலம் - 97
252. சத்தமாதாக்கள் - 5
253. சத்தம் - 5
254. சந்ததம் - 2, 97
255. சந்திரபுஷ்பநதி -
256. சந்திர காவிப்பாகை -
257. சந்திர புஷ்ப சன்னதி - 5
258. சந்திரவதனம் - 72
259. சந்திரன் - 89
260. சந்தோசம் - 27
261. சபாஸ் - 7
262. சபை - .5
263. சபர் - 5
264. சமாச்சாரம் - 7
265. சரக்கு - 86
266. சரஸ்வதி - 5
267. சரப்பளி - 9
268. சரிகை - 9
269. சலவை - 7, 9, 43
270. சலுகை - 47
271. சல்லிக்காரன் - 7
272. சல்லிடம் - 9
273. சாகை - 72
274. சாட்டி - 61
275. சாணம் - 39
276. சாதிக்காய்ப்பூ - 89
277. சாமம் - 64
278. சாமளி - 39
279. சாமுண்டி - 5
280. சாவல் - 5
281. சாஸ்திரம் - 65
282. சிக்குவலப் போர்வை - 10
283. சிகை - 66
284. சிங்கான் - 7
285. சித்தம் - 33
286. சித்தாடை - 16
287. சித்தாண்டி - 63

288. சிந்தை - 2
289. சிரஆக்கினை - 16
290. சிலம்பு - 7
291. சிலை - 79
292. சிவன் - 51
293. சிவனாசெட்டி - 90
294. சீவிகை - 82, 108
295. சீக்கிரமாய் - 10
296. சீரங்கம் - 18
297. சீனாசுரக்குடக்கை - 108
298. சுரபி - 98
299. சுரர்கோன் - 5
300. சுருக்காய் - 100
301. சுரூபம் - 7
302. சூரியன் - 9
303. செகம் - 110
304. செங்கமலவல்லி - 46
305. செஞ்சடை - 5
306. செட்டி - 84
307. செட்டியார் - 84
308. செண்பகத்தோட்டம் - 83
309. செந்தமிழ் - 2
310. செம்புகுமாரன்வனம் - 15
311. செயக்கம்பம் - 7
312. செல்வியாள் - 46
313. செவுடு - 95
314. சென்னி - 2
315. சேதி - 7
316. சேவகந்திராணி - 77
317. சேவகனார் - 61
318. சேனாபதி - 46
319. சொக்குப் பொடி - 66
320. சொகுசு - 58
321. சோபனம் - 118
322. சோமர் - 114
323. சோமாசியய்யர் - 10, 34, 79
324. சோமாசிப்பட்டர் - 5
325. சோலைகள் - 77
326. தக்கன் - 5
327. தங்கை - 5
328. தங்கப்பணி - 45
329. தங்கப்பிரம்பு - 9
330. தங்கரேக்கு - 115
331. தண்டிகை - 73
332. தண்டு - 40
333. தந்தையர் - 115
334. தந்தை - 3
335. தபசு - 5
336. தமையன் - 112
337. தம்பி - 112
338. தம்பிரான் - 65
339. தம்பூரை - 45
340. தருமாபுரிப்பட்டணம் - 90
341. தலைகாணி - 90
342. தளிகள் - 21
343. தாசி - 24
344. தாட்டோட்டம் - 68
345. தாதி - 24
346. தாதிமார் - 5
347. தாதை - 72
348. தாமிசம் - 7
349. தாயார் - 72
350. தாவடம் - 11
351. தாளிதம் - 72
352. திங்கள் - 72
353. திசைமுகன் - 7
354. திரவியம் - 62
355. திருடா - 47
356. திருத்தங்கைமருகன் - 3
357. திருநாம நல்லூர் - 64
358. திருநாமம் - 57
359. திருமகள் - 114

360. திருமுகம் - 5, 107
361. திருவாலங்காடு - 64
362. தினகரன் - 23
363. திரன் -5
364. துப்பாக்கி - 75
365. துந்துபி - 115
366. துய்யன் - 106
367. துயில் - 37
368. துரணம் - 49
369. துரந்தரி - 12
370. துலங்கிடும் - 87
371. தூண்டில் - 5
372. தெண்டநிட - 18
373. தெய்வக்குறத்தி - 5
374. தெரு - 108
375. தெலுங்கர் - 114
376. தென்னவநாடு - 3
377. தேசமாரி - 18
378. தேர் - 24
379. தேவலோகம் - 12
380. தேவாதிதேவன் - 113
381. தேவி - 5
382. தேவிசனம் - 22
383. தேவேந்திரராணி - 118
384. தொட்டியச்சின்னான் - 5
385. தோப்பனார் - 90
386. தோதகம் - 90
387. தோரணம் - 115
388. நங்கை - 118
389. நதிகள் - 77
390. நந்தவனம் - 30
391. நவரி - 116
392. நாசமுத்து - 107
393. நாச்சி - 86
394. நாடகசாலை - 10
395. நாவல் - 89
396. நாத்து - 5
397. நாமகள் - 3
398. நாயகம் - 7
399. நாரணன் - 3
400. நாரதர் - 11, 12, 13
401. நாரியர் - 11
402. நாழிகை - 78
403. நானிலம் - 3, 12
404. நிசம் - 93
405. நித்திரை - 24
406. நெடுமால் - 5
407. நேமமாதாக்கள் - 5
408. பக்தர் - 5
409. பக்தர்கள் - 63
410. பகவதி - 40
411. பங்கயம் - 20
412. பச்சரிசி - 97
413. பஞ்சனை - 2
414. படகுக்குச்சு -9
415. பட்சணம் - 97
416. பட்டி - 88
417. பண்டாரம் - 5
418. பணம் - 60
419. பணிமனை - 9
420. பத்திரகாளி - 39
421. பத்துலட்சம் - 45
422. பந்தல் - 115
423. பரமேஸ்வரி - 73
424. பரதேசி - 10
425. பராசக்தி - 22
426. பரிகள் - 116
427. பரிகாசம் - 97
428. பரிமளகந்தம் - 57
429. பரிமளன் - 26
430. பல்லக்கு - 82
431. பவளக்கால்கள் - 115

432. பளிங்கு - 115
433. பாகை - 58
434. பாதகா - 33
435. பாதகி - 20
436. பாதக்குறடு - 9
437. பாதம் - 2
438. பாதகாரம் - 57
439. பாப்பான் - 81
440. பாம்பலஜோகி - 97
441. பாம்பாட்டி - 91
442. பாம்பு - 20
443. பாரிக்கொட்டை - 7
444. பாரியதீலி - 97
445. பார்வதி - 5
446. பாலகன் - 5
447. பாலன் - 38
448. பாவலர் - 3
449. பாவி - 33
450. பாவுநூல் - 90
451. பாவை - 16
452. பாறை - 43
453. பிடாரன் - 5
454. பிதாக்கள் - 5
455. பிரம்பு - 7
456. பிரம்மா - 42
457. பிராமணர் - 81
458. பிலங்கள் - 52
459. புஷ்பங்கள் - 109
460. புடவை - 42
461. புடைகுடைகள் - 116
462. புதல்வன் - 5
463. புத்திரன் - 5
464. புரவி - 108
465. புலவோர் - 2, 6
466. புனிதன் - 5
467. பூங்கா - 5
468. பூங்காவனம் - 30
469. பூமகள் - 71
470. பூமிதேவி - 114
471. பூனை - 5
472. பேழை - 100
473. பொதிக்கா - 5
474. பொன்மணி - 5
475. பொன்நூறு - 70
476. மகள் - 5
477. மகரிஷி - 5
478. மகாஸ்தலம் - 24
479. மகாராசன் - 66
480. மகாலட்சுமி - 74
481. மகிமை - 65
482. மகுடதோரணம் - 117
483. மகுடி - 95
484. மகுமச்சு - 58
485. மங்கை - 58
486. மங்கையார் - 5
487. மதில் - 16
488. மதரூபன் - 80
489. மதன் - 7
490. மத்தளம் - 7
491. மந்திரக்காரன் - 98
492. மந்திரவாள் - 22
493. மந்திரி - 3
494. மருகன் - 58
495. மருவல்லார் - 7
496. மருவுநாடு - 7
497. மல்லப்பெண்கள் - 75
498. மல்லிகை - 66
499. மலை - 23
500. மலையாள ஜோகி - 7
501. மறவர் - 2
502. மா - 5
503. மாங்கல்யம் - 115

504. மாணிக்கச்செட்டி - 15
505. மாதவர் - 52
506. மாத்திரைக்கோல் - 66
507. மாமுகன் - 3
508. மாயவன் - 20
509. மாயன் - 50
510. மாரன் - 5
511. மாரிகுமாரன் - 66
512. மாரியம்மை - 5
513. மால் - 5
514. மால்மருகன் - 23
515. மால்லட்சுமி - 115
516. மான் - 5
517. மீசை - 7
518. முக்கட்சந்திரமுகன் - 83
519. முகூர்த்தம் - 100
520. முட்டாள் - 13
521. முப்புரிநூல் - 52
522. முதலைவங்கி - 5
523. முருகன் - 5, 23
524. முருக்கம்பூ - 104
525. முல்லை - 66
526. முனியீஸ்வரர் - 5
527. முனிவர்கள் - 5
528. மூக்குத்தி - 28
529. மூடா - 13
530. மூட்டை - 37
531. மூர்ச்சை - 17
532. மூவுலகம் - 5
533. மெத்தை - 27
534. யாகம் - 5
535. யாளிவாகனம் - 38
536. லச்சை - 53
437. ரட்சிக்க - 107
538. ரத்தினம் - 33
539. ரம்பை -
540. ரவுக்கை - 45
541. ரா - 30
542. ராசகுமாரன் - 27
543. ராசராசாக்கள் - 7
544. ராமன் - 7
545. ராவுத்தன் - 39
546. ராணுவம் - 75
547. ரிஷிகோத்திரம் - 90
548. ரொக்கம் - 62
549. வங்கனச்சின்னான் - 23
550. வங்காளர் - 114
551. வஞ்சியாள் - 40
552. வஸ்திரம் - 37
553. வடிவேலன் - 104
554. வண்ணான் - 47
555. வண்டி - 58
556. வணிகர் - 5
557. வதனசேருவை - 74
558. வர்த்தகன் - 89
559. வலம்பன் - 52
560. வல்லவர் - 22
561. வல்லிடும்பாய் - 7
562. வளை - 30
563. வளவனூர் - 64
564. வன்னமுத்தம்மாள் - 7
565. வன்னமுத்து - 1
566. வாசவன் 115
567. வாணி - 114
568. வாலகுருவன் - 5
569. வாள் - 5
570. வாழை - 115
571. வானப்பதி - 3
572. வானவநல்லூர் - 5
573. வானவர் - 5
574. வானூர் - 7
575. விக்கிரமாக்கள் - 5

576. விசேடங்கள் - 54
577. விசையதுந்துபி - 119
578. விண்ணிலத்தோர் - 23
579. விபூதி - 11
580. வியாபாரம் - 89
581. விருத்தாந்தம் - 81
582. வில் - 16
583. விலைக்கிரையம் - 87
584. விலைமாது - 25
585. விவாகம் - 106
586. வீணை - 13
587. வீதி - 86
588. வீரபத்திரன் - 5
589. வெகுமதி - 97
590. வெகுமானம் - 96
591. வெகுரூபசவுந்தரி - 15
592. வெடிகள் - 75
593. வெற்றிலை - 28
594. வெண்ணீர் - 30
595. வேசி - 55
596. வேட்டி - 57
597. வேடிக்கை - 7
598. வேதம் - 5
599. வேதியர் - 5
600. வேந்திமாளிகை - 86
601. வேம்பு - 20
602. வேலவன் - 39
603. வேல்விழி - 15
604. வேள்வி - 5

துணைநூற் பட்டியல்

1. அகநானூறு, பதிப்பாசிரியர் குழு, நியூ செஞ்சுரி புக்அவுஸ், சென்னை, 1957.

2. அபிதானசிந்தாமணி, ஆ.சிங்காரவேலு முதலியார், ஏசியல் எடுகேஷனல் சர்வீஸஸ், புதுதில்லி, 1981.

3. ஆங்கில - தமிழ் அகராதி, ஏ.சி. செட்டியார், சென்னைப் பல்கலைக் கழகம்.

4. இந்திய மேலைநாட்டு நாடக மேடை நிலைகள், ஆண்டி, சென்னைப் பல்கலைக் கழகம், 1963.

5. இலக்கியச் சிந்தனைகள், வையாபுரிப்பிள்ளை.

6. ஏலாதி, சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

7. கம்பராமாயணம், உத்தரகாண்டம், ஒட்டக்கூத்தர் (கோபாலகிருஷ்ணபிள்ளை - பதிப்பாசிரியர்), 1973., அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

8. கலைக்களஞ்சியம், தொகுதி - 3, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1956

9. கலைக்களஞ்சியம், தொகுதி - 6, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1956

10. காத்தவராயன் சண்டை என்னும் காத்தமுத்து நாடகம், சாமிக்கண்ணுக்கவுண்டர் இரத்தின நாயக்கர் சன்ஸ், சென்னை, 1975.

11. காத்தவராய சுவாமி கதை, புகழேந்திப்புலவர், ஆர்.ஜி. (பதி), சென்னை, 1974.

12. குசலவ சுவாமி கதை, இரா. வசுமதி, சுவடியியல் பட்டய ஆய்வேடு, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1988.

13. சங்க இலக்கியத்தில் உவமைகள், ரா. சீனிவாசன், அணியகம், சென்னை, 1973.

14. சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை.

15. சுவடியியல் - ஓர் ஆய்வு (ஆய்வேடு). டாக்டர் பூ. சுப்பிரமணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

16. தண்டியலங்காரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1978.

17. தமிழ் நாடகத் தோற்றமும் வளர்ச்சியும். ஏ.என். பெருமாள், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 1977.

18. தமிழ் நாடகம் - ஓர் ஆய்வு, ஏ.என். பெருமாள், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 1979.

19. தமிழ் நாடு வரலாறு, கு.சா. கிருஷ்ணமூர்த்தி. வானதி பதிப்பகம், சென்னை, 1979.

20. தமிழா பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், க. காந்தி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984.

21. தமிழகத்தில் தெருக்கூத்து, டாக்டர் அறிவுநம்பி, மதுரை, 1986.

22. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணம் - 111, சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1986.

23. தோட்டுக்காரியம்மன் கதை. அலமேலு. சுவடியியல் பட்டயத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1988.

24. நன்னூல், பவணந்தியார், . சிவஞானமுனிவர், விருத்தியுரை, சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1973.

25. நாடகக் கலை. தி.க. சண்முகம், மீனாட்சிகலா நிலைய வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1967.

26. நாஞ்சில் நாட்டில் நாடகம், டாக்டர் நீலகண்டபிள்ளை - ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1987.

27. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்கினியர் உரையும், உ.வே. சாமிநாதய்யர் (பதி), சென்னை, 1974.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

வெள்ளிவிழா ஆண்டு வெளியீடுகள்

1.	Mysticism of love in Saiva Thirumurais	50.00
2.	ஆய்வுச் சிக்கல்களும் தீர்வுகளும்	85.00
3.	தமிழர் காசு இயல்	45.00
4.	திருமுறை இலக்கியம்	50.00
5.	அழகியல் சிந்தனைகள்	30.00
6.	இலக்கியத்தின் நோக்கமும் பயனும் - தொகுதி 1	65.00
7.	இலக்கியத்தின் நோக்கமும் பயனும் - தொகுதி 2	60.00
8.	சென்னை - 1639க்கு முன் பின்	35.00
9.	பெ.நா. அப்புசாமியின் அறிவியல் கட்டுரைகள்	75.00
10.	Collected Papers of Thaninayagam Adigal	100.00
11.	Silver Jubilee Special Lectures	60.00
12.	முத்தாரம்மன் கதை	85.00
13.	சந்திரபதன் கதை	40.00
14.	கன்னிவாடி நரசிம்ம நாயக்கன் வளமடல்	20.00
15.	கருணையம்மன் அந்தாதி	22.00
16.	ஒப்பிலக்கியம் - கொள்கைகளும் செயல்முறைகளும்	15.00
17.	இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள்	30.00
18.	Work Book - Written Tamil	50.00
19.	திருக்கோயில்களில் தொழில் - சமுதாய உறவுகள்	25.00
20.	விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள்	30.00
21.	தமிழ்க் காட்சி நெறியியல்	46.00
22.	கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சுவடிகள் அட்டவணை	85.00
23.	அமிர்த மதன கூத்து நாடகம்	90.00
24.	மூலிகைக் கற்பங்கள்	80.00
25.	தொல்காப்பியம் புறத்திணையியல் - பகுதி-1	50.00
26.	தொல்காப்பியம் புறத்திணையியல் - பகுதி-2	65.00
27.	சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்	80.00
28.	சித்த மருத்துவ மணிகள்	75.00
29.	காத்தவராய நாடகம்	30.00